திருநெல்வேலி

பத்தாண்டுச் சாதனைகள்

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUL 1962
MADRAS

தமிழ்நாடு அரசாங்க
செய்தித்துறை வெளியீடு

முதற் பதிப்பு: நவம்பர், 1961

விலை: 25 காசுகள்

106406

~~2246221~~

[illegible]

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை-5

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUL 1962
MADRAS



முன்னுரை

மக்கள் வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்பதற்காக ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப் பட்டன. அத் திட்டங்களின் கீழ் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அந்தந்தப் பிரதேசத்தின் அமைப்பு, இயற்கை வளங்கள், மக்கள் மனப் போக்கு ஆகியவைகளுக்கேற்ப, முன்னேற்றத்தின் அளவு அமைந்திருக்கிறது. ஆனால் சுபிட்சம் என்னும் மாளிகைக்கான பலமான அடித்தளம் அமைத்தாகி விட்டது.

மாவட்ட வாரியாகப் பத்தாண்டுச் சாதனைகளைத் தொகுத்துத் தனித்தனியாக 12 நூல்களை வெளியிட்டு இருக்கிறோம். எல்லாம் சாதித்தாகிவிட்டது என்று பூரித்துப் பேசுவது இந்த நூல் வரிசையின் நோக்கமல்ல. எந்த அளவுக்கு அபிவிருத்தி வேலைகள் நடந்துள்ளன என்னும் விவரம் இதன் மூலம் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. உருவாகி வரும் சுபிட்ச மாளிகையின் எழுத்து உருவம் இது. அந்த மாளிகையைப் பூரணமாகக் கட்டி முடிப்பதில் நடந்துள்ள பணியை அறியவும் நடக்க வேண்டிய வேலையை அனுமானிக்கவும் இது பயன்படும். பொது மக்கள் இந்த நூலை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு, ஆக்கப் பணியில் தொடர்ந்து ஒத்துழைத்து வருவார்கள் என்று நம்புகிறோம்.

நெறியாளர்,
தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறை

சென்னை-9
22-11-1961

அட்டைப் படம்

உலகப் புகழ் பெற்ற இந்தியக் கைவேலைப் பொருள்களில் பத்தமடைப் பட்டுப் பாயும் ஒன்று. திருநெல்வேலி மாவட்டத்துக்கு இது தனிச் சிறப்பு வாய்ந்த தொழில். பத்தமடைப் பாய் உருவாகும் காட்சியை அட்டைப் படம் சித்திரிக்கிறது.

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUL 1962
MADRAS

அடக்கம்

		பக்கம்
மக்கள் திட்டம்	...	1
புகழ் ஓங்கிய நெல்லை	...	11
பூம்புனல்	...	17
உற்பத்தி உயர்வு	...	25
கிராமங்களில் புதுவாழ்வு	...	43
மின்சாரப் பெருக்கம்	...	76
வளரும் தொழில்கள்	...	79
கல்வி விளக்கு	...	96
நாட்டின் நரம்புகள்	...	100
நோயற்ற வாழ்வு	...	104
கூட்டுறவின் சாதனைகள்	...	110
சமூக முன்னேற்றம்	...	113
மத்திய அரசாங்கத் திட்டங்கள்	...	125
வளமான எதிர்காலம்	...	130

திருநெல்வேலி மாவட்டம்



குறிப்பு:

மாவட்ட எல்லை

வட்டஎல்லை

ரயில்பாதை

தேசீய நெடுஞ்சாலை

மாநில நெடுஞ்சாலை

ஆறுகள்

பரப்பளவு: 4407 சதுர மைல்

மக்கள் தொகை: 27.2 லட்சம்

ஆண்கள் 1330907 பெண்கள்: 1393560

எழுத்தறிவுள்ளவர்கள்: 35 சதவிகிதம்

ஆண்டு சராசரி மழை: 750 மில்லி மீட்டர்

CONNEMARA PUBLIC LIBRARY
30 JUL 1962
MADRAS

மக்கள் திட்டம்

அடிமை விலங்கை ஒடித்த கையோடு நாட்டில் பொருளாதார சுபிட்சத்துக்கான புதிய போராட்டம் ஆரம்பமாயிற்று. தாழ்வும் நலிவும் நீங்கி, மகிழ்ச்சியும் பொலிவும் நிறைந்த புதுவாழ்வு காண மாபெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இடையில் ஏற்பட்ட இடையூறுகள் அனைத்துக்கும் ஈடு கொடுத்துப் புது வாழ்வு என்னும் பயிரைத் திட்டமிட்டு வளர்க்கத் தொடங்கினோம்.

1951-ல் முதல் ஐந்தாண்டுத் திட்ட வேலை ஆரம்பமாயிற்று. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பின்பு இப்போது மூன்றாவது திட்ட வேலை தொடங்கியிருக்கிறது. மூன்றாவது திட்டம் மிகப் பெரியது என்று அனைவரும் கருதினாலும், அதில் வெற்றி காணமுடியும் என்ற தன்னம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளது. இந்தத் தன்னம்பிக்கையை நமக்குக் கொடுத்தது எது? முதல் இரு திட்டங்களில் கிடைத்த வெற்றியே.

ஐந்தாண்டுத் திட்டம் என்றால் சமுதாயத்தின் மேல்தளத்தில் உள்ள சிலர், கீழே இருக்கும் பலரை வேலை வாங்கும் திட்டமல்ல. இது மக்கள் திட்டம். மக்கள் நலனுக்காக மக்கள் ஒத்துழைப்

பைக் கொண்டு நடத்தப்படும் திட்டம். இந்தியாவின் பொருளாதார ஜனநாயகத்துக்குக் கொடுக்கப்பட்ட வரிவடிவமே இது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான தேசீயத் திட்டம், மூன்று பெரும் பிரிவுகளைக்கொண்டது. மத்திய அரசாங்கத் திட்டம், மாநில அரசாங்கத் திட்டம், தனியார்துறைத் திட்டம் என்பன அந்த மூன்று பிரிவுகள் ஆகும்.

புதிய உருக்காலைகள் அமைப்பு, கனரக யந்திரத் தொழிற்சாலை, ரசாயன உரத் தொழிற்சாலை, நிலக்கரிச் சுரங்கம், எண்ணெய் வளம்கண்டுபிடித்தல், எண்ணெய் சுத்திகரிப்பு, பெரிய துறைமுகங்கள், ரயில்வேக்கள் ஆகியவைகளின் அபிவிருத்தி வேலைகள் முதலியன மத்திய அரசாங்கத் திட்டம் என்ற பிரிவில் வருகின்றன.

மாநில அரசாங்கத் திட்டத்தின் கீழ், வேளாண்மை, மின்சாரம், போக்குவரத்து, கல்வி, சமூகநலப் பணிகள், சுகாதாரம், கிராம முன்னேற்றம் முதலியன அடங்கும்.

மூன்ருவது, தனியார் துறை. ஜவுளி, சர்க்கரை, சிமிட்டி, இஞ்சினீரிங் மற்றும் இதர பொருள்கள் உற்பத்திக்கான ஸ்தாபன ரீதியான தொழில்களில் பொதுமக்கள் முதலீடும், வேளாண்மை, வீடு கட்டுதல் ஆகியவைகளில் பொதுமக்கள் முதலீடும் இந்தப் பிரிவில் சேர்ந்தவை.

திட்டச் செலவுகள்

முதல் இரண்டு திட்டக் காலங்களில் இந்தியா முழுவதற்குமாக ரூ. 10,110 கோடி செலவிடப்பட்டது. மூன்ருவது திட்டத்தில் இந்தியா முழுவதற்குமாக உத்தேசமாக ரூ. 11,600 கோடி செலவாகும். இதில் மத்திய அரசாங்கம் ரூ. 3,775 கோடி செலவழிக்கும். மாநில அரசாங்கங்கள் ரூ. 3,725 கோடி செலவழிக்கும். தனியார்துறை ரூ. 4,100 கோடி செலவிடும்.

தமிழ் நாட்டின் முதலாவது, இரண்டாவது திட்டங்களுக்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 266 கோடியாகும். அதாவது முதல் திட்டத்தில் ரூ. 80 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 186 கோடியும் செலவிடப்பட்டது.

திட்ட வேலைகளின் பயனுக இந்தப் பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் வேளாண்மை, பாசனம், கல்வி, மின்சாரம், தொழில்கள், சமுதாய நலன், போக்குவரத்து ஆகிய எல்லாத் துறைகளிலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தின் உணவு உற்பத்தி 38 லட்சம் டன்னுக இருந்தது. இரண்டு திட்டங்களை நிறைவேற்றிய தின் பயனுக உற்பத்தி இப்போது 53 லட்சம் டன் ஆக உயர்ந் துள்ளது. ஏக்கர் விகித மகசூலை அதிகரிக்கும் முறையில் பொறுக்கு விதைகளைப் பரப்புவதிலும் ஜப்பானியச் சாகுபடி முறையை அனு சரிப்பதிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக மாநிலத்தில் நெல் சாகுபடியாகும் பரப்பு பூராவிலும், சிறு தானி யங்கள் சாகுபடியாகும் பரப்பில் 45 சதவீதத்திலும் பொறுக்கு விதைகள் பயன்படுத்தப்படுகின்றன. சென்ற பத்து ஆண்டு களில் வேளாண்மை, சமுதாயநலத் திட்டங்களின்கீழ் சுமார் ரூ. 42 கோடி செலவில் இந்த அபிவிருத்தி வேலைகள் நடந்துள்ளன.

பாசனமும், மின்சாரமும்

தமிழ் நாட்டில் பாசன வசதிகளைப் பெருக்க சென்ற பத்து ஆண்டுகளில் ரூ. 37 கோடிக்குமேல் செலவிடப்பட்டது. 14 பாச னத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக 4·65 லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசனம் பெற்றன. ரூ. 35 கோடி செலவாகக் கூடிய பரம்பிக்குளம் - ஆளியாறு திட்ட வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனுல் 2·4 லட்சம் ஏக்கர் பாசனம் பெறும்.

மின்சாரப் பெருக்கம் தமிழ் நாட்டின் மற்ருெரு முக்கிய சாதனை யாகும். சென்ற பத்து ஆண்டுகளில் மின்சார அபிவிருத்திக் காக மட்டும் சுமார் ரூ. 110 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக மின்சார வசதி பெற்ற கிராமங்களின் எண் ணிக்கை 1610-லிருந்து 11,000-ஆக அதிகரித்துள்ளது. மின் சாரத்தால் இயங்கும் பம்பு செட்டுகளின் தொகை சென்ற பத்து ஆண்டுகளில் சுமார் 14,000-லிருந்து 1,16,000-ஆக அதிகரித் துள்ளது.

கல்வி

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் சுமார் 16,000 ஆரம் பப் பள்ளிகள் இருந்தன. தற்போது ஆரம்பப் பள்ளிகளின் தொகை கிட்டத்தட்ட 27,000 ஆகும். 1951-ல் பள்ளிகளுக்குச் சென்ற குழந்தைகள் தொகை 18·53 லட்சம். 1961-ல் பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகள் தொகை 33·80 லட்சம் ஆகும். குழந்தை கள் பள்ளிக்கு வரும்படிச் செய்வதில் ஊக்கமளிப்பதற்காக நண் பகல் உணவுத் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டது. இத் திட்டப்படி ஏழைக்குழந்தைகளுக்கு நபர் ஒன்றுக்கு பத்துக்காசு செலவில் இலவசமாக உணவு அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் சுமார் 10 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைகின்ற னர். இலவச நண்பகல் உணவு மட்டுமின்றி சுமார் 3·6 லட்சம்



நெய்வேலியில் உருவாகிவரும் புதிய அனல் மின்சார நிலையம்.

குழந்தைகளுக்கு இலவசமாக நிகராடை வழங்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடத்துவதும் கல்வித் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும். இத்திட்டத்தின் மூலம் ஆங்காங்கே உள்ள பொதுமக்கள் பள்ளிக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய முன்வருகின்றனர். ரொக்கமாகவும் பொருளாகவும் உதவுகின்றனர். இந்த வகையில் அளிக்கப்பட்ட உதவியின் மதிப்பு ரூ. 6·47 கோடி.

தொழில் நுட்பக் கல்வி வசதியில் இரண்டாவது திட்டக் காலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் பொறியியல் கல்லூரிகளில் இரண்டாவது திட்ட ஆரம்பத்தில் ஆண்டு ஒன்றுக்கு மொத்த இடவசதி 662 ஆகும். இரண்டாம் திட்ட முடிவில் இந்த இடவசதி 1157-ஆக அதிகரித்தது. பாலிடெக்னிக்குகளில் இடவசதி சென்ற 5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 822-லிருந்து 2910-ஆக அதிகரித்துள்ளது.

தொழில் வளர்ச்சி

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்துள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கத் திட்டம், தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் தொழில் முயற்சியாகும். இத் திட்டத்துக்குச் செலவு மதிப்பு 110 கோடி ரூபாய். இந்திய அரசாங்கம் இதுவரை

ரூ. 49 கோடி முதலீடு செய்துள்ளது. பழுப்பு நிலக்கரி எடுக்கும் வேலை தொடங்கி விட்டது. நெய்வேலியில் புதிய அனல் மின்சார நிலையம் 1961-62 ல் உற்பத்தி தொடங்கும். முதல் கட்டத்தில் 2·5 லட்சம் கிலோவாட் உற்பத்தி திறனுடையதாக அது இருக்கும். 1·52 லட்சம் டன் ஊரியா உற்பத்தி செய்யக்கூடிய ரசாயன உரத் தொழிற்சாலையும், 3·5 லட்சம் டன் சுட்ட நிலக்கரிக் கட்டிகள் தயாரிக்கக் கூடிய ஒரு தொழிற்சாலையும் ஏற்படுத்துவதற்கு வகை செய்யப்படுகிறது. நெய்வேலி ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரித் திட்டத்தின் பெரிய தொழில் பிரிவுகளான இந்த வேலைகள் வெற்றி கரமாக நிறைவேறுவதை யொட்டி, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி கணிசமான முன்னேற்றத்தைக் காணும்.

சென்னை பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டி தொழிற்சாலையும் முக்கியமான ஒரு தொழில் அபிவிருத்தி வேலையாகும். இதுவும் மத்திய அரசாங்க தொழில் திட்டத்தில் சேர்ந்தது. ரூ. 7·35 கோடி செலவில் அமைந்த இந்தத் தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்கு 620 பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு 300 பெட்டிகளுக்கு ஆசன வசதிகள் முதலியன செய்யக் கூடிய தொழில் பிரிவு புதிதாக ரூ. 3·60 கோடி செலவுமதிப்பில் ஏற்

நிலத்தைக் குடைந்து மண்ணையெல்லாம் அகற்றிவிட்டு நிலக்கரியை வெட்டிக் கொண்டு வருவதென்பது சாதாரண காரியமல்ல. நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கப் பகுதியில் மண்ணை அகற்றும் பெரும் பணிக்கு உரிய பெரிய யந்திரம்.



படுத்தப்பட்டு வருகின்றது. ரயில் பெட்டித் தொழிற்சாலையில் சுமார் 7800 பேர் வேலை செய்கிறார்கள்.

ரயில் பெட்டி உற்பத்தியானது, பல துணைத் தொழில்கள் பெருகவும் வாய்ப்பு அளித்திருக்கின்றது. உருக்கு வார்ப்புகள் ஸ்பிரிங்குகள், ரப்பர் சாமான்கள் முதலிய சுமார் 200 வகைப் பொருள்கள் உள்நாட்டு துணைத் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன. இதனால் சென்னை நகரின் சுற்றுப் பிரதேசங்களிலும், மற்றும் நாட்டில் பல்வேறு இடங்களிலும் துணைத் தொழில்கள் பெருக ஊக்கமேற்பட்டுள்ளது.

தனியார் துறை

தமிழ் நாட்டில் தனியார் துறையில் சிமிட்டி, துணி ஆலைகள், இஞ்சினீரிங் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். மாநிலத்தில் 1934-க்கும் 1946-க்கும் இடையே மூன்று சிமிட்டித் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. இந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் முன்பு 7·58 லட்சம் டன்களாக இருந்தது. இப்பொழுது உற்பத்தி 8·13 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. ராஜபாளையம் பகுதியில் ஒரு சிமிட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1·94 லட்சம் டன்களாகும். இத் தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது. மூன்றும் திட்ட காலத்தில் இரண்டு சிமிட்டித் தொழிற்சாலைகளை புதிதாகத் தொடங்க சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

துணி உற்பத்தித் தொழிலைப் பொறுத்த வரையில் இந்தியாவில் 131 லட்சம் கதிர்கள் இருக்கின்றன. இவற்றில் 31 லட்சம் கதிர்கள் தமிழ் நாட்டு ஆலைகளில் உள்ளன. 1951-ல் மாநிலத்தில் 71 ஆலைகள் இருந்தன. தற்போது 134 ஆலைகள் இருக்கின்றன. துணி ஆலைத் தொழிலினால் 1950 ல் 90,000 பேர்களுக்கு மட்டுமே வேலை கிடைத்தது. இன்று சுமார் 1·2 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைத்து வருகிறது,

தனியார் துறையின்கீழ், வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி, சென்னை அருகே திருவொற்றியூரில் உள்ள ராயல் என்பீல்டு மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை, அம்பத்தூரில் உள்ள டி. ஐ. சைக்கிள் கம்பெனி, எண்ணூரில் உள்ள அசோக் லேலெண்ட் லிமிடெட் ஆகிய தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சியடைந்து வருகின்றன. மேட்டூர் அருகில் மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. ஈரோட்டுக்கருகில் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருறது; இதில் அரசாங்கம் ரூ. 1 கோடி முதலீடு செய்ய முன் வந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் சாகுபுரத்தில் தாரங்கதரா ரசாயன தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 30,000 டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்து வருகின்றது. காஸ்டிக் சோடா தயாரிப்பில் இது இந்தியாவிலேயே பெரிய தொழிற்சாலையாகும்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்துக்கருகில் ரெயான் என்னும் செயற்கைப் பட்டுத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வேலை தொடங்கி விட்டது. இத்தொழிற்சாலையில் அரசாங்கம் ரூ. 10 லட்சம் முதலீடு செய்துள்ளது.

அம்பத்தூரில் உள்ள டன்லப் ரப்பர் கம்பெனி மேட்டுப்பாளையம் செயற்கை வைரத் தொழிற்சாலை ஆகியனவும் தனியார் துறையில் குறிப்பிடத்தக்க தொழில் அமைப்புகளாகும்.

சர்க்கரை ஆலைகள்

ஆந்திர மாநிலப் பிரிவினைக்குப் பின் தமிழ் நாட்டில் நெல்லிக்குப்பம், புகளூர், பாண்டிய ராஜபுரம் ஆகிய இடங்களில் மூன்று சர்க்கரை ஆலைகள் இருந்தன. பின் இரண்டாம் திட்டக் காலத்தில் தஞ்சாவூர் மாவட்டம் வடபாதி மங்கலத்திலும், திருச்சி மாவட்டம் பேட்டை வாய்த்தலையிலும் இரு சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட்டன. இதல்லாமல் உடுமலைப்பேட்டை, ஆம்பூர், படாலம் ஆகியவைகளில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்துவதில் அரசாங்கம் ரூ. 39 லட்சம் முதலீடு செய்துள்ளது.

சிறு தொழில்களை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கிண்டியிலும், விருதுநகரிலும் தொழிற் பண்ணைகள் அமைக்கப்பட்டன. ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, பேட்டை, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் தொழில் பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. காட்பாடியில் ஒரு தொழில்பேட்டை உருவாகி வருகிறது. இவற்றின் மூலம் சிறு தொழில்கள் வளர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பயிற்சி—உற்பத்தி நிலையங்கள் 44 ஏற்படுத்தப் பட்டுள்ளன. இந்தத் தொழில் வளர்ச்சி முக்கியமாக இரண்டாவது திட்டத்தில் ஏற்பட்டதாகும்.

சென்ற பத்து ஆண்டுகளில் சாலை வசதி 21,198 மைல்களிலிருந்து 25,878 மைல்களாக அதிகரித்துள்ளது.



பெரிய துறைமுகங்களையும், ரயில்வேக்களையும் அபிவிருத்தி செய்வது மத்திய திட்டத்தின் ஒரு பகுதியாகும். உலக பாங்கியிட மிருந்து கடன் உதவியுடன் சென்னைத் துறைமுகத்தை ரூ. 16 கோடி செலவில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டமும், தாம்பரம்—செங் கற்பட்டு—விழுப்புரம் இடையில் மின்சார ரயில் அமைப்புக்கான திட்டமும் செயலாக்கப்பட்டு வருகின்றன.

மருத்துவ வசதிகள்

முதல் திட்ட ஆரம்பத்தில் மாநிலத்தில் உள்ள மருத்துவ மனை களில் மொத்தம் 8,500 படுக்கைகள் இருந்தன. தற்போது படுக்கை களின் எண்ணிக்கை 15,000 ஆக அதிகரித்துள்ளது. செங்கற் பட்டு, பாளையங்கோட்டை, இராமநாதபுரம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், கடலூர், சேலம் ஆகியவைகளில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்கு கட்டிடங்கள் கட்டும் வேலை ரூ. 53 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சா வூரில் ரூபாய் 130 லட்சம் செலவில் புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கிராமப் புறங்களில் 110 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

கூட்டுறவு

1955-56 ல் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் குடியானவர் களுக்கு ரூபாய் 6 கோடி வேளாண்மைக் கடன் வசதி அளிக்கப் பட்டது. 1960-61 ல் இது ரூபாய் 25 கோடியாக அதிகரித்திருக் கிறது. மாநிலத்தில் தற்போது எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு சங்க அனுகூலங்களைப் பெற்று வருகின்றன. முழுக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் 43 வட்டாரங்களிலுள்ள கிராம மக்கள் பயனடை கின்றனர். இவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் குறைந்த காலக் கடன் வசதிகள் அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற வகை செய்யப்பட்டிருக்கிறது. இக் குடியானவர்களுக்கு ஜாமீன் இன்றி முன் பணம் கொடுப்பதால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற் படக்கூடிய நஷ்டத்திற்கு அரசாங்கம் ஈடு செய்யும். தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிரச் சாகுபடித் திட்டம் அமுலிலிருந்து வருகிற 23 வட்டாரங்களும் இதில் அடங்கும்.

தமிழ் நாடு 375 அபிவிருத்தி வட்டாரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. 363 வட்டாரங்களுக்கு பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப் பட்டுள்ளன. அடி மட்டத்தில் இந்த ஜனநாயக நிர்வாக முறையானது நாட்டின் அபிவிருத்திக்கு உறுதுணையாக இருக்கும்.

சென்ற பத்து ஆண்டுகளில் பின்னடைந்த வகுப்பினர் நிலையில் அபிவிருத்தி சம்பந்தமாக முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் திட்டம் முதற்கொண்டு ஹரிஜன நலத் திட்டங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வந்தது. அத்துடன் புதிய ஹரிஜன நலத் திட்டங்களுக்காக ஆண்டுதோறும் மேற்கொண்டு சுமார் 2 கோடி செலவு செய்யப்படுகிறது. சென்ற பத்து ஆண்டுகளில் சுமார் 1·71 லட்சம் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன. 27,000 உணவு மானிய உதவிகள் வழங்கப்பட்டன. ஹரிஜனங்களுக்கான வீடு வசதித் திட்டத்தின்கீழ் 20,200 வீடுகள் கட்டப்பட்டன.

வீட்டு வசதி

சென்னை நகரில் சேரிச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 478 புதிய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன; 1546 மனை இடங்கள் அபிவிருத்தி செய்து தரப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்காக அரசாங்க உதவியுடன் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 1377 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன; 239 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

குறைந்த வருமானக்காரர்களுக்கு வீடு வசதித் திட்டத்தின்கீழ் 3160 வீடுகள் கட்டப்பட்டன. 467 மனை இடங்கள் ஏற்படுத்தித் தரப்பட்டன. இந்திய ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் நிதி உதவியுடன் கூடிய நடுத்தர வருமானக்காரர்களுக்கான வீடு வசதித் திட்டத்தின்கீழ் 120 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன; 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. போலீஸ்காரர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 லட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 260 லட்சம் செலவில் சுமார் 4200 வீடுகள் கட்டப்பட்டன.

வேளாண்மைப் பெருக்கம், மின்சார வசதிகளில் பெரும் முன்னேற்றம், நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டவேலை, தொழில் நுட்பக் கல்வியில் அதிகப்படியான பயிற்சி வசதிகள் முதலியன காரணமாக தமிழகத்தின் தொழில் வளத்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் பலமான அஸ்திவாரம் அமைக்கப்பட்டுவிட்டது. அரசாங்கத் தொழில் துறை, தனியார்துறை இரண்டிலுமே இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் மாவட்டவாரியாக முன்னேற்ற வேலைகளைத் தொகுத்துத் தரும் நூல் வரிசையில் நெல்லை மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளைப் பின்வரும் அத்தியாயங்களில் காணலாம்.

———

''சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவருந் தழைத் தினிதிருந்த
மங்கலப் பாண்டி வளநாடு ''

புகழ் ஓங்கிய

நெல்லை

பொங்கருவி தூங்கும் பொதிகைமலை; பொன் நிறத்துப் புனல் பெருகும் பொருநை நதி; வானின் வழி தேனொழுகும் குற்றாலச் சீரருவி; ஒண்முத்துக் கொழிக்கும் தண்கடல் பகுதி ஆகிய பல சிறப்புக்களைப் பெற்றது திருநெல்வேலிச் சீமை. தென் பாண்டி மண்டலமாய் விளங்கி தமிழகத்தின் வரலாற்றிலும் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றிருந்தது நெல்லை மாவட்டம்.

பாண்டியர் ஆண்ட பாண்டி நாட்டில், இன்றைய மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கியிருந்தன. பாண்டிய நாட்டின் சிறப்பை பழைய தமிழ் நூல்கள் மிக விரிவாகக் கூறுகின்றன. மகாபாரதத்திலும் பாண்டி நாடு பற்றிக் குறிப்புகள் உள்ளன. பாண்டிய மன்னர்கள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தார்கள். புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களில் பாண்டியர் பலருடைய புகழ் போற்றப்பட்டுள்ளது. சங்க கால நூலாகிய மதுரைக் காஞ்சியில், தலைநகர் மதுரையின் வனப்பும், பாண்டிய நாட்டின் வளமும், நெடுஞ்செழியன் ஆட்சியின் மேன்மையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பாண்டிய நாட்டில் வாணிபம் செழித்து விளங்கியது. ரோம் முதலிய மேனாடுகளுடன் வாணிபம் நடைபெற்றது. கொற்கை,

பாண்டியர்களின் ஒரு முக்கியமான துறைமுகப்பட்டினம். பாண்டிய நாட்டு முத்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகியது. மேனுடுகளிலிருந்து குதிரைகளும், மதுவகைகளும், கண்ணுடிச் சாமான்களும் இறக்குமதியாயின. பாண்டிய நாடு குறித்து கிரேக்க, ரோம சரித்திர ஆசிரியர்களும் குறிப்பிட்டிருக்கிருர்கள். அசோகர் கல்தூண் ஒன்றில் பாண்டியர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

நெல்லை மாவட்டத்தின் முக்கிய மலை பொதிகை. தமிழகத்துக்கே இது சிறப்பான மலையாகும். மாவட்டத்தில் முக்கிய ஆறு தாமிரபரணி. இது மிகவும் புகழ்வாய்ந்த நதி. இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களில் தாமிரபரணி பற்றி குறிப்புகள் வந்துள்ளன. சுக்ரீவன், வானர சைந்நியங்களை நோக்கிச் சொல்லுகிருன் : "அகஸ்தியரின் ஆசியால் நீங்கள் இந்த தாமிரபரணியைக் கடந்து செல்லுவீர்கள். காதலன் பின் செல்லும் காதலி போல, இந்த நதியானவள் சந்தனமரங்களினூடே மறைந்து கொண்டு செல்லுகிருள். இதைக் கடந்து அப்பால் சென்ருல் பாண்டிய மன்னர்களின் கோட்டை வாயிலைக் காண்பீர்கள்."

விடுதலை வரலாறு

முத்தும் முத்தமிழும் பெற்ற பாண்டி வளநாடு, வரலாற்றில் அழியாத இடம்பெற்றது. தென்பாண்டி மண்டலமாகிய திருநெல்வேலிச் சீமை, வீரபாண்டியக் கட்டபொம்மன், கவியரசர் சி. சுப்பிரமணிய பாரதியார், வ. உ. சிதம்பரனுர் போன்ற தேசபக்தச் செம்மல்களை நாட்டுப் பணிக்கு ஈந்து விடுதலை வரலாற்றில் தனியிடமும் பெற்றது.

பழமையால் வந்த பெருமை மட்டுமல்ல ; புது வாழ்வு பெற நாடெங்கும் நடந்து வரும் பொருளாதார மறுமலர்ச்சிப் போராட்டத்திலும் நெல்லை மாவட்டம் முன்னணியில் நின்று பெருமை பெற்று வருகின்றது. மணிமுத்தாறு நீர்த் தேக்கம் அமைக்க தாங்களாக முன் வந்து ரூ. 1·28 கோடி அரசாங்கத்துக்கு கடன் அளித்து ஒத்துழைக்க வந்தவர்கள் நெல்லை மாவட்டப் பொது மக்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருநெல்வேலி மாவட்டம் தென் இந்தியாவில், தமிழ் நாட்டின் தென் பகுதியில் கிழக்குக் கடலோரமாக உள்ளது. இந்த மாவட்டத்தின் பரப்பு 4407 சதுரமைல்கள்.

நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி, நாங்குனேரி, அம்பாசமுத்திரம், தென்காசி, சங்கரன்கோவில், செங்கோட்டை ஆகிய ஒன்பது வட்டங்கள் உள்ளன. மாவட்டத் தலைநகரம் திருநெல்வேலி.

கேரளப் பகுதியிலிருந்த செங்கோட்டை வட்டம், மாநிலச் சீரமைப்பின் விளைவாக நெல்லை மாவட்டத்தில் சேர்ந்துள்ளது. நெல்லை மாவட்டத்துக்கு வடக்கே ராமநாதபுரம் மாவட்டமும், கிழக்கே வங்காள விரிகுடாவின் மன்னார் வளைகுடாவும், மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலையும், தென் மேற்கில் கன்னியாகுமரி மாவட்டமும் எல்லைகளாக அமைந்துள்ளன. மலைப் பகுதிகள் 3000 முதல் 5000 அடி வரை உயரமுள்ளவை. அகத்திய மலை உச்சி 6200அடி உயரமுள்ளது. மாவட்டத்தில் கிழக்குப் பக்கத்தில் மழை குறைவு. மலையோரங்களில் சில சமயங்களில் அதிக மழை பெய்கிறது. சென்ற பத்து ஆண்டுகளில் சராசரி மழை அளவுகுறைந்திருக்கிறது. ஆண்டுக்கு சராசரி 30 அங்குல மழை பெய்கிறது.

நீர்வளம்

திருநெல்வேலி மாவட்டத்தின் ஆறுகள் பலவும் மேற்குத் தொடர்ச்சி மலையிலேயே உற்பத்தியாகின்றன. முக்கியமான ஆறு தாமிரபரணி. மாவட்டத்தில் நீர்ப்பாசனம் சிறப்பாக தாமிரபரணி ஆற்றைச் சார்ந்ததே. மேற்குத் தொடர்ச்சி மலையில் அகத்தியர் பெரிய பொதிகையில் தோன்றி இந்த ஆறு, இனிய பொழில்கள், நெடிய வயல்கள் இடையே சுமார் 75 மைல் தவழ்ந்தோடி கடலில் கலக்கிறது. சிற்றாறு, மணிமுத்தாறு, சேர்வியாறு, கடன நதி ஆகியவை இதன் முக்கியமான உபநதிகளாகும்.

பாபநாசம் அணை



தாமிரபரணியில் கலியாண தீர்த்தம் அருவிக்கு மேலே அணை கட்டி, பாபநாசம் நீர்த் தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. நீர் மின் சாரம் உற்பத்தியாகிறது. சிற்றாறு நதியின் குற்றால அருவி, தென் காசிக்கு மூன்றரை மைல் மேற்கே இருக்கின்றது. இந்த ஆறுகள் எல்லாவற்றிலும் பாசன அளவில் வற்றாது சுரப்பது தாமிரபரணியே யாகும்.

வட கிழக்கு, தென் மேற்கு, பருவ மழைக் காலங்களை அனு சரித்து நெல்லை மாவட்டத்தில் நெல் பயிரிடப்படுகின்றது. தாமிர பரணி தீரத்தில் நெடிய வயல்களின் மரகதப் பச்சை கண்ணுக்கு அரிய விருந்தாகும். சோளம், கம்பு, ராகி, வரகு, சாமை ஆகியன இந்த மாவட்டத்தின் முக்கிய புன்செய் தானியங்களாகும். இவை பெரும்பாலும் கிணற்றுப் பாசனம் மூலம் பயிர் செய்யப்படு கின்றன. ஆனால் தென்காசி, சங்கரன்கோவில், செங்கோட்டை வட்டங்களில் மலையோரப் பகுதிகளில் சோளம், புன்செய் பயிராக பயிரிடப்படுகிறது. பாசிப் பயறு, துவரை, உளுந்து, கொள்ளு ஆகியவை இந்த மாவட்டத்தின் முக்கியமான பயறு வகைகள். பருத்தி, மிளகாய், கரும்பு, வேர்க்கடலை, புகையிலை ஆகியவை முக் கிய வாணிபப் பயிர்கள்.

நாங்குனேரி வட்டத்தின் வனாந்திரப் பகுதிகளில் தனிப்பட்டவர் களின் காப்பித் தோட்டங்கள் இருக்கின்றன. அம்பாசமுத்திரம் வட்டத்தில் ஏலம், தேயிலை, சின்கோனா ஆகிய தோட்டங்களும், பழத்தோட்டங்களும் உள்ளன. தென்காசி, சங்கரன்கோவில் வட் டங்களில் தனியார் காடுகளில் ஏலத் தோட்டங்களைக் காணலாம்.

ரயில் பாதைகள்

நெல்லை மாவட்டத்தில் மீட்டர் கேஜ் லைனில் $193\frac{3}{4}$ மைல் நீள ரயில் பாதை இருக்கிறது. மதுரையிலிருந்து தூத்துக்குடி செல் லும் மெயின் லைன் கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம் வட்டங்கள் வழி யாகச் செல்லுகின்றது. அப்பாதையில் மணியாச்சியிலிருந்து பிரியும் ஒரு கிளை, திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், தென்காசி, செங் கோட்டை ஆகியவைகளைக் கடந்து மேற்குத் தொடர்ச்சி மலையில் கேரள எல்லைவரை செல்லுகிறது. திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து பிரியும் மற்றொரு கிளை ஸ்ரீவைகுண்டம் வழியாக திருச்செந்தூர் வரை செல்லுகின்றது. தென் காசியிலிருந்து பிரியும் ஒரு கார்டு லைன் சங்கரன் கோவில் வட்டம் வழியாக விருதுநகர் சென்று மெயின் லைனுடன் இணைகின்றது. மாவட்டத் தலைநகரமும், டிவிஷ னல் தலைமை நகரங்களும், நாங்குனேரி நீங்கலாக எல்லா வட்ட தலைநகரங்களும் ரயில் வசதி பெற்றுள்ளன. நாங்குனேரிக்கு திரு நெல்வேலி சந்திப்பிலிருந்து அவுட் ஏஜன்சி சர்விஸ் உண்டு.

மக்கள் தொகை

1961ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி, நெல்லை மாவட்டத்தில் மக்கள் தொகை 27,29,467. ஆண்கள் 13,30,907; பெண்கள் 13,98,560 பேர். மாவட்டம் பூராவையுமாக கணக்கில் கொண்டால் சதுர மைல் ஒன்றுக்கு சராசரி 619 பேர் வசிக்கிறார்கள். 1951ல் சதுர மைலுக்கு சராசரி 564 பேர் வசித்தனர். காட்டுப் பிரதேசங்களை நீக்கி விட்டால், மக்கள் வாழ்வதற்கு உரிய நிலத்தின் பரப்பு 3870 சதுர மைல்கள். காடுகள் நீங்கிய நிலப்பரப்பில் சதுர மைல் ஒன்றுக்கு சராசரி 705 பேர் வசிக்கிறார்கள். 1951ஆம் ஆண்டின் கணக்கெடுப்புடன் ஒப்பிடும்போது, சதுர மைலுக்கு 56 பேர் அதிகரித்திருக்கிறார்கள்.

1951க்கும் 1961க்கும் இடைப்பட்ட பத்து ஆண்டுகளில் மாவட்டத்தின் மக்கள் தொகை 8·9 சதவீதம் அதிகரித்திருக்கிறது. 1941லிருந்து 1951 வரை உள்ள பத்து ஆண்டுகளில் மக்கள் தொகை அதிகரிப்பு 16·55 சதவீதம் ஆகும். தாமிரபரணியின் வளமான டெல்டாப் பகுதிகள் உள்ள அம்பா சமுத்திரம், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் வட்டங்களிலும், செங்கோட்டை வட்டத்திலும்தான் மக்கள் தொகை குறிப்பிடத் தக்க அளவு அதிகரித்திருக்கிறது. மாவட்டத்தில் 35 சதவீதம் மக்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

பிறப்பு விகிதம்

1951ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி, பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 34·3 ஆகும். மரண விகிதம் 23·7. தமிழ்நாடு முழுதுக்குமான கணக்குப்படி பிறப்பு விகிதம் 31·7; மரண விகிதம் 21·2. இந்தப் புள்ளிகளுடன் ஒப்பிடும்போது நெல்லை மாவட்டத்தில் பிறப்பு விகிதமும் இறப்பு விகிதமும் உயர்ந்தே இருக்கிறது. பேறு கால மரணவிகிதம் இங்கு 1000க்கு 9·4 ஆகும். மாநிலம் பூராவுக்குமாக பேறு கால மரண விகிதம் 8·1 ஆகும்.

இதம் தரும் குற்றால அருவி



நெல்லை மாவட்டம் முக்கியமாக விவசாய பூமி. ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஏற்றதொரு வாய்ப்பாக, தொழில் வளம் பெருகுவதற்கான திருப்பம் தொடங்கிவிட்டது. நூற்பு ஆலை, நெசவு ஆலை, பஞ்சு அரைத்தல்—கட்டுதல், தீக்குச்சித் தொழில், ரசாயனத் தொழில், சிமிட்டி உற்பத்தி, காஸ்டிக் சோடா உற்பத்தி, மோட்டார் பழுது பார்த்தல், உப்பளம், பீடி, சுருட்டு சுற்றுதல் முதலியன நெல்லை மாவட்டத்தின் முக்கிய பெரிய தொழில்களாகும்.

முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாக நெல்லை மாவட்டத்தின் பொருளாதாரத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மணிமுத்தாறு தேக்கத் திட்டம் ரூ. 505 லட்சம் செலவு மதிப்பில் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. 1958 ல் இத்திட்ட வேலை முடிவடைந்தது. மொத்தம் செலவான தொகை 5 கோடி ரூபாய்.

உடல் நலனுக்கு உதவும் குற்றாலம் நெல்லை மாவட்டத்தின் தனிச் சிறப்புகளில் ஒன்று. கண்ணைக் கவரும் மரகத வண்ணமலையும், வானின் வழியாக தேன் போல் பொழியும் அருவியும் மக்களின் உடலுக்கும் உள்ளத்துக்கும் அரிய விருந்து. ஜுன் மாதத்திலிருந்து செப்டம்பர் வரை சாரல் காலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளியிடங்களிலிருந்தும், பலர் வந்து தங்கிச் செல்கிறார்கள்.

துறைமுகம்

நெல்லை மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி துறைமுகம், சென்னை துறைமுகத்தைக் காட்டிலும் பழமையானது. போர்ச்சுகீசியர் முதன் முதலில் 1532 ல் இங்கு வந்தனர். புயல் வேகம் அதிகம் மோதாத முறையில் வருஷத்தில் எல்லா நாட்களிலும் இத் துறைமுகத்தில் வேலை நடைபெற முடியும். இந்தியாவின் சிறிய துறைமுகங்களில் தூத்துக்குடி முதல் ஸ்தானம் வகிக்கின்றது. தமிழ் நாட்டில், சென்னைக்கு அடுத்தபடி முக்கிய துறைமுகம் தூத்துக்குடி. 1960-61 ல் இத் துறைமுகம் வழியாகச் சென்ற மொத்தச் சரக்குகள் 9,00,000 டன்களாகும். தூத்துக்குடியை ஆழ்கடல் துறைமுகமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

———

வரப்பு உயர வாழ்வு உயரும். எக்காலத்துக்கும் பொருந்தும் உண்மை இது. நீரின்று அமையாது உலகு என்றார் வள்ளுவர். நிலமும் நீரும் சேர்ந்தால்தான் உணவு உண்டாகும். உயிர்களுக்கு உயிராக விளங்குவது உணவு. நாட்டில் செழுமை பெருக வேண்டுமானால், உணவு உற்பத்தி பெருகியாக வேண்டும். உணவு பெருக வேண்டுமானால், நீர்வளத்தைப் பெருக்குவது இன்றியமையாதது.

அந்நியர்கள் ஆண்டபோது அவர்கள் வரப்பைக் கட்டவில்லை. தூர்ந்துபோன கால்வாய்களைச் செப்பனிடவில்லை. சுபிட்சத்தின் ஊற்றுக் கண்கள் தூர்ந்துபோய்க் கிடந்தன. வானமுது ஆகிய மழை பேராறாய், சிற்றாறாய் ஓடி, கடலில் கலந்து வெறும் உப்பு நீராகிக் கொண்டிருந்தது. இந்த நிலைமையை மாற்றியமைக்கும் வேலையை மக்கள் அரசாங்கம் தன் முதல் கடமையாக மேற்கொண்டது. நமது ஐந்தாண்டுத் திட்டங்களில் முதல் முக்கிய வேலை பாசனத் திட்டங்களாக விளங்கின.

திருநெல்வேலி மாவட்டத்தில் பாசனத்துக்கு முக்கிய ஆதாரமாக விளங்குவது தாமிரபரணியும் அதன் துணை ஆறுகளுமாகும்.



மணி முத்தாறு தேக்கம்

துணை ஆறுகளில் மிகவும் முக்கியமானது மணிமுத்தாறு. தாமிரபரணியில் ஏற்கெனவே உள்ள பாசனத் திட்டங்கள் மூலம் சுமார் 83000 ஏக்கர் பாசனம் பெறுகின்றது. ஆனல் வெள்ளப் பெருக்கு காலங்களில் நீர் முழுவதையும் தேக்கி வைக்க வசதி இல்லை. இதனல் அடிக்கடி பாசனத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு வந்தது. உபரி நீரின் ஒரு பகுதியை தேக்கிப் பயன் படுத்த பாபநாசம் தேக்கம் அமைக்கப்பட்டு நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. தாமிரபரணி தீரத்தில் மற்ருெரு அணைகட்டி, உபரி நீரைத் தேக்கி, தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதியது. அதன் விளைவாகவே மணிமுத்தாறு தேக்கத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மனம் கவரும் மணிமுத்தாறு

மணிமுத்தாறு தேக்கத் திட்ட வேலை முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1951 ல் மேற்கொள்ளப்பட்டு, 1958 ல் கட்டி முடிக்கப் பட்டது. இது 550 கோடி கன அடி நீரை தேக்கக் கூடியது. இந்த அணைக்கட்டின் நீளம் 9600 அடி. கல் கட்டிடப் பகுதி 1230 அடி நீளமுள்ளது. அணையின் உயரம் 138 அடி. கல் கட்டிட அணைக்கு இரு புறங்களிலும் மண் அணை கட்டப்பட்டிருக்கிறது. பிரதான கால்வாய் நீளம் 28 மைல். தாமிரபரணி பாசனப் பகுதியில் தண்ணீர் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதுடன் அம்பா சமுத்திரம், நாங்குனேரி, திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் வட்டங் களிலுள்ள வானம் பார்த்த 3[illegible]0 ஏரி குளங்கள் நீரைப் பெறவும், மணிமுத்தாறு தேக்கம் உதவியாக இருக்கின்றது. தேக்கத்தை யும், கால்வாயையும் கட்டி முடிக்க சுமார் ஐந்து கோடி ரூபாய்

செலவாயிற்று. பசுமை மிகுந்த மலைகளையும், வயல்களையும் சுற்றுப் புறப் பகுதியில் கொண்ட மணிமுத்தாறு தேக்கம் மகிழ்ச்சிப் பயணங்களுக்கான கண்கவர் இடமாகவும் விளங்குகிறது.

நெல்லை மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம், கேரள மாநிலத்திலிருந்து புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதியாகும். செங் கோட்டை வட்டத்திலுள்ள மோட்டை நதியின் குறுக்கே ரூ. 3·5 லட்சம் செலவில் ஒரு நீர்த் தேக்கம் இரண்டாவது திட்ட காலத் தில் கட்டி முடிக்கப் பட்டது. இதனால் செங்கோட்டை வட்டத்தி லுள்ள சுமார் 270 ஏக்கர் நிலங்கள் தண்ணீர் தட்டுப்பாடு இன்றி சாகுபடி செய்யப்படும்.

ஸ்ரீ மூலப்பேரித் தேக்கம்

செங்கோட்டை வட்டத்தில் குளிராட்டி ஆற்றின் குறுக்கே சுமார் ரூ. 6·84 லட்சம் செலவில் ஒரு நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு, வேலை தொடங்கியாகி விட்டது. திட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன இத் தேக்கத்தினால் சுமார் 356 ஏக்கர் நிலங்கள் தண்ணீர் தட்டின்றி சாகுபடி செய்யப்படும்.

பெரிய பாசனத் திட்டங்களை அமைக்க வசதியும் வாய்ப்பும் இல்லாத இடங்களில், ஏற்கெனவே உள்ள சிறு பாசன வசதிகளைப் பெருக்குவதே முன்னேற்றத்திற்குரிய வழி ஆகும். எனவே ஏரி குள மராமத்து, கிணறு வெட்டுதல், இறவைப் பாசனம் ஆகியவை களிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியது. அநேக ஆண்டுகளாக கவனிப்பில்லாமல் கிடந்த ஏரி குளங்கள் செப்பனிடப்பட்டுள்ளன.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏரி, குளங்கள் அபி விருத்தித் திட்டத்தின் கீழ் 154 வேலைகளும், சிறு பாசனத் திட்டத் தின் கீழ் 21 வேலைகளும், விசேஷ சிறிய பாசனத் திட்டத்தின் கீழ் 111 வேலைகளும் மேற் கொள்ளப்பட்டன. விசேஷ சிறு பாசனத் திட்டங்கள் மூலமாக 4604 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசனம் பெற்றது. இதன் மூலம் கிடைக்கும் கூடுதல் உற்பத்தி 2297டன் கள். மேற் கொள்ளப்பட்ட 111 விசேஷ சிறு பாசன வேலைகளில் 39 வேலைகள் முதல் திட்ட காலத்திலேயே முடிவடைந்தன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விசேஷ சிறு பாசனத் திட்டத்தின் கீழ் 171 வேலைகள் மேற் கொள்ளப்பட்டன. இத் திட்டங்கள் மூலம் 6524 ஏக்கர் நிலம் பயனடையும்; 3972 டன் உணவுப் பொருள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இரண்டாவது திட்ட காலத்தில் மொத்தம் 149 வேலைகள் நிறை வேற்றப்பட்டன.

வேளாண்மைத் தொழில், மழையை நம்பி ஆடப்படும் சூதாட்டமாக இருந்தது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு அர

சாங்கம் எல்லா உதவிகளும் அளித்து வருகின்றது. வடிமுனைக் குழாய் கிணறு திட்டம், இறவைப் பாசனத்துக்காக ஆயில் இஞ்சின், மின்சார மோட்டார்கள் ஆகியவைகளை வாடகைக்குக் கொடுக்கும் திட்டம் ஆகியன அதில் குறிப்பிடத் தக்கவையாகும்.

வடிமுனைக் கிணறு

நிலத்தினடியில் நீர்க்கால் மிக வேகமுள்ளதாகவும், மணல் கட்டு அதிகமாகவும் இருக்கக் கூடிய பகுதிகளில் அந்த நீரை மேலே கொண்டு வருவதற்கு, வடிமுனைக் குழாய் கிணறு மிக எளிய முறையாகும். நெல்லை மாவட்டத்தில் இந்த வேலை இரண்டாவது திட்டக் காலத்தில் தான் மேற் கொள்ளப்பட்டது. 43 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயில் இஞ்சின் பம்பு செட்டுகளை அமைக்க குடியானவர்களுக்கு ரூ. 96450 கடன் அளிக்கப்பட்டது. இதன் விளைவாக 215 டன் அரிசி கூடுதலாக உற்பத்தியாகி யிருக்கிறது.

துளைக் கிணறுகள் அமைப்பது சம்பந்தமான வேலை, கைத் தொழில் துறையிடமிருந்து வேளாண்மை இஞ்சினீரிங் துறைக்கு 1958ல் மாற்றப்பட்டது, வேளாண்மைக் காரியங்களுக்காக 61 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன. அவற்றுள் 38 கிணறு பயன் தரும் முறையில் அமைந்தன.

இறவைப் பாசனம்

இறவைப் பாசனம் செய்யும் குடியானவர்களுக்கு ஆயில் இஞ்சின்களையும், மின்சார மோட்டார் பம்பு செட்டுகளையும் வழங்கி, 3 லிருந்து 5 ஆண்டுகளுக்குள் எளிய வருஷாந்திர தவணைகளில் பணத்தை திரும்பிப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் முன் வந்தது, இந்த வகையில் அளிக்கப்பட்ட உதவி விவரமும் பயனும் பின் வருமாறு :

	முதல் திட்ட காலம்		2-வது திட்ட காலம்	
	எண்கள்	மதிப்பு ரூபாய்	எண்கள்	மதிப்பு ரூபாய்
வழங்கப்பட்ட மின்சார மோட்டார்கள்	24	22600	289	295000
வழங்கப்பட்ட ஆயில் இஞ்சின்கள்	34	92000	45	116000
கூடுதல் உற்பத்தியின் அளவு (டன்களில்)	196	....	890	....

நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள்

1961-62-ல் நிறைவேற்றப்பட்டு வரும் பாசன வேலைத் திட்டங்கள் பின்வருமாறு :

தென்காசி வட்டத்தில் மேல்பாவூர் கிராமப் பகுதியில் பாவூர் கால்வாயைச் செப்பனிடும் வேலை. இத்திட்டத்துக்குச் செலவு மதிப்பு ரூ. 11,000. இதனால் 586 ஏக்கர் நிலம் பயனடையும். உணவு உற்பத்தி 10 டன் கூடும்.

நம்பி தலைவன் பட்டினத்தில் படலையார் குளத்தைச் செப்பனிடும் வேலை. இதற்குச் செலவு மதிப்பு ரூ. 1900. சுமார் 460 ஏக்கர் நிலம் பயனடையும். உணவு உற்பத்தி 101 டன் கூடும்.

மகிளாடியில் படலையார்குளம் கால்வாயைச் செப்பனிடும் வேலை. இதற்குச் செலவு மதிப்பு ரூ. 8500 ; பயனடையும் பரப்பு 434 ஏக்கர். உணவு உற்பத்தி 65 டன் கூடும்.

சங்கரன் கோவில் வட்டத்தில் வீரசிகாமணி ஏரியைச் செப்பனிடும் திட்டம். இதற்குச் செலவு மதிப்பு ரூ. 8000. இத்திட்டத்தினுல் 500 ஏக்கர் பயனடையும்.

தென்காசி வட்டம் திப்பணம்பட்டி கிராமத்தில் குத்தலப் பேரி கால்வாயைச் செப்பனிடல். இத்திட்டத்துக்குச் செலவு

மோட்டைத் தேக்கம்



மதிப்பு ரூ. 12100; பயனடையும் நிலப்பரப்பு 912 ஏக்கர். இத்திட்டத்தினுல் உணவு உற்பத்தி 44 டன் கூடும்.

திரவியநகர் கிராமத்தில் குத்தலபேரி கால்வாய்க்கு ஷட்டர்கள் அமைக்கும் திட்டம். இந்த வேலேக்குச் செலவு மதிப்பு ரூ. 8100; பயனடையக் கூடிய நிலப்பரப்பு 912 ஏக்கர். உணவு உற்பத்தி 44 டன் கூடும்.

தென்காசி வட்டம் திப்பணம்பட்டி கிராமத்தில் நாராயணபேரி ஏரியைச் செப்பனிடும் வேலே. இத்திட்டத்துக்குச் செலவு மதிப்பு ரூ. 2600. பயனடையக் கூடிய நிலப்பரப்பு 200 ஏக்கர். உணவு உற்பத்தி 40 டன் கூடும்.

சிறு பாசனத் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 3 அல்லது 4 லட்சம் ரூபாய் செலவு செய்து ஏரிகளும் கால்வாய் களும் செப்பனிடப்பட்டு வருகின்றன.

'பராக்கிரம பாண்டியன்'

கீழ்க்கண்ட திட்டங்கள், பொதுப்பணித் துறையினரால் தயாரிக்கப்பட்டு, அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன:

செங்கோட்டை குட்டாத் திட்டம். இதற்குச் செலவு மதிப்பு, ரூ. 4·85 லட்சம்.

செங்கோட்டை அடவநயினூர் திட்டம். இதற்குச் செலவு மதிப்பு ரூ. 15·74 லட்சம்.

ராமநதித் திட்டம். இதற்குச் செலவு மதிப்பு ரூ. 18 லட்சம்.

பராக்கிரம பாண்டியன் திட்டம். இதற்குச் செலவு மதிப்பு ரூ. 6·32 லட்சம்.

நெல்லே மாவட்டத்தில் ஏற்கெனவே ஆராயப்பட்டுள்ள இதர சிறு பாசனத் திட்டங்கள், அவைகளுக்கு ஆகக்கூடிய செலவு மதிப்பு பின்வருமாறு :

அம்பா சமுத்திரம் வட்டத்தில் கடன நதிக்கு குறுக்கே தேக்கம் (செலவு மதிப்பு ரூ. 89 லட்சம்); செங்கோட்டை வட்டத்தில் அடவிநயினூர் கோயிலில் ஹனும நதிக்கு குறுக்கே தேக்கம் (செலவு மதிப்பு ரூ. 15 லட்சம்); நாங்குனேரி வட்டத்தில் நிலப் பாரைக் கால்வாயிலிருந்து கிளைக் கால்வாய் விஸ்தரிப்பு (செலவு மதிப்பு ரூ, 4·69 லட்சம்)

தென்காசி வட்டத்தில் ஆலங்குளம் கிராமத்தில் தொட்டியன் குளத்தைச் சேர்ந்த நாகல்குள கால்வாயிலிருந்து நேரடி கால்வாய் தோண்டும் வேலே (செலவு மதிப்பு ரூ. 3·94 லட்சம்); கோவில் பட்டி வட்டத்தில் மேலக்கரந்தை கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்

(செலவு மதிப்பு ரூ. 8·29 லட்சம்); ஸ்ரீ வைகுண்டத்தில் கோரம் பள்ளம், பேட்டை குளம் ஆகியவைகளின் கரைகளை முழு நீர் மட்ட அளவுக்கு உயர்த்தல் (செலவு மதிப்பு ரூ. 4·9 லட்சம்); ஸ்ரீவை குண்டம் வட்டத்தில் பேய்குளம் ஏரியில் தூரெடுத்தல் (செலவு மதிப்பு ரூ. 3·4·லட்சம்); கால்வாய் ஏரியிலிருந்து நொச்சி குளத் துக்கு கால்வாய் அமைத்தல் (செலவு மதிப்பு ரூ. 1·4 லட்சம்)

பேரூரணி குளங்கள்

ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் பேரூரணி ஏரி குளங்கள் வசதிகளை ஆராய்தல் (செலவு மதிப்பு ரூ. 1·5 லட்சம்); தாமிரபரணியி லிருந்து கால்வாய் வெட்டி வந்து சடையநேரி குளத்தை அபி விருத்தி செய்தல் (செலவு மதிப்பு ரூ. 1·3 லட்சம்); அம்பா சமுத் திரம் வட்டத்தில் கீழ்கடையம் கிராமத்தில் வடபத்துக்குளம் ஏரி யில் தூரெடுத்தல் (செலவு மதிப்பு ரூ. 1·2 லட்சம்); பெறந்தனேரி உபரி நீரை, நாங்குனேரி வட்டம் பழவூர் பகுதியிலுள்ள ஏரிகளுக்குத் திருப்பிவிடுதல் (செலவு மதிப்பு ரூ. 33,000);

நாங்குனேரி வட்டத்தில் தட்டுவனேரி பாசன அபிவிருத்தி வேலைகள் (செலவு மதிப்பு ரூ. 57,000); நாங்குனேரி வட்டம் இடையன்குளம் கிராமத்தில் ஏரி வேலைகள் (செலவு மதிப்பு 70,000); அம்பா சமுத்திரம் வட்டம் அய்யம்பிள்ளை குளத்தில் தூரெடுத்தல் (செலவு மதிப்பு ரூ. 83,000); ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் கீழ்குளம் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல் (செலவு மதிப்பு ரூ. 95,000); திருநெல்வேலி வட்டத்தில் நாயினர்குளம் ஏரியில் தூரெடுத்தல் (செலவு மதிப்பு ரூ. 42,000);

மேலே சொல்லப்பட்டவை, ஆராயப்பட்டுள்ள திட்டங்களாகும்.

அரும்பிலே உள்ளவை

ஆராயப்பட்டுவரும் திட்டங்கள் பின்வருமாறு: நாங்குனேரி வட்டம் நாடாருரை கிராமத்தில் பாசன வசதிக்கான ஏற்பாடு; தென்காசி வட்டத்தில் சுரண்டை கிராமத்தில் பெரிய குளம் ஏரி வேலை; சங்கரன் கோவில் வட்டம் சொக்கம்பட்டி கிரா மத்தில் வாசுதேவ நல்லூரில் தேக்கம் அமைத்தல்; நாங்குனேரி வட்டத்தில் பச்சையாறு தேக்கம் அமைத்தல்; சங்கரன்கோவில் வட்டம் பனவடலியில் தேக்கம் அமைத்தல்: கோவில்பட்டி வட்டம் பொம்மையபுரம் கிராமத்தில் கால்வாய் அமைத்தல்; திருநெல்வேலி வட்டம் பரப்ப குளத்தில் ஏரி வேலை; ஒட்டப் பிடாரம் வட்டாரத்தில் மேலப்பட்டியில் கூட்டுறவுமுறை இணைப்புப் பண்ணை அமைத்தலும், பாசனத்துக்கான ஏரியை அமைக்கும் சாத்தியக் கூறுதலை ஆராய்தலும்.

ஆராயப்பட உள்ள திட்டங்கள் வருமாறு:—கோவில்பட்டி வட்டத்தில் நம்பிபுரம் கால்வாய்; உப்புரோடை பக்கிள் கால்வாய்

திட்டம் ; ஸ்ரீவைகுண்டம் வட்டம் சேர்வைக்காரன் மடத்தில் ஏரி அமைப்பு ; திருச்செந்தூர் வட்டத்தில் வெள்ள மடத்தில் ஏரி அமைப்பு ; ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் ஆறுமுகமங்கலம் புலியம்கல், மாரிசன் கோட்டை குளம் ஆகியவைகள் தூரெடுப்பு ; தாத்தன் குளம் கருங்குளம் கிராமத்தில் ஏரியைச் செப்பனிடல் ; வைப்பாறு நதிக்கு குறுக்கே தேக்கம் அமைத்தல் ; ராஜகுளராம பேரி ஏரி அபிவிருத்தி வேலே ; சொக்கம்பட்டி கிராமத்தில் வாசுதேவ நல்லூர் அருகே தேக்கம் அமைத்தல் ; தென்காசி வட்டம் சுரண்டை கிராமத்தில் பெரியகுளம் ஆய்வு வேலே; சங்கரன்கோவில் வட்டம் கரிவலம் வந்த நல்லூர் ஏரியைச் செப்பனிடல் ; சங்கரன்கோவில் வட்டம் பெரும்பத்தூர் ஏரியைச் செப்பனிடல் ; சங்கரன்கோவில் வட்டம் பட்டைகுளம் ஏரியைச் செப்பனிடுதல் ; நாங்குனேரி வட்டம் மதுமோதமலி கிராமத்துக்குப் பாசனவசதி ; செங்கோட்டை வட்டத்தில் கள்ளர் தேக்கத் திட்டம் ; நாங்குனேரி வட்டம் நம்பியாறுக்கு குறுக்கே தேக்கம் அமைத்தல் ஆகியவை ஆராயப்பட உள்ள திட்டங்களாகும்.

தமிழ் நாட்டில் நதி நீர்வளங்கள் அநேகமாக எல்லாமுமே பயன் படுத்தப்பட்டு விட்டன. சிறு பாசனத் திட்டங்களிலும் அரசாங் கம் தீவிர அக்கறை காட்டுவதை மேலே குறிப்பிட்ட விவரங்களி லிருந்து அறியலாம். பாசனத் திட்டங்கள் மூலம் கிடைக்கும் நீரை பயன்படுத்திக் கொள்வதில் தமிழ்நாடு முதன்மை வகிக்கின்றது.

உற்பத்தி உயர்வு

வேளாண்மைதான் மக்களுக்கு உணவளிக்கும் தொழில். அத்துடன் பல்வேறு தொழில்களுக்கு அது தாய்த் தொழிலும் ஆகும். நமது நாட்டின் பொருளாதாரத்துக்கு அடிக்கல்லாக விளங்குவது வேளாண்மையே. நாட்டு மக்களில் பெரும் பகுதியினர் விவசாயிகளே.

திருநெல்வேலி மாவட்டத்தில் 80 சத வீதத்துக்கு மேற்பட்ட மக்கள் வேளாண்மையை நம்பியே வாழ்கின்றனர். என்றும் வற்றாது சுரக்கும் தாமிரபரணி ஆறு மாவட்டத்தின் பாசன வசதிக்கும் வேளாண்மைத் தொழில் முன்னேற்றத்துக்கும் பெரிதும் பயன்படுகிறது. சிற்றாறு, மணி முத்தாறு, சீராறு, கடன நதி ஆகியனவும் வேளாண்மைக்கு உதவுகின்றன.

நெல்லை மாவட்டத்துக்கு, வடகிழக்குப் பருவ மழைதான் அதிகப் பயன் கொடுக்கிறது. இந்த மழையின் உதவியால் தான் பிசாணம் நெல் சாகுபடி வெற்றிகரமாக நடைபெறுகிறது. தென் மேற்குப் பருவ மழை குறுகியகால கார் நெல் விளைச்சலுக்கு உதவியாக இருக்கின்றது.

மாநிலத்தில் உணவு தானிய பற்றுக்குறையைத் தீர்ப்பது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின், முக்கிய நோக்கமாகக் கொள்ளப் பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது நோக்கங்கள் விரிவடைந்தன. அதிகரித்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி பெருகி வரவேண்டும் என்பதும், தொழில்வளம் பெருக வேண்டும் என்பதும் முக்கிய நோக்கங்களாயின. எனவே, இரண் டாவது திட்ட காலத்திலும் வேளாண்மை அபிவிருத்திக்கு தொடர்ந்து முக்கிய இடம் அளிக்கப்பட்டது.

திருநெல்வேலி என்பது அழகான பெயர். நெல் என்னும் சொல் அதில் நடுநாயகமாக விளங்குகிறது. எனவே நெல்லை மாவட்டத்தில் நெல் முக்கிய விளைபயிராக இருப்பதில் வியப்பில்லை, மாவட்டத்தில் மொத்தம் மூன்றரை லட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப் படுகிறது. மாவட்டத்தில் மொத்த தானிய உற்பத்தியில் 70 சத விதம் நெல் ஆகும்.

நெல்லை மாவட்டத்தின் முக்கிய விளைபொருள் வகையும், அவை பயிரிடப்படும் நிலத்தின் பரப்பளவும் பின்வருமாறு :

பயிர் வகை	ஏக்கர்
நெல்	333990
சோளம்	83250
கம்பு	190260
ராகி	24210
பருத்தி	235130
வேர்க்கடலை	7890
எள்	32700
தென்னை	5520
ஆமணக்கு	520
புகையிலை (தாம்பூலரகம்)	230

நெல்லை மாவட்டத்தின் வாணிபப் பயிர்களில் முக்கியமானவை மிளகாயும் வேர்க்கடலையும் ஆகும்.

ஒன்றரை மடங்கு உற்பத்தி

திருந்திய சாகுபடி முறைகள் மூலம் ஏக்கர் விகித உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் முனைப்பான நடவடிக்கைகளை மேற் கொண்டது. குடியானவர்களும் அரசாங்கத்தின் முயற்சியுடன் இணைந்து ஒத்துழைத்தார்கள். இதன் விளைவாக தானிய உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது. 1950-51ல் மாவட்டத்தில் அரிசி உற்பத்தி 174000 டன்னாக இருந்தது. 1960-61 க்கான மதிப்பீட் டின்படி, இந்த உற்பத்தி 259000 டன்னாக அதிகரித்துள்ளது.

1950-51ல் புன்செய் தானியங்கள் உற்பத்தி 71160 டன்னாக இருந்தது. 1960-61 மதிப்பீட்டின்படி புன்செய் தானிய உற்பத்தி 109,780 டன் ஆகும். அதாவது அரிசி உற்பத்தி கிட்டத்தட்ட 50 சத வீதமும், புன்செய் தானிய உற்பத்தி 50 சத வீதத்துக்கு கொஞ்சம் கூடுதலாகவும் அதிகரித்திருக்கிறது.

பருத்தி உற்பத்தி 40 சத வீதம் அதிகரித்துள்ளது. 1950-51ல் உற்பத்தி 60150 பேல்கள்; 1960-61ல் உற்பத்தி 85,300 பேல்களாக உயர்ந்துள்ளது.

பொறுக்கு விதைகள், ரசாயன உரங்கள், எரு, பயிர்ப் பாதுகாப்பு முறைகள், ஜப்பானிய சாகுபடி முறை ஆகிய பல வழிகள் மூலம் உற்பத்தி உயர்வுக்கு வழி கோலப்பட்டது. உற்பத்தியை தொடர்ந்து அதிகரிக்க அரசாங்கம் நிலையான ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

நெல் ஆராய்ச்சி நிலையம்

விதையொன்று போட்டால் சுரையொன்று முளைக்காது. நல்ல விளைச்சல் கிடைக்க வேண்டுமானால், நோய் நொடி இல்லாமல் பயிர் வளரவேண்டுமானால், பொறுக்கி யெடுத்த தரமான விதை

தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சைக்கும், திருச்சிக்கும் அடுத்தபடியாக, நெல் விளைச்சலில் மூன்றாவது ஸ்தானத்தில் இருப்பது திருநெல்வேலி. விளைந்த கழனியில் அறுவடைக் காட்சி.

தேவை. குறிப்பிட்ட பகுதியில் மண் வளத்துக்கும், பாசன வசதிக்கும் ஏற்றதான விதை ரகங்களைக் குறிப்பிட்டுக் கூறுவதற்காக அம்பா சமுத்திரத்தில் நெல் ஆராய்ச்சி நிலையம் பணி புரிகின்றது. பல்வேறு பகுதிகளுக்கும் ஏற்றதும் தேவையானதுமான விதை நெல் ரகங்களை அது வழங்குகிறது. இந்த நெல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெறப்படும் விதைகள், அரசாங்கத்தால் நடத்தப்படும் விதைப் பண்ணைகளில் பெருக்கப்படுகின்றன. இப்படிப் பெருக்கப்பட்ட விதைகள் விவசாய டிபோக்கள் மூலம் குடியானவர்களுக்கு வழங்கப்படுகின்றன. பின்னர் அவை குடியானவர்களின் நிலங்களில் கிராம விதைப் பண்ணைகளில் பெருக்கப்படுகின்றன.

நெல்லை மாவட்டத்தில் கரையிருப்பில் ஒன்றும் மணிமுத்தாற்றில் ஒன்றுமாக இரண்டு அரசாங்க விதைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. கரையிருப்பு பண்ணை 81 ஏக்கர் பரப்புள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 150 டன் விதை நெல் உற்பத்தியாகின்றது. 1957 லிருந்து இந்த விதைப் பண்ணை இயங்கி வருகின்றது. மணிமுத்தாற்றில் உள்ள அரசாங்க விதைப் பண்ணை 50 ஏக்கர் பரப்புள்ளது. இது புதிதாகத் தொடங்கப்பட்டதாகும்.

பொறுக்கு விதைகள்

முதலாவது இரண்டாவது திட்ட காலங்களில் பல்வேறு பிரிவுகளிலும் ஏற்பட்டுள்ள சாதனைகள் வருமாறு:

மாவட்டத்தில் மண் வாசிக்கு ஏற்ப, வேளாண்மை துறை சிபார்சு செய்யும் தரமான விதைகளை வழங்குவதற்காக, பொறுக்கு விதை வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த விதைகள் நோய்க் கிருமியில்லாதவை. நன்கு முளைத்து சீராக வளரக் கூடியவை. அத்துடன் அதிகமான விளைச்சலும் தரக் கூடியவை.

வழங்கப்பட்ட பொறுக்கு விதை நெல் ரகம் :—ஏ. எஸ். டி 1; ஏ. எஸ். டி 6.; டி. கே. எம். 6; ஏ. எஸ். டி. 4; ஏ. எஸ். டி. 8; ஏ. எஸ். டி. 5; கோ. 25; சோளம் : கே. 2; கோ. 18; கம்பு: கே. 1; ராகி : கே. 2.

சென்ற பத்து ஆண்டுகளில் 11840 டன் பொறுக்கு விதை நெல் வழங்கப்பட்டது. அதாவது முதல் திட்ட காலத்தில் 1370 டன்கள். இரண்டாம் திட்ட காலத்தில் 10470 டன்கள்.

சென்ற 10 ஆண்டுகளில் 1368 டன் பொறுக்கு புன்செய் தானிய விதைகள் வழங்கப்பட்டன. முதல் திட்ட காலத்தில் 205 டன்களும், இரண்டாம் திட்ட காலத்தில் 1163 டன்களும் வழங்கப்பட்டன.

எரு உதவுவது போல எவரும் உதவார் என்பது பழமொழி. குடியானவர்கள் இந்தப் பழமொழியின் உண்மையை நன்கு உணர்ந்

துள்ளனர். வேளாண்மை நடவடிக்கைகள் முனைப்படைந்திருப்பதின் காரணமாக, இப்போது தேவைக்குப் போதுமான அளவு எரு கிடைப்பதில்லை, ரசாயன உரங்களும் போதிய அளவு கிடைப்பதில்லை. உர தட்டுப்பாட்டை நீக்குவதற்கு, தழை உர உற்பத்தி ஒரு சிறந்த வழி. தவிர தழை உரம் அதிகம் சத்துமுள்ளது. எனவேதான் தழை உர உற்பத்தியில் அதிக கவனம் செலுத்துமாறு வேளாண்மை துறையினர், குடியானவர்களுக்கு ஆலோசனை கூறுகின்றனர். குடியானவர்களுக்கு தழை உர விதைகளை வழங்குகின்றனர். இந்த வகையில் முதல் திட்ட காலத்தில் 64 டன் விதைகளும் இரண்டாம் திட்ட காலத்தில் 371 டன் விதைகளும் வழங்கப்பட்டன.

பயிர்களுக்குப் பூச்சியினுலும் நோயினுலும் ஏற்படும் சேதம், மொத்த உற்பத்தியில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு இருக்கும் என்று மதிப்பிடுகிருர்கள். பூச்சி விழாமல் தடுப்பதிலும் பயிர்களுக்கு பூச்சி நோயைத் தீர்ப்பதிலும் இப்போது முனைப்பான கவனம் செலுத்தப்படுகிறது. கிருமி மூலமான நோய்த் தடுப்பு பணியில் இரு அதிகாரிகளும், பூஞ்சாணப் பிரிவில் இரு அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர். தஞ்சை பயிர்ப் பாதுகாப்பு அதிகாரி, மதுரை பயிர்ப் பாதுகாப்பு அதிகாரி ஆகியவர்களின் மேற் பார்வையின் கீழ் அவர்கள் பணியாற்றுகின்றனர்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 625 டன் பூச்சி கொல்லி, பூஞ்சாண மருந்துகளும், இரண்டாவது திட்ட காலத்தில் 970 டன் மருந்துகளும் வழங்கப்பட்டன. முதல் திட்ட காலத்தில் 2·7 லட்சம் ஏக்கரிலும், இரண்டாவது திட்ட காலத்தில் 3 லட்சம் ஏக்கரிலும் இந்த மருந்துகள் பயன் படுத்தப்பட்டன.

ஜப்பானிய முறை சாகுபடி

திருந்திய சாகுபடி முறைகள் மூலம், உற்பத்தியை அதிகரிக்கத் தூண்டுவதே ஜப்பனிய சாகுபடி முறையின் நோக்கமாகும். பொறுக்கு விதைகளைப் பயன்படுத்தல், ரசாயன உரங்களைப் போதுமான அளவு போடுவது, வரிசையாக நாற்று நடல், ஊடு பயிர் ஆகிய நான்கும் இந்த முறையில் முக்கியமான அம்சங்களாகும்.

நெல்லை மாவட்டத்தில் மிகப் பெரும்பாலான நெல் வயல்களில் ஜப்பானிய முறை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

தேங்காய் எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்காக குடியானவர்களுக்கு தரம் உயர்ந்த தென்னங்கன்றுகளை வழங்கும் திட்டமும் செயலாக்கப்பட்டு வருகின்றது. செங்கோட்டையில் தென்னம்பிள்ளை பயிராக்கும் பண்ணை ஒன்று இருக்கிறது. ஆண்டு

ஒன்றுக்கு அங்கு 27,000 தென்னம்பிள்ளைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. முதல் திட்ட காலத்தில் 26,050 தென்னம் பிள்ளைகளும், இரண்டாவது திட்ட காலத்தில் 58,950 தென்னம் பிள்ளைகளும் வழங்கப்பட்டன.

தென்னைகளுக்கு கம்பளிப் புழு நோயைத் தடுப்பதற்காக, உடன்குடியில் ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம் இருக்கிறது. அங்கு உற்பத்தி செய்யப்படும் பூச்சிகள், தென்னையில் தோன்றும் புழுக்களை அழிப்பதற்கு, இலவசமாகத் தரப்படுகின்றன.

தளரா வளர் தெங்கு

தென்னை பயிரிடுவோருக்கு நீண்ட கால அடிப்படையில் ரசாயன உரங்கள் அளித்தும் அரசாங்கம் உதவி செய்கிறது. ரசாயன உரப் பலன்களை நடைமுறையில் காட்டுவதற்கான தென்னம் பாத்திகள் வைத்திருப்பவர்களுக்கு ரூ. 50 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. நெல்லை மாவட்டத்தில் தென்னை அபிவிருத்தி வேலைகளைக் கவனிப்பதற்கென்று தென்னை அபிவிருத்தி உதவி அதிகாரி ஒருவர் பணியாற்றி வருகிறார்.

நெல்லை மாவட்டத்தில், மண்வாசிக்கு ஏற்ற தரமான விதைப் பருத்திக் கொட்டைகளை வழங்கி, பருத்தி சாகுபடி பரப்பளவை அதிகரிக்கும் திட்டத்தின் கீழ் எம். யூ. சி 1 ; எம். யூ. சி 2 ; கே 2 ;

குற்றாலத்தில் உள்ள பழத்தோட்டம்



கே 6 ஆகிய விதை ரகங்கள் வழங்கப்பட்டன. முதல் திட்ட காலத்தில் 25500 மணங்கு விதைகளும், இரண்டாம் திட்ட காலத்தில் 39500 மணங்கு விதைகளும் வழங்கப்பட்டன.

எண்ணெய் வித்துக்களைப் பொறுத்த வரையில் நெல்லை மாவட்டத்தில் சிறு அளவிலேயே வேர்க்கடலை போன்றவை பயிரிடப்பட்டு வந்தன. ஆனல் முதலாவது இரண்டாவது திட்ட காலங்களில் எண்ணெய் வித்து பயிர் பரப்பளவு 25 லிருந்து 35 சத வீதம் வரை அதிகரித்திருக்கிறது. மணிமுத்தாறு பாசனப் பகுதியில் வேர்க்கடலைச் சாகுபடி 50 சத வீதத்துக்கு மேல் அதிகரித்திருக்கிறது.

பழத் தோட்டங்கள்

பழ வகைகள் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. பழைய பழத் தோட்டங்களுக்குப் புத்துயிரூட்டுவதும், திருந்திய சாகுபடி முறைகளை மேற்கொள்வதும் இதில் முக்கிய வேலைகளாகும். நெல்லை மாவட்டத்தில், தோட்டக் கலை அதிகாரி ஒருவர் இந்த வேலையைக் கவனித்து வருகிறர். - இரண்டாம் திட்ட காலத்தில், இத் திட்டத்தின் கீழ் ரூ. 48,940 நீண்ட கால கடனுகை வழங்கப்பட்டது. ரூ. 10,980 குறுகிய கால கடனுகை வழங்கப்பட்டது. மொத்தம் பயனடைந்த நிலப்பரப்பு 332 ஏக்கராகும்.

முந்திரி சாகுபடி அபிவிருத்திக்காக நெல்லை மாவட்டத்தில் இரண்டாவது திட்ட காலத்தில் ரூ. 4090 கடன் வழங்கப்பட்டது இதனல் பயனடைந்த நிலப்பரப்பு 51 ஏக்கர்.

வேளாண்மைப் பெருக்கத்துக்காக ரசாயன உரங்கள் வழங்குவதென்பது அரசாங்கத்தின் முக்கியமான ஒரு திட்டமாகும். தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ், குடியானவர்களுக்கு ரசாயன உரங்கள் வழங்குவதற்காக, குறுகிய கால கடன், சொந்த ஜாமீன் பேரில் ரூ. 750 வரையும், கூடுதல் ஜாமீன் பேரில் ரூ. 1500 வரையும் தரப்பட்டது. குறிப்பிட்ட வகைக் கலவை உரங்கள் வாங்கவும் இக் குறுகிய கால கடன் வசதி நீடிக்கப்பட்டது.

முதல் திட்ட காலத்தில் 33,000 டன் அமோனியம் சல்பேட்டும், 900 டன் சூபர் பாஸ்பேட்டும் வழங்கப்பட்டன. இரண்டாம் திட்ட காலத்தில் 27,000 டன் அம்மோனியம் சல்பேட்டும், 1700 டன் சூபர் பாஸ்பேட்டும் வழங்கப்பட்டன.

ஊரியா, அம்மோனியம் சல்பேட், நைட்ரேட், கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் போன்ற புதிய நைட்ரஜன் சத்து ரசாயன உர வகைகளைப் பிரபலப்படுத்துவதற்கான திட்டத்தையும் அரசாங்கம் மேற்கொண்டது. இத் திட்டப்படி புதுவகை ரசாயன

கோவில்பட்டி அரசாங்க விவசாயப் பண்ணைக் கட்டிடம்

உரங்கள் மூலம் பயன்பெறும் முறையை செய்முறையில் காட்டு பவர்களுக்கு அந்த உர வகைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நெல்லை மாவட்டத்தில் கிராமப் புறங்களில் 67,100 டன் கழிவு உரம் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. இரண்டாவது திட்ட காலத்தில் 436,500 டன் கழிவு உரம் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மருந்து தெளிக்கும் கருவிகள்

பயிர்ப் பாதுகாப்பு வேலையில் மருந்து தெளிக்கும் கருவிகளைப் பெற வகை செய்வது ஒரு முக்கியமான வேலையாகும். நெல்லை மாவட்டத்தில் இரண்டாவது திட்ட காலத்தில் 1100 மருந்து அடிக்கும் கருவிகள் வழங்கப்பட்டன. கருவிகளைச் சலுகை விலையில் வழங்கிய வகையில் அரசாங்கம் உதவியிருக்கும் தொகை ரூ. 45,000 ஆகும்.

முதல் திட்ட காலத்தில் 30000 பழ மரச் செடிகள் குடியான வர்களுக்கு வழங்கப்பட்டன. இரண்டாம் திட்ட காலத்தில் 1,57,000 செடிகள் வழங்கப்பட்டன. வட்டார வளர்ச்சிப் பகுதி களில் குறைந்த செலவில் செடிகள் வழங்கப்படுகின்றன.

போஸ் கலப்பை போன்றவைகளும் திருந்திய முறை பரம் படிக்கும் கருவிகள், இதர வேளாண்மை கருவிகளும் குடியானவர் களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த வகையில் முதல் திட்ட காலத்தில் 6590 கருவிகளும், இரண்டாவது திட்ட காலத்தில்

9410 கருவிகளும் வழங்கப்பட்டன. வட்டார வளர்ச்சிப் பகுதிகளில் ஏழைக் குடியானவர்களுக்கு, இவை பாதி விலையில் தரப்படுகின்றன.

தரிசு நிலங்களை மீட்டு பண்படுத்துவதற்காக டிராக்டர்கள் வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இந்த வகையில் 9273 ஏக்கர் நிலங்கள் உழப்பட்டன. 1332ஏக்கர் நிலங்கள் சமன்படுத்தப் பட்டன. டிராக்டர்கள் புல்டோஜர்கள் தேவை மிகவும் அதிகரித்துள்ளது.

காய்கறி வகைகளில் தரமான பொறுக்கு விதைகள், குடியானவர்களுக்கு வழங்கப்படுகின்றன. வட்டார வளர்ச்சிப் பகுதிகளில் இந்த விதைகள் சலுகை விலையில் தரப்படுகின்றன.

நெல்லை மாவட்டத்தில் புகையிலை சாகுபடி அபிவிருத்திக்கான புதிய திட்டம் ஒன்று இரண்டாவது திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. அத் திட்டத்தின் கீழ் ராதாபுரம், வள்ளியூர் பகுதிகளில் 1960—61 ல் 100 ஏக்கர் பரப்பில் புகையிலை பயிர் செய்யப்பட்டது. வள்ளியூர் வட்டாரத்தில் புகையிலைச் சாகுபடி நடைமுறை வேலைகளும் செய்து காண்பிக்கப்பட்டன.

திருச்செந்தூர் வட்டம் உடங்குடிப் பகுதியிலும் ஆத்தூர் பகுதியிலும் வெற்றிலைக் கொடிக்கால்கள் உள்ளன. உடங்குடியில் 120 ஏக்கர் பரப்பில் வெற்றிலைக் கொடிக்கால் உள்ளது. ஆத்தூர்ப் பகுதி செழிப்பான மண் வளமுள்ளது. இப் பகுதி வெற்றிலை தரத்தில் சிறந்தது. உடங்குடி பகுதியில் அண்மையில் வெற்றிலைக் கொடிக்கால் நோய் தென்பட்டது. தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்தம்

உழவர்கள் நியாயமான உரிமைகளைப் பெறவும், தங்கள் உழைப்புக்குரிய பலனை பூராவாக அடையவும் வகை செய்வதற்காக தமிழ்நாடு அரசாங்கம் நிலச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றி அமுலாக்கி வருகின்றது. சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், வேளாண்மை செய்யும் குடியானவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றது. சாகுபடியில் 60 : 40 என்ற நியாயவார நிர்ணயத்தினுல், உழவர்கள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர். கிராம மக்களின் நல்வாழ்வுக்காக அரசாங்கம் இயற்றியுள்ள பல்வேறு சட்டங்களின் தன்மையையும் மக்கள் நன்கு அறிந்து கொண்டுள்ளனர்.

காடுகள் எதற்கு?

நாட்டின் தட்பவெப்ப நிலையைப் பாதுகாக்கவும், மழை பொழியச் செய்யவும், மண் அரிப்பைத் தடுக்கவும் காடுகள் மிகவும் அவசியமானவை. இயற்கை அழகு, வன விலங்குகள், வனப் பொருள்கள் ஆகியவைகளைக் கருதியும் வனப் பாதுகாப்பு அவசியமாகும். நெல்லை மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 4407 சதுர மைலில் சுமார் 547 சதுரமைல் காடுகளாகும். இதில் பாதுகாக்கப்பட்ட காடுகள் பரப்பு 449 சதுரமைல். மொத்த நிலப்பரப்பில் காடுகள் பரப்பளவு 13 சதவீதம் ஆகும். தேக்கு, கொங்கு, விருவெட்டை, ஒடை ஆகியவை நெல்லை மாவட்டத்தின் முக்கியமான மர வகைகள்.

1951-ஆம் ஆண்டுவரை திருநெல்வேலி டிவிஷனில் விறகு மரக்காடுகள் பரப்பளவு 1107 ஏக்கர் மட்டுமேயாகும். முதல் திட்ட காலத்தில் 2540 ஏக்கரில் காடுவளர்ப்பு வேலை மேற்கொள்ளப்பட்டது. முதல் திட்டகாலத்தில் 158 ஏக்கரில் தேக்கும் 525 ஏக்கரில் முந்திரியும் பயிரிடப்பட்டன. கொழுந்து மலைப்பகுதியில் மண் அரிப்பைத் தடுப்பதற்காக 50 ஏக்கரில் காடு வளர்ப்பு வேலை மேற்கொள்ளப்பட்டது. திருநெல்வேலி டிவிஷனில் 152 ஏக்கரில் மூங்கில் பயிர் செய்யப்பட்டது.

தேக்கு வளர்ப்பு



இரண்டாவது திட்ட காலத்தில் குறுமலை, முத்தாறு, கங்கை கொண்டான், சிங்கம்பட்டி பகுதிகளில் 1812 ஏக்கரில் பலஜாதி விறகு மரங்கள் பயிராக்கப்பட்டன. சாலைகுளத்தில் 1860 ஏக்கரில் முந்திரி பயிர் செய்யப்பட்டது. தாமிரபரணி கரையில், 358 ஏக்கர் பரப்பில் தேக்கும், வேறு மரங்களும் பயிரிடப்பட்டன. கங்கைகொண்டானில், தீனி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 50 ஏக்கரில் புல் வளர்க்கப்பட்டது. திருநெல்வேலி டிவிஷனில் முக்கியமான வனப் பொருள்கள் தேன், மெழுகு, மா, லவங்கம், கொன்னை, முந்திரி, மிளகு, புளி, பனை, பிரம்புக் கோரை முதலியன.

செங்கோட்டை டிவிஷனில் இரண்டாவது திட்டக் காலத்தில், குற்றாலம் ரேஞ்சு மாயமான் குறிச்சி, சிவலார்குளம், ஊத்துமலை, கிருஷ்ணபுரம் ஆகிய பகுதிகளில், மண் அரிப்புத் தடுப்பைக் கருதி 1077 ஏக்கரில் காடுவளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. வாகை, புளி, வேம்பு, கொடுக்காப்புளி, யூகலிப்டஸ், முந்திரி ஆகிய வகைகள் பயிர் செய்யப்பட்டன. இதற்காக ஆன செலவு ரூ. 36546 ஆகும்.

இரண்டாவது திட்ட காலத்தில் குற்றாலம், செங்கோட்டை ரேஞ்சுகளில் 495 ஏக்கரில் தேக்கு பயிரிடப்பட்டது. இதற்குச் செலவான தொகை ரூ. 12,267. தேக்கு வளர்ச்சி திருப்திகரமாக இருக்கிறது.

தீக்குச்சி மரங்கள்

இரண்டாவது திட்ட காலத்தில் அம்பாசமுத்திரம், சங்கரன் கோவில் ஆகிய ரேஞ்சுகளில் தீக்குச்சி தயாரிப்புக்கான மென் மரங்கள் பயிர் செய்யப்பட்டன.

பூலாங்குடியிருப்பு, கோவிந்தபேரி, கடைய நல்லூர், ஊத்துமலை, முண்டந்துறை ஆகிய ஐந்து இடங்களில் வனத்துறை காவல் ஊழியர்களுக்காக மொத்தம் 5 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

திருநெல்வேலி தெற்கு டிவிஷன் நாகர்கோயில் அரக்கு உற்பத்திப் பண்ணையில் 1960-61 உடன் முடிந்த மூன்று ஆண்டுகளில் 3184 ராத்தல் அரக்கு உற்பத்தியாகியிருக்கிறது.

விலங்குச் செல்வம்

வேளாண்மைப் பெருளாதாரத்தில் முக்கிய அம்சமாக விளங்குவது விலங்குச் செல்வம். வயல் வேலைகளுக்கும் வண்டிகளுக்கும் மாடுகளே நம் நாட்டில் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றன. மாடு என்ருல் செல்வம் என்றும் ஒரு பொருள் உண்டு. நம் நாட்டில் கால்நடைகள் தொகை, மிகவும் அதிகம். ஆனுல் அவை

தரம் குன்றியவை. உழைப்புச் சக்தியும், பால் கறக்கும் சக்தியும் குறைவு. தரமான பொலிகாளைகளை வழங்கியும், செயற்கைச் சூல் முறை மூலமும், தரமான கால்நடைகளை உருவாக்க அரசாங்கம் முனைந்து பணியாற்றி வருகின்றது. உழைப்பில் சிறந்த காளைகள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நெல்லை மாவட்டத்தில் காங்கயம் பொலிகாளைகள் பயன்படுத்தப்படுகின்றன. முர்ரா கிடாக்களைப் பயன்படுத்தி, எருமைகளின் தரத்தை உயர்த்தி மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகரிக்க வழி செய்யப்பட்டிருக்கிறது.

தரம் உயர்கின்றது

நகரப் பகுதிகளில் இயற்கை முறையிலும் செயற்கைச் சூல் முறையிலும் கால் நடைகள் தர அபிவிருத்திக்காக ஸிந்தி காளைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஸிந்தி இனப் பெருக்கத்தினுல், பால் உற்பத்தி அதிகரித்து வருகிறது. ஆடுகளை நல்ல முறையில் வளர்த்து, இறைச்சி தரத்தை உயர்த்துவதற்காக, இராமநாதபுரம் வட்டாரத்து ஆட்டுக்கிடாக்கள் பயன்படுத்தப்படுகின்றன. அயல் நாட்டுச் சேவல் வகைகளைச் சேர்த்து, நாட்டுக் கோழிகள் தர அபிவிருத்திக்கும், முட்டையிடும் திறனைப் பெருக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஏற்பாடுகளின் விளைவாக நெல்லை மாவட்டத்தில் கால் நடைகள் தரத்திலும், பால் உற்பத்தி அளவிலும், தரமான கோழிகள் வகையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

முதலாவது இரண்டாவது திட்டக் காலங்களில் மொத்தம் சுமார் 2·8 லட்சம் விலங்குகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. கால் நடைகள் தர அபிவிருத்தி கருதி, வளர்ச்சி குன்றிய உள்ளூர்ப் பொலிகாளைகள் காயடிக்கப் பட்டன.

சென்ற 10 ஆண்டுகளில் 581 தடவை கால்நடை தொத்து நோய் கேஸ்கள் கவனிக்கப்பட்டன. தொத்து நோயைத் தடுக்க மொத்தம் 13 லட்சம் தடுப்பு ஊசிகள் குத்தப்பட்டன. இனப் பெருக்கத்துக்காக 88 பொலிகாளைகள் வழங்கப்பட்டன. இராமநாத புரம் பொலி கிடாக்கள் மொத்தம் 485 வழங்கப்பட்டன. அயல் நாட்டு சேவல்கள் மொத்தம் 3578 வழங்கப் பட்டன. செயற்கை முறை சூல் நிலையங்களுக்கு, இரண்டாம் திட்டகாலத்தில் 7828 விலங்குகள் கொண்டு வரப்பட்டன. செயற்கைச் சூல் முறையில் பிறந்த கன்றுகள் 1643. கால்நடை நலப் பரப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 200 பொலி காளைகள் வழங்கப்பட்டன. முதல் திட்ட காலத்தில் 18 கால்நடைக் காட்சிகளும், இரண்டாம் திட்ட காலத்தில் 25 கால்நடைக் காட்சிகளும் நடைபெற்றன.

பால் வற்றிய கால்நடைகள் பராமரிப்புக்காக, அபிஷேகபட்டி கிராமத்தில் ஆயிரம் ஏக்கர் பரப்பில் ஒரு பண்ணை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்த நிலம் திருநெல்வேலி சுவாமி நெல்லையப்பர் ஆலயத்துக்குச் சொந்தமானது. 500 கால் நடைகளுக்கு அதில் இடவசதி உள்ளது. பால்வற்றிய கால் நடைகள் அங்கு பராமரிக் கப்பட்டு, செயற்கைச் சூல் முறை அனுசரிக்கப்படுகிறது. கன்று ஈன்றவுடனே இவை, சொந்தக்காரர்களுக்கு திருப்பி அனுப்பப்படு கின்றன. செங்கோட்டைப் பகுதியில் கால்நடை வளர்ப்புச் சங் கம் ஒன்றும் கூட்டுறவுத் துறையால் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு கால்நடைகள் தர உயர்வுக்காக 3 பொலிகாளைகள் விடப் பட்டுள்ளன. கால்நடை தீவன அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

நாங்குனேரி வட்டத்தில் ஒரு சிறிய கால்நடை மருத்துவ மனை யும், இரண்டு முதலுதவி நிலையங்களும் பணியாற்றி வருகின்றன. வள்ளியூர், ராதாபுரம் சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களிலும் கால்நடை நல வேலைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. உயர் ரக பொலிகாளைகள், செம்மறிக் கிடாக்கள், வெள்ளை லெக்காண் சேவல் கள் வழங்கப்படுகின்றன. வள்ளியூர் கால்நடை மருத்துவ மனை யில் ஒரு ஸிந்தி பொலிகாளை வைக்கப்பட்டுள்ளது. நாங்குனேரி வட்டத்தில் சிந்தி காளைகள் 4; காங்கயம் காளைகள் 10; முர்ரா 6; செம்மறிக் கிடாக்கள் 65 உள்ளன.

மீன் வளம்

மீன் ஊட்டச் சத்து நிரம்பிய உணவு. மக்கள் உணவில் ஊட்டச் சத்தை அதிகரிப்பதற்காகவும், மீனவர் நலனைப் பேணும் வகையிலும், அரசாங்கம் மீன்பிடித் தொழில் வளர்ச்சிக்கு நல்ல ஊக்கமளித்து வருகின்றது. திருநெல்வேலி மாவட்டம் சுமார் 85 மைல் தூரம் கடற்கரையைக் கொண்டுள்ளது. இக்கடற் கரைப் பகுதியில் மீனவர்கள் அதிகமான அளவில் வாழ்கிறார்கள்.

முதலாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ், மீனவர்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட வேலைத் திட்டங்களை பின்வருமாறு பாகுபடுத்தலாம் :—

மீனவர் கடன்களைத் தீர்க்க உதவி; மீன்களை விற்பனை செய்வ தற்காக மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவுதல்; மீனைப்பதப் படுத்த சலுகை விலையில் உப்பு வழங்குவது; நாட்டுப் படகுகளுக்குப் பதிலாக யந்திரப் படகுகளைப் பயன்படுத்தல்; குறைந்த விலையில் நைலான் வலைகள் வழங்கல்; மீன் குஞ்சுகளைத் திரட்டி வினியோ கித்தல்; பெரிய தேக்கங்களில் மீன் வளர்த்தல், குளிர்ப்பதன அறை வசதிகள் அமைத்தல் முதலியன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள மீனவர்களுக்கு கடன் உதவி அளிக்கப்படுகிறது. இந்தக் கடனை எளிய தவணைகளில் 10 வருஷ காலத்தில் கட்டலாம்.



மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் அலுவல்களை விரிவுபடுத்துவதற்காகவும், சங்கங்களுக்கு ஏஜண்ட் முறையில் இயங்குவதற்காகவும் மாவட்ட மீனவர் கூட்டுறவு சம்மேளனம் என்ற மத்திய அமைப்பு உள்ளது. மீன்களை துரிதமாக விற்க உதவுவதும், அது சம்பந்தப்பட்ட வேலைகளுமே இந்த சம்மேளனத்தின் முக்கிய அலுவலாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரட்சண்யபுரம், ஆலந்தலை, இடிந்தகரை, பழைய காயல், அமலிநகர், தூத்துக்குடி, சிப்பிகுளம், தருவை குளம், கூத்தங்குழி, கூட்டப்புளி, குட்டப்பனை ஆகியவைகளில் உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 272,765 நீண்ட கால கடனுக வழங்கப்பட்டது.

மீனளங்கள்

மீன்களை சுகாதார முறையில் பதப்படுத்துவதில் உதவுவதற்காக, மீனளங்களுக்குச் சலுகை விலையில் உப்பு வழங்கப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் சிப்பிகுளம், பெரியதலை, ஒவரி, இடிந்தகரை, கூத்தங்குழி, கூட்டப்புளி ஆகிய ஆறு இடங்களில் மீனளங்கள் இருக்கின்றன. இரண்டாம் திட்ட காலத்தில் 66000 மணங்கு உப்பு இந்தவகையில் வழங்கப்பட்டது. பதப் படுத்தி அனுப்பப்பட்ட மீன் 223,748 மணங்குகளாகும்.

யந்திரப் படகுகள்

மீன்பிடிதொழில் நன்கு லாபம் தரும் முறையில் வளரவேண்டுமானல், யந்திரப் படகுகளை அமர்த்துவது இன்றியாமையாதது. எனவே, மீனவர்களுக்கு குறைந்த விலையில் மோட்டார் படகுகளை வழங்க அரசாங்கம் எண்ணியது. படகின் கிரயத்தை அரசாங்கம் 7 ஆண்டுகளில் திருப்பி வசூலிப்பதென்பதும் ஏற்பாடு. பணம் கட்டி முடியும் வரை, படகு அரசாங்கச் சொத்தாக இருக்கும். நெல்லை மாவட்ட மீனவர் கூட்டுறவு சம்மேளனத்துக்கு திட்ட காலத்தில் 11 யந்திரப் படகுகள் வழங்கப்பட்டன.



தூத்துக்குடியில் கட்டப்பட்டுள்ள மீன் குளிர் பதன நிலையம்

மீனவர்களுக்கு குறைந்த விலையில் நைலான் வலைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், திட்ட காலத்தில் 67 நைலான் வலைகளும், 500 ராத்தல் நைலான் நூலும் வழங்கப்பட்டது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 199,452 ராத்தல் செயற்கை நூல் இறக்குமதி செய்யப்பட்டது.

மீன்களைக் கெடாமல் பாதுகாப்பதற்காக ஐஸ் யந்திர குளிர் பதன அறை தூத்துக்குடியில் கட்டப்பட்டுள்ளது.

மீன் அங்காடிகளை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் உதவி அளிக்கிறது. தூத்துக்குடி, பாளையங்கோட்டை, மேலப் பாளையம் ஆகிய நகராட்சிகளுக்கு இந்த வகையில் உதவிப் பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது

மீன் துறைப்பயிற்சி நிலையம்

தொழில் நுட்ப உதவி நிறுவனத்தின் உதவியுடன் தமிழ் நாடு அரசாங்கம் தூத்துக்குடியில் ஏற்படுத்தியுள்ள மீன் துறைப் பயிற்சி நிலையம் இத்தொழிலில் புதிய உத்திகளில் பயிற்சி அளிக்கின்றது. 20 மீனவ மாணவர்கள் பயிற்சிக்குச் சேர்க்கப்படுகின்றனர். ஆறு மாதம் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஆண்டுக்கு மொத்தம் 40 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். 18-க்கு மேல் 35 வயதுக்கு உட்பட்டவர்களும் ஐந்தாம் வகுப்பு வரை படித்தவர்களும் 5 வருஷ கடல் அனுபவம் உள்ளவர்களுமான நபர்கள் மட்டும் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ 50 உபகாரச் சம்பளம் அளிக்கப் படுகிறது. பயிற்சிக்காக கடலுக்குச் செல்லும் காலங்களில் படித்

தொகையும் உண்டு. மீன் பிடிப்பில் புதிய முறைகள், மீன் பிடி தொழில் நுட்பம், மாலுமி சாஸ்திரம், யந்திரங்களைச் செலுத்தல், அவைகளைப் பாதுகாத்தல் ஆகியவைகளில் பயிற்சி அளிக்கப் படுகிறது.

மாணவர்களை விசைப் படகுகளில் கடலுக்கு அழைத்துச் சென்று, பாய்ச்சுவலை, இழுவலை முதலியவைகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மீன்பிடி தொழிலில் ஆராய்ச்சிக்காகவும், இத்தொழில் அபி விருத்திக்கு ஊக்கமளிப்பதற்காகவும் இந்திய அரசாங்கக் கரை யோர மீன்பிடி ஆராய்ச்சி நிலையம் 1958ல் தூத்துக்குடியில் ஏற்படுத் பட்டது. ஆய்வு வேலை சம்பந்தமாக 4 மோட்டார் படகுகள் அமர்த்தப்பட்டுள்ளன. மூன்றும் திட்டக் காலத்தில் இப்பணிக்கு மேலும் 2 பெரிய மோட்டார் படகுகள் அமர்த்தப்படும்.

தூத்துக்குடி, வேம்பாறு, புன்னைகாயல், கன்னியாகுமரி கரையோரங்களில் இந்த நிலையம் சர்வே நடத்தியுள்ளது. இந்த நிலையத்தைச் சேர்ந்த படகுகள் 1960ல் 117,283 கிலோகிராம் மீன் பிடித்துள்ளன.

முத்துக்குளிப்பு

முத்துக்குளிப்பு தமிழ் நாட்டுக்குப் பெருமை தரும் தொழிலாக விளங்குகிறது. நெல்லை மாவட்டத்துக்கு இது தனிச் சிறப் புள்ள தொழில். தமிழகத்தின் முத்துக்கள் வரலாற்றுச் சிறப் புடையவை. கிரீஸ், ரோம் நாடுகளின் வரலாற்றிலும்கூட, நமது



நாட்டு முத்தை குறிக்கக் கூடிய பகுதிகள் உள்ளன. பாண்டி வளநாடு முத்துடைத்து என்று இலக்கியங்கள் பேசுகின்றன. இந்தியாவிலேயே தூத்துக்குடி கரைப்பகுதியில்தான் முத்துச் சிப்பிகள் விளைகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த முத்துக்கள், உலகின் சிறந்த முத்து வகைகளோடு ஒப்பிடத் தக்கனவாக உள்ளன.

முத்துக் குளிப்பு பருவம் பொதுவாக மார்ச் மத்தியில் தொடங்கி, மே மத்தி வரை நீடிக்கிறது. நாடு விடுதலையடைந்த பின்பு 1955 லிருந்து தொடங்கி ஆண்டு தோறும் முத்துக்குளிப்பு நடைபெற்று வருகின்றது. முத்துக்குளிப்பு ஆரம்பமாகுமுன்பு குளியர்கள் பதிவு செய்யப்படுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் எண்கள் குறிக்கப்படுகின்றன. படகுகளும் பதிவு செய்யப்பட்டு எண்கள் குறிக்கப்படுகின்றன.

குளியர்கள் எடுத்துவரும் சிப்பிகள் மூன்று சம பங்குகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பங்கு குளியருக்கு ஒதுக்கப்படுகிறது மற்ற இரண்டு பங்குகள் அரசாங்கத்துக்குச் சேருகின்றன. ஆயிரம் சிப்பிகள் கொண்ட பைகள் ஏலத்தில் விற்கப்படுகின்றன.

சென்ற ஏழு ஆண்டுகளில் ஆண்டுதோறும் முத்துக் குளிப்பு நடைபெற்ற நாட்கள், கிடைத்த வருமானம் ஆகிய விவரங்கள் வருமாறு :

*1955*ல் மொத்தம் 44 நாட்கள் முத்துக் குளிப்பு நடைபெற்றது. வருமானம் ரூ. *1,36,526*

1956 ஆம் ஆண்டில் *18* நாட்கள் முத்துக்குளிப்பில் வருமானம் ரூ. *44,795*.

*1957*ல் *51* நாட்கள் முத்துக் குளிப்பு நடைபெற்றது. வருமானம் ரூ. *1,66,366*.

*1958*ல் *54* நாட்கள் முத்துக்குளிப்பு நடைபெற்றது. கிடைத்த வருமானம் ரூ. *4,63,097*.

*1959*ல் *63* நாட்கள் முத்துக்குளிப்பில் கிடைத்த வருமானம் ரூ. *8,00,568*.

*1960*ல் *40* நாட்கள் முத்துக் குளிப்பில் கிடைத்த வருமானம் ரூ. *2,15,266*.

*1961*ல் *44* நாட்கள் முத்துக் குளிப்பில் ரூ. *2,88,860* வருமானம் கிடைத்தது.

சங்கு குளிப்பு

நெல்லை மாவட்டம் சங்கு குளிப்புத் தொழிலிலும் தனிச் சிறப்புள்ளது. மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் ஆண்டு தோறும் சங்கு குளிப்பு நடைபெறுகின்றது. திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த குளியர்கள் இதில் கலந்து கொள்ளுகிறார்கள். குளியர்களில் பெரும்பாலானவர்கள் மீனவர்களே. *1951*ல் சங்கு குளிப்பில் *633* குளியர்கள் கலந்து கொண்டனர். அதன் பின்பு ஆண்டுக்கு ஆண்டு

குளியர்கள் தொகை அதிகரித்து வருகின்றது. 1961ல் சங்கு குளிப்பில் 1120 குளியர்கள் கலந்து கொண்டனர். சங்கு குளியர்களுக்கு, நன்கு வளர்ச்சியடைந்த சங்கு ஒன்றுக்கு |45 காசு வீதம் வழங்கப்படுகிறது.

உணவு விவசாய நிறுவன வேலைத் திட்டத்தின், கீழ் கடல் அடிப் பொருள்கள் ஆராய்ச்சி நிபுணரான ஸ்ரீ பி. சால்வதாரி தூத்துக்குடி கரையோரப் பகுதியில் சங்கு கிடைகளையும் முத்துச் சிப்பிக் கிடைகளையும் அளவெடுப்பதற்காக அமர்த்தப்பட்டார். இரு அதிகாரிகளுக்கு அவர் நவீன குளிப்பு முறையில் பயிற்சியளித்தார். குளியர்களுக்கு நவீன முறைகளில் பயிற்சி யளிக்கும் விஷயம் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

மன்னார் வளைகுடா குருசடைத் தீவுப் பகுதியில் கடல் பிராணிகள், தாவரங்கள் ஆராய்ச்சிக்கூடம் ஒன்று 1907-ல் ஏற்படுத்தப் பட்டது, கடலிலிருந்து கிடைக்கக் கூடிய மீன், இதர பிராணிகள், தாவரங்களை லாபகரமாக பயன்படுத்திக் கொள்ள வழி துறைகளை ஆராய்வதே ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கமாகும்.

தூத்துக்குடியில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆராய்ச்சி நிலையம் முத்துக் குளிப்பு பற்றி ஆராய்ச்சிகள் செய்து வருகிறது.



முத்துக் குளிப்பு பற்றி விசேஷ ஆராய்ச்சிக் குறிப்புகள் எடுத்ததன் மூலம் லாபகரமாக முத்துக்குளிப்பு நடத்த முடிந்தது. சங்குப் பூச்சியின் வளரும் தன்மை, வயது, குடிபெயர்தல் ஆகியவைபற்றியும் ஆராயப்பட்டது. குஞ்சு பொரிக்கும்போது பொதுவாக சங்குப் பூச்சி எந்த அளவில் இருக்கும் என்பதை நிர்ணயித்து சங்கு வளம் குன்றுதவாறு பாதுகாக்க ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

கிராமங்களில் புதுவாழ்வு

முற் காலத்தில் நம் கிராமங்கள் தன் நிறைவுடனும் சுய பலத்துடனும் வாழ்ந்து வந்தன. இடையில் சுதந்திரத்தை இழந்தபோது சுபிட்சத்தையும் இழந்து நின்றோம். அந்நிய ஆட்சியில் கிராமங்களைச் சுரண்டி நகரங்கள் வாழ்ந்தன. ஆனால் நகரத்திடமிருந்து கிராமத்துக்கு கைம்மாறு எதுவும் கிடைக்கவில்லை. நாட்டு வளத்தின் ஊற்றுக் கண்ணாகிய கிராமங்கள் தாழ்ந்த நிலையில் இருந்தன. அண்மையில் நாம் விடுதலை யடைந்தபோது, நாடு வறுமையில் ஆழ்ந்து கிடந்தது.

கிராம சுபிட்சமே தேச சுபிட்சம் என்பதை உணர்ந்த மக்களாட்சி, கிராம நல வேலையில் முக்கியக் கவனம் செலுத்தலாயிற்று. சமுதாய நலத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. கிராம வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் மேம்படுத்துவதற்கு இத் திட்டம் வகை செய்கிறது.

கிராமங்கள் செழிக்க வேண்டுமானல் விவசாயத் தொழில் செழிக்க வேண்டும். கால் நடைகள் தரத்தை உயர்த்த வேண்டும். கோழிப் பண்ணைகள், மீன் வளம் முதலியவைகளைப் பெருக்க வேண்டும். சாலை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். சமுதாய நலத் திட்டத்தில் இந்த வேலைகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன. உழைத்துக் களைத்த மக்களுக்கு உற்சாக மூட்ட மகிழ்தரு மன்றங்கள், நோய்த் தடுப்புக்காக சுகாதார நிலையங்கள் ஆகியனவும் செயலாற்றி வருகின்றன. கிராமத் தொழில்களுக்குப் புத்துயிர் அளிக்கவும் சமுதாய நலத் திட்டம் வழி கோலுகிறது. கிராமப் பெண்கள், குழந்தைகள் நலனுக்காகவும் தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதிலும் அமுல் நடத்துவதிலும் கிராம வாசிகளும் அவர்களது பிரதிநிதிகளும் நேர்முகமாகக் கலந்து கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமான அதிகாரமும் பொறுப்பும் கிராமப் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவசியமான உதவிகளை அளிப்பதற்கு அரசாங்கம் தயாராய் இருக்கிறது.

சமுதாய நல வளர்ச்சி வேலை 1952 அக்டோபரில் தொடங்கப் பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நெல்லை மாவட்டத்தில் மூன்றில் இரண்டு பகுதியில் சமுதாய நலத் திட்டம் அமுலாக்கப்பட்டது. திட்டத்தை அமுல் நடத்துவதற்காக இந்த மாவட்டம் 31 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது.

நிர்வாக அலகு

அந்நிய ஆட்சியினர் மக்கள் வாழ்க்கை நலனுக்கான திட்டங்களில் அக்கறை காட்டவில்லை. வரி வசூலும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதும் அன்று முக்கிய வேலைகளாக இருந்தன. எனவே 100—150 கிராமங்கள் கொண்ட ஒரு வட்டத்தை ஒரு நிர்வாக அலகு ஆக வைத்திருந்தனர். ஆனல் இப்போது நிலைமை வேறு. கிராம நிலை ஊழியர்கள் மூலமாக ஒவ்வொரு கிராமத்திலும் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பத்தின் முன்னேற்றமும் கவனிக்கப் படுகிறது. எனவே ஒவ்வொரு வட்டமும் நான்கு அல்லது ஐந்து வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மூன்றும் திட்ட காலத்தில் இந்த ஒவ்வொரு வட்டாரமும் அபிவிருத்தி வேலைக்கும் நிர்வாகத்துக்கும் உரிய அலகாக விளங்கும்.

நாடு விடுதலையடையுமுன்பு ஒரு வட்டம் முழுதிலுமுள்ள மக்கள் நலனைக் கவனிக்க ஒரு தாசில்தார், ஒரு விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர், ஒரு சுகாதார இன்ஸ்பெக்டர், ஒரு விலங்கு மருத்துவ

ஆரம்ப சுகாதார நிலையம் கீழஏரல்

உதவி சர்ஜன், ஒரு செக்ஷன் அதிகாரி, ஒரு பாசன அதிகாரி என்ற முறையில் அலுவலர்கள் இருந்தனர். இப்போது சமுதாய நலத் திட்டத்தின் கீழ் ஒரு வட்டாரம் என்பது, வட்டத்தில் சுமார் கால் பாகமேயாகும். ஆனால் இந்த வட்டாரத்தில், வட்டத்துக்குரிய அதிகாரிகள் அனைவரும் உள்ளனர். அதுபோக, கிராம மக்களிடையே விழிப்பை உண்டாக்கவும், கலாச்சார முன்னேற்றத்துக்குப் பணியாற்றவும் சமூகக் கல்வி அதிகாரி ஆண் ஒருவரும் சமூகக் கல்வி அதிகாரி பெண் ஒருவரும் உள்ளனர். இது போக கூட்டுறவு சப் ரிஜிஸ்திரார் ஒருவரும் இருக்கிறார். அபிவிருத்தி வட்டாரங்களில் நியமிக்கப்படுமுன், இவர்களுக்கெல்லாம் பயிற்சி அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு வட்டாரத்துக்கும், கிராம கைத்தொழில் வேலைகளைக் கவனிப்பதற்கென்றே ஒரு அதிகாரி இருக்கிறார். அபிவிருத்தி வட்டாரம் ஒன்றில் வேளாண்மை, விலங்கு நலம், கூட்டுறவு, கைத்தொழில், சுகாதாரம், கல்வி ஆகிய பல்வேறு வேலைகளும் வட்டார வளர்ச்சி அதிகாரியின் கீழ் ஒருமுகமாக இணைக்கப்படுகின்றன.

இரண்டு நிலைகள்

நெல்லை மாவட்டத்தின் 31 வட்டாரங்களில், இரண்டாம் திட்ட முடிவில் 21 வட்டாரங்களில் சமுதாய நலத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது. இந்த 21ல் 6 வட்டாரங்களில் முனைப்பான அபிவிருத்தி வேலை முடிந்து அவை இரண்டாம் நிலையில் உள்ளன. 13 வட்டாரங்களில் முனைப்பான அபிவிருத்தி வேலைகள் நடந்து வருகின்றன. இரண்டு வட்டாரங்களில் பூர்வாங்க நிலை வேலை நடைபெறுகின்றது.

முதல் நிலை வட்டாரங்கள் பின்வருமாறு :—திருநெல்வேலி வட்டத்தில் மானூர்; தென்காசி வட்டத்தில் ஆலங்குளம்,

கீழ்ப்பாவூர், தென்காசி ; செங்கோட்டை ; நாங்குனேரி வட்டத்தில் வள்ளியூர், ராதாபுரம்; திருச்செந்தூர் வட்டத்தில் சாத்தாங்குளம், உடங்குடி ; ஸ்ரீ வைகுண்டம் வட்டத்தில் கருங்குளம், தூத்துக்குடி ; கோவில்பட்டி வட்டத்தில் புதூர், ஓட்டப்பிடாரம் ; சங்கரன் கோவில் வட்டத்தில் வாசுதேவ நல்லூர்.

இரண்டாம் நிலை வட்டாரங்கள் பின்வருமாறு :—அம்பா சமுத்திரம் வட்டம் பாப்பாகுடி, சேரன்மாதேவி ; கோவில்பட்டி வட்டம், கோவில்பட்டி ; சங்கரன் கோவில் வட்டம் குருவிகுளம்.

பூர்வாங்க நிலை வேலை வட்டாரங்கள் பின்வருமாறு :—அம்பா சமுத்திரம் வட்டம் கடையம் ;

விளாத்தி குளம், திருச்செந்தூர் நாங்குனேரி ஆகியவைகளில் 1961 ஜுலையில் பூர்வாங்க நிலை வேலை தொடங்கப்பட்டது.

மானூர்

நெல்லை வட்டத்தில் மானூர் வட்டாரம் 1956 ல் ஆரம்பிக்கப் பட்டது. 1960 அக்டோபரில் அது பஞ்சாயத்து யூனியன் வட்டார மாகியது. இந்த வட்டாரத்தில் 60 கிராமங்களும் 42 மைனர் பஞ்சாயத்துகளும் இருக்கின்றன. தாமிரபரணி, சிற்றாறு ஆகி யவைகளின் பாசனம் இதற்குக் கிடைக்கின்றது.

இந்த வட்டாரம் தொடங்கியதிலிருந்து 31-3-61 வரை இதில் நடந்துள்ள அபிவிருத்தி வேலைகள் வருமாறு:—640 டன் பொறுக்கு விதைகளும், 4850 டன் ரசாயன உரங்களும், 38 டன் தழை உர விதைகளும் வழங்கப்பட்டன. திருந்திய முறை வேளாண்மைக் கருவிகள் மொத்தம் 713 வழங்கப்பட்டன. 27127 டன் கழிவு உரம் தயாரிக்கப்பட்டது. ஜப்பானிய நடவு முறை கையாளப்பட்ட பரப்பளவு 32918 ஏக்கர். பயிர்ப் பாதுகாப்பு அளிக்கப்பட்ட பரப்பளவு 15559 ஏக்கர். தென்னங் கன்றுகள் உள்பட வழங்கப்பட்ட பழச் செடிகள் 6600.

கால்நடை முதல் உதவி நிலையங்கள் மூன்று தொடங்கப் பட்டன. 8 காங்கயம் காளைகளும் 2 முர்ரா எருமைக் கிடாக்களும் 131 இராமநாதபுரம் கிடாக்களும் வழங்கப்பட்டன.

ரூ. 27948 செலவில் 58 குடி நீர் கிணறுகள் ஆழப்படுத்தப் பட்டன. புதிதாக 25 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. 5 கிராமங் களில் வடிகால் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 5 புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டப் பட்டுள்ளன. இவைகளுக்கு பொதுமக்கள் 50 சத விதம் உதவியிருக்கிறார்கள். ஐந்து கிராமங்களுக்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொழில் கருவிகளை வாங்குவதற்காக 35 தொழில் வினைஞர் களுக்கு மொத்தம் ரூ 10,000 கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வட்டாரத்தில் சாகுபடியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலக்கல்லூர் வரதராஜசாமி நிலங்கள் சாகுபடியாளர் கூட்டுறவுச் சங்கம் என்பது இதன் பெயர். சங்கத்தில் 37 உறுப்பினர்கள் இருக்கிருர்கள்.

கதர் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 591 ராட்டைகள் புதிதாக சுழலத் தொடங்கியுள்ளன. விற்பனை செய்யப்பட்ட கதர் மதிப்பு ரூ 3880 ஆகும். 87 நூற்புப் போட்டிகள் நடத்தப்பட்டன.

விவசாயிகளுக்கு குறுகிய கால கடன் ரூ 2,26,700ம், தக்காவிக் கடன் ரூ. 2,03,250ம் வழங்கப்பட்டன. தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் ரூ 102,169 கடன் வழங்கப்பட்டது. சிறு பாசனத் திட்டங்கள் வகையில் வழங்கப்பட்ட கடன் ரூ. 259,620. வீடு வசதி களுக்காக அளிக்கப்பட்ட கடன் ரூ. 30,000 ஆகும்.

ஆலங்குளம்

ஆலங்குளம் வட்டாரம் 1957 அக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இந்த வட்டாரத்தில் நெல் சாகுபடி பரப்பு 5285 ஏக்கராக இருந்தது. தரிசு நில சீர்திருத்தம், கிணறு வெட்ட உதவி, நல்ல பருவமழை ஆகிய நிலைமைகள் காரணமாக 1960-61ல் நெல் சாகுபடி பரப்பு 7000 ஏக்கராயிற்று. இந்த வட்டாரத்திலுள்ள கிராமங்களில் 500 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டு 3000 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கிளிரி சிடியா, கொடிப்பூவரசு, வாதநாராயண, மலைப்பூவரசு, முதலிய எரு தழை கொடுக்கும் கட்டைகளும் கன்றுகளும் சுமார் 30,000 நடப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு போஸ் கலப்பை

வட்டார வளர்ச்சி அலுவலகம், ஆலங்குளம்



கள் 150ம், மருந்து தெளிக்கும் கருவிகள் 44ம், களையெடுக்கும் கருவிகள் 31ம் வழங்கப்பட்டன. 4000 ஏக்கரில் ஜப்பானிய முறையில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

ஊத்துமலை, வெங்கடேஸ்வரபுரம் ஆகிய இரண்டு கிராமங்களில் கால்நடை முதல் உதவி நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆலங்குளத்தில் ரூ 10500 செலவு மதிப்பில் விலங்கு மருத்துவ கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது.

ஆலங்குளம் வட்டாரத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. முதலாவது, இரண்டாவது திட்ட காலங்களில் கீழ்க்கண்ட கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு பணியாற்றி வருகின்றன.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 14 ; கூட்டுறவு விவசாய வங்கி லிமிடெட் 1; கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் 2; கூட்டுறவு பால் பண்ணைச் சங்கம் லிமிடெட் 1; கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1; கூட்டுறவு கைக்குதல் அரிசிச் சங்கம் 1; கூட்டுறவு கைத் தொழில் வெங்கலப் பாத்திர உற்பத்தி விற்பனைச் சங்கம் 1; கூட்டுறவு பாய் நெசவாளர் உற்பத்தி விற்பனைச் சங்கம் 1.

40 பதனீர் காய்ச்சும் கொப்பரைகள் பாதி விலையில் வழங்கப்பட்டன. 16 புதுக் கிணறுகள் தோண்டப்பட்டன. 20 பழைய கிணறுகள் பழுது பார்க்கப்பட்டன. ஊத்துமலை, ஆலங்குளம் பஞ்சாயத்துகளில் மேல் மட்ட நீர்த் தொட்டி கட்டப்பட்டு, அதன் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. 27 சிறு பாலங்கள் கட்டப்பட்டன. நீர் அரிப்பைத் தடுக்க 5 கிராமங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டன.

கீழ்ப்பாவூர்

கீழ்ப்பாவூர் வட்டாரம் தென்காசி வட்டத்தில் உள்ளது. இது 23 ரெவின்யூ கிராமங்களைக் கொண்டது. அவற்றில் 20 பஞ்சாயத்துகள் உள்ளன. 1960 நவம்பரில் தான் இந்த வட்டாரம் ஆரம்பிக்கப்பட்டது. 5 கிராமத் தலைவர்கள் முகாம்கள் நடத்தப்பட்டன. சமுதாய நல வேலைகளில் மக்கள் நல்ல ஆர்வம் காட்டிவருகிறார்கள்.

தென்காசி

தென்காசி வட்டாரம், பொதிகை மலைச் சாரலில் அமைந்துள்ளது. இதந்தரு நகரமான குற்றாலம் காரணமாக, இவ்வட்டாரம் தனிச் சிறப்புப் பெறுகின்றது. வருடந்தோறும் இரு பருவங்களிலும் இங்கு மழை பெய்வதால் நன்செய், புன்செய் சாகுபடிக்கு வசதிகள் அதிகம்.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாக இப் பகுதியில் வேளாண்மைத் தொழிலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

கிணற்றில் தண்ணீர் இறைக்க கணிசமான அளவில் பம்ப் செட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. 1300 டன் உரம் வழங்கப்பட்டிருக்கிறது. 85 டன் பொறுக்கு விதை வழங்கப்பட்டது. 5200 ஏக்கரில் திருந்திய முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. பயிர்ப் பாதுகாப்புக்காக 30 டன் மருந்துகள் வழங்கப்பட்டன. 74 திருந்திய விவசாயக் கருவிகள் வழங்கப்பட்டன. பாட்டப்பத்தில் ஒரு கூட்டுறவு விவசாயப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

வீட்டு வசதிகள்

தென்காசியிலும் குற்றாலத்திலும் குறைந்த வருமானக்காரர்களுக்கு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. பழைய குற்றாலத்துக்குப் பக்கத்தில் ஆயிரப்பேரி கிராமத்தில் குறைந்த வருமானக்காரர்களுக்கு வீடு கட்டும் சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் :—நானாவித கூட்டுறவுப் பண்ணைகள் 2, பால் பண்ணை 2, மாணவர் கூட்டுறவுச் சங்கம் 1, ஏலக்காய் பயிர் செய்யும் கூட்டுறவுச் சங்கம் 1, விவசாய கூட்டுறவுப் பண்ணை 1, செங்கல் கூட்டுறவு சங்கம் 1, மண்

பழைய குற்றாலம் அருவியும் பூங்காவும்



பாண்ட கூட்டுறவு சங்கம் 3, சிறு கைத் தொழில் கூட்டுறவு சங்கம் 2.

தென்காசி வட்டாரத்தில் தாய் சேய் நல விடுதிகள் 5 பணி யாற்றி வருகின்றன. பாதுகாக்கப்பட்ட மேல் மட்ட தண்ணீர் தொட்டிகள் 10 உள்ளன. 25 பள்ளிகள் பகல் உணவு வழங்கு கின்றன. 7 மைல் நீளத்துக்கு கிராமச் சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன. 15 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

செங்கோட்டை

செங்கோட்டை வட்டாரம் 1958 அக்டோபரில் ஏற்படுத்தப் பட்டது. 1959 அக்டோபரிலிருந்து அது முதல் நிலை வட்டார மாக்கப்பட்டது. செங்கோட்டை நகராட்சிப் பகுதி நீங்கலாக, செங்கோட்டை வட்டம் முழுதும் இந்த வட்டாரத்தில் அடங்கும். இதில் மொத்தம் 10 ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. 6 கிராமப் பஞ்சாயத்துகள் உள்ளன. கட்டளைக் குடியிருப்பில் நூற்பு ஆலை ஒன்று உள்ளது.



ஹரிஜன குடியிருப்பு சத்திரம் புதுக்குளம்

வானம் பார்த்த ஏரிகளும், கால்வாய் வசதி உள்ள ஏரிகளும் தான் இங்கு பாசனத்துக்கான ஆதாரமாக இருக்கின்றன. இந்த வட்டாரப் பகுதியில் மழை 45 அங்குலத்திலிருந்து 55 அங்குலம் வரை பெய்கிறது.

வேளாண்மை உற்பத்தியை பெருக்குவதற்காக மோட்டை தேக்கத் திட்டம், ஸ்ரீமூலபேரி திட்டம், கண்ணுப்புளி திட்டம் ஆகி யன அனுமதிக்கப்பட்டன.

இவற்றுள் மோட்டை தேக்கத் திட்ட வேலை முடிவடைந்து விட்டது. இத்திட்டத்துக்கு ஆன செலவு ரூ3,50,000. இத் தேக்கத்தினுல் 343 ஏக்கர் இரு போக நன்செய் நிலத்துக்கு பாசன வசதி ஸ்திரப்பட்டிருக்கிறது. 23 ஏக்கர் புன்செய் நிலம் பாசன வசதி பெற்று நன்செய் நிலம் ஆகியுள்ளது.

ஸ்ரீமூலப்பேரி

ஸ்ரீமூலப்பேரி திட்டத்துக்குச் செலவு மதிப்பு ரூ. 6,83.500. வேலை நடைபெற்று வருகின்றது. இதுவரை ரூ. 3,80,000 செல விடப் பட்டுள்ளது, 356 ஏக்கர் இருபோக நன்செய் இத் திட்டத் தினுல் ஸ்திரமான நீர் வசதி பெறும். ஒரு போக சாகுபடி நடக்கும் 149 ஏக்கர், இருபோக நன்செய் ஆக அபிவிருத்தியடையும்.

கண்ணுப்புளி திட்டம் சம்பந்தமாக பரிசீலனை வேலைகள் முடிந்து விட்டன. இத் திட்டத்துக்குச் செலவு மதிப்பு ரூ. 5,80,000. இத் திட்டத்தினுல் 1109 ஏக்கர் இருபோக நன்செய்க்கு பாசன வசதி ஸ்திரமடையும். 99 ஏக்கர் ஒரு போக நன்செய், இருபோக நன் செய் ஆக அபிவிருத்தியடையும். 25 ஏக்கர் புன்செய் நிலம், நன் செய் ஆக மாறும்.

சாகுபடியாளர் கூட்டுறவு

புளியாரையில் சாகுபடியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. திருமலை தேவஸ்தானத்துக்குச் சொந்த மான 150 ஏக்கர் நன்செய் நிலத்தை இச் சங்கம் குத்தகைக்கு எடுத்திருக்கிறது. இவர்கள் திருந்திய சாகுபடி முறைகளைக் கையாண்டு, முன்பு இருந்ததைவிட 50 சத வீதம் அதிக மகசூல் எடுத்திருக்கின்றனர்.

புளியாரையில் ஒன்றும் சாம்பவர் வட கரையில் ஒன்றுமாக இரண்டு கால்நடை முதல் உதவி நிலையங்கள் தொடங்கப் பட்டுள்ளன.

வட்டாரத்தில் கூட்டுறவு முறையில் வீடு வசதிக்காக கிராம கூட்டுறவு வீடு வசதிச்சங்கம் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடிநீர் வசதிக்காக 7 கிணறுகள் புதிதாகத் தோண்டப் பட்டுள்ளன. மூன்று கிணறுகள் பழுது பார்க்கப்பட்டன. சுகா தாரத்தைக் கருதி வடிகால் வசதிகள் அமைக்கப்பட்டன. இந்த வேலைகளுக்காக ரூ. 15,476 செலவாயிற்று. ரூ. 9509 செலவில் மூன்று கிராமச் சாலைகளில் அபிவிருத்தி வேலைகள் மேற் கொள்ளப்பட்டன.

தீவிர சாகுபடி முறைகள் குறித்து எடுத்துரைத்ததின் காரண மாகவும், விவசாயிகளின் ஆர்வம் மிகுந்த ஒத்துழைப்பாலும் இந்த வட்டாரத்தில், வேளாண்மை உற்பத்தி அதிகரித்துள்ளது. வட்டார வளர்ச்சி வேலை துவங்கு முன்பு இருந்தது போல ஒன்றரை மடங்கு உற்பத்தி ஏற்பட்டுள்ளது.

பாப்பாகுடி

பாப்பாகுடி வட்டாரம், சேரன்மாதேவி வட்டாரத்திலிருந்து பிரிக்கப்பட்டு 1958-ல் தான் தனி வட்டாரமாயிற்று. இவ் வட்டாரத்தில் மக்கள் தொகை 40,000. தமிழ் நாட்டிலேயே இது மிகச் சிறிய வட்டாரம் என்றாலும், சாதனைகளில் முன்னணியில் நிற்கிறது.

பாப்பாகுடி வட்டாரம் ஒரு புறத்தில் தாமிரபரணியாலும் மற்றொரு புறத்தில் கடன நதியாலும் சூழப்பட்டுள்ளது. நெல்தான் முக்கியமான விளைபயிர். கம்போஸ்ட் உரத்தின் சக்தியை நன்கு உணர்ந்துள்ளனர் இந்த வட்டார மக்கள். ஒவ்வொரு கிராமத்துக்கும் கம்போஸ்ட் எருக்குழி இருக்கிறது. பாப்பாகுடி வட்டாரத்தின் கம்போஸ்ட் உரம் சத்துமானத்தில் சிறந்து விளங்குவதாக டில்லி விவசாயப் பொருட்காட்சியில் அறிவிக்கப்பட்டதானது கம்போஸ்ட் எருப் பெருக்கத்துக்கு புதிய ஊக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. இவ் வட்டாரக் குடியானவர்கள் கம்போஸ்ட் எருவுடன், ரசாயன உரங்களையும் பயன் படுத்துகின்றனர். பூச்சித் தடுப்பு கருவிகளை விரும்பிக் கேட்கிறார்கள். இரண்டே ஆண்டுகளில் 54 மருந்தடிக்கும் கருவிகள் வழங்கப்பட்டன. 5485 ஏக்கரில் ஜப்பானிய சாகுபடி முறை மேற்கொள்ளப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களும், மைசூரில் பயிற்சி பெற்றவர்களுமான வட்டார வளர்ச்சி (பயிற்சி) அதிகாரிகள், பாப்பாகுடியில் ஜப்பானிய முறை சாகுபடியை ஆராய்வதற்காக வந்திருந்தனர். இதிலிருந்தே இந்த வட்டார குடியானவர்களின் முன்னேற்றமான வேலை முறைகளை உணரலாம்.

செங்குளத்தில் சாகுபடியாளர் கூட்டுறவுப் பண்ணைச் சங்கம் சிறப்பான முறையில் பணியாற்றி வருகின்றது. கிராம வீடு வசதித்

திட்டத்தின்கீழ் வீடுகளை அமைத்துக் கொள்ளவும் அச் சங்கத்தினர் முனைந்து பணியாற்றி வருகிறார்கள்.

கால் நடைகள் தரத்தை உயர்த்துவதற்காக கிராமங்களில் ஆங்கங்கே உயர்தர பொலி காளைகள் வைக்கப்பட்டுள்ளன. 2 மைல் சுற்றளவில் ஒரு காளை இருக்கும்படியாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. கூட்டுறவு பால் சங்கம் ஒன்று சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. மேலும் மூன்று கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன.

கல்வித் துறையிலும் இந்த வட்டாரம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. புதிய வட்டாரம் ஏற்பட்ட இந்தச் சிறு கால அளவுக்குள் ரூ. 50,000 செலவில் 10 புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

குடிநீர் வசதிக்காக 15 கிணறுகள் ஏற்பட்டுள்ளன. 6 கிரா மங்களில் மேல்மட்ட தண்ணீர் தொட்டி கட்ட திட்டமிடப் பட்டுள்ளது. முக்கூடலில் ஒரு லட்சம் ரூபாய் செலவில் பாது காக்கப்பட்ட குடிநீர் வசதிக்கான திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள் ளது. தாமிரபரணியும், கடனநதியும், இந்த வட்டாரத்தில் அநேக மாக எல்லா கிராமங்களையும் தொட்டுச் செல்லும் முறையில் செல்லுகின்றன. அப்படியிருந்தும் மக்கள் குடிநீர் கிணறு அமைத்து நீர் வழங்க வகை செய்கின்றனர். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்வதில் மக்களுக்குள்ள ஆர்வத்துக்கு இது சான் றாகும்.

பாப்பாகுடி வட்டாரத்தில் எல்லா கிராமங்களுக்கும் சாலை வசதிகள் உள்ளன. காட்டாறுகளுக்கு ஓடு பாலங்களும் சிறு பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளன. முன்பு போதுமான அளவு பஸ் வசதி இல்லாமல் இருந்தது. இப்போது அநேகமாக எல்லா கிராமங்களுக்கும் பஸ் வசதி ஏற்பட்டு விட்டது.

கூட்டுறவில் நம்பிக்கை

இந்த வட்டாரத்தில் 17 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 75 சதவீத குடும்பங்கள் இவற்றில் உறுப்பினராக உள்ளன. இந்த வட்டாரத்தின் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் என்பதிலிருந்து இவ்வட்டார மக் கள் கூட்டுறவு இயக்கத்தில் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

கூட்டுறவு வீடு வசதிச் சங்கமும், கூட்டுப் பண்ணைச் சங்கமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் உறுப்பினராவதற்கு மக்கள்

போட்டி போட்டுக் கொண்டு முன்வருகின்றனர். இந்த வட்டாரத்தில் முப்பது கிராமத் தலைவர்கள் முகாம்கள் நடைபெற்றன. கிராமத் தலைவர்கள் சுற்றுப் பிரயாணத்துக்கும் வகை செய்யப்பட்டது. இதன் காரணமாக கிராம மக்களிடையே நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த வட்டாரத்தில் மேற்கொள்ளப்படும் ஆக்க வேலைகள் அனைத்துக்கும் பொதுமக்கள் வேண்டுமான ஆதரவு தருகிறார்கள்.

சேரன்மாதேவி

சேரன்மாதேவி சமுதாய நலத் திட்டப்பகுதி 1953-ல் துவக்கப்பட்டது. அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள 55 ரெவின்யூ கிராமங்கள் இதில் இருந்தன. அதன் பரப்பளவு 121 சதுர மைல். இப்பகுதியை தீவிரமாக அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் 1958-ல் பாப்பாகுடி வட்டாரம் என்றும் சேரன்மாதேவி வட்டாரம் என்றும் இரண்டாகப்பிரிக்கப்பட்டது. அதன் பிறகு இந்த வட்டாரம் 35 ரெவின்யூ கிராமங்களைக் கொண்டதாக மாறியது. 1960 அக்டோபர் முதல் இவ்வட்டாரம் பஞ்சாயத்து யூனியனாக மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

சேரன்மாதேவி வட்டாரத்தை தாமிரபரணியும் மணிமுத்தாறும் சேர்ந்து வளப்படுத்துகின்றன. இந்த ஆறுகள் ஓடுமிடங்களில் இருபோகம் நெல் சாகுபடி ஆகிறது. கார் முந்திய போகத்தில் 10598 ஏக்கரும், பிசானத்தில் 12960 ஏக்கரும் சாகுபடியாகின்றன. திருந்திய சாகுபடி முறைகள் காரணமாக இந்தப் பகுதியில் ஏக்கர் விகித மகசூல் கணிசமாக அதிகரித்துள்ளது. வட்டார வளர்ச்சிப் பகுதி ஆரம்பித்த 1953-54-ம் வருடத்தில் ஏக்கருக்கு சராசரி 2609 ராத்தல் மகசூல் கிடைத்தது. தற்போது ஏக்கருக்கு 3500 ராத்தல் மகசூல் கிடைக்கிறது. அதாவது ஏக்கருக்கு 891 ராத்தல் ($6\frac{1}{2}$ மூட்டை) அதிக மகசூல் விளைவிக்கின்றனர்.

சென்ற 7 ஆண்டுகளில், வேளாண்மைத் துறையில் இந்த வட்டாரத்தில் ஏற்பட்டுள்ள சாதனைகள் பின்வருமாறு :

மொத்தம் 932 டன் பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டன. 5207 டன் ரசாயன உரங்கள் குடியானவர்களுக்கு வழங்கப்

பட்டன. 6596 கம்போஸ்ட் உரக்குழிகள் வெட்டப்பட்டன. 47105 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது.

கால்நடைகள் நலனைக் கருதி, ரூ. 17,700 செலவில் கால்நடை மருத்துவ நிலையம் கட்டப்பட்டு 1955 முதல் பணியாற்றி வருகின்றது. செயற்கை சூல் நிலையம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. கோழிப் பண்ணை ஒன்றும் இத்துடன் உள்ளது. ஆடுகள் தர அபிவிருத்திக்காக இராமநாதபுரம் ஜாதிக் கிடாக்கள் 62 வழங்கப்பட்டுள்ளன.

பத்தமடையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 12,200 செலவாயிற்று. இதற்கு மக்கள் உதவிய தொகை ரூ. 6200 ஆகும். முதல் திட்டகாலத்தில் வடக்கு அரியநாயகிபுரத்தில் ரூ. 9500 செலவில் ஒரு மருத்துவ நிலையம் கட்டப்பட்டது. அதற்கு மக்கள் உதவிய தொகை ரூ. 5000. இப்போது அது பாப்பாகுடி பஞ்சாயத்து யூனியன் பராமரிப்பில் இருந்து வருகிறது. சேரன்மாதேவியிலும், மேலச்செவலிலும் முறையே ரூ. 10,000, ரூ. 12,200 செலவில் மகப்பேறு நிலையங்கள் மக்களுடைய பாதிப் பங்குத் தொகையுடன் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பணியாற்றி வருகின்றன.

பட்டுப்பாய்

உலகப் புகழ் பெற்ற பட்டுப்பாய் நெய்யப்படும் பத்தமடையும், வேட்டி நெசவில் சிறந்த வீரவநல்லூரும், மண்பாண்ட உற்பத்தியில் சிறந்த காருகுறிச்சியும் சேரன்மாதேவி வட்டாரத்தில் தான் இருக்கின்றன. ஊக்கமளிக்கப்படாமையால் இடையில்

செயலற்று இருந்த இத்தொழில்கள், ஐந்தாண்டுத் திட்டவேலை ஆரம்பித்த பின்பு திட்ட நிதியிலிருந்தும் கிராமக் கைத்தொழில் போர்டிலிருந்தும் நிதி உதவி மூலம் புத்துயிர் பெற்றன.

சேரன்மாதேவி வட்டாரத்தில் கதர் பட்டுத் தொழில் சிறந்து விளங்குகிறது. சுமார் 1200 பேர் நூற்று வருகின்றனர். 750 பேர்களுக்கு புதிதாக ராட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 17 நெசவாளர்கள் கதர் பட்டு நெசவு வேலையில் ஈடுபட்டுள்ளனர். 1520 குடும்பங்கள் கதர் வேலையில் ஈடுபட்டுள்ளன.

இந்த வட்டாரத்தில் இப்போது பல்வேறு வகையான 53 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. பிராஞ்சேரியில் கூட்டுறவு விவசாயப் பண்ணை ஒன்றைத் துவக்க முயற்சி செய்யப் பட்டு வருகின்றது.

இந்த வட்டாரத்தில் ரூ. 10,000 செலவில் ஒரு நூல் நிலையமும், வட்டார நிதியின் மூலம் 6 நூல் நிலையங்களும் 45 வாசக சாலைகளும் இயங்கி வருகின்றன. 14 இடங்களில் மன மகிழ்ச்சி மன்றங்கள் (ரேடியோ வசதி) ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாதர் முன்னேற்றத்தைக் கருதி 10 இடங்களில் மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டு செவ்வனே நடைபெற்று வருகின்றன. வட்டார வளர்ச்சி தலைமை அலுவலக நூல்களையும், சமுதாய நலத்துறை, அரசாங்க செய்தித்துறை ஆகியவற்றின் வெளியீடுகளையும் தினத்தாள்களையும் கொண்ட செய்தி நிலையம் ஒன்று இயங்கிவருகின்றது.

மாணவர்கள் அமைத்த சாலை

சேரன்மாதேவியில் திருநெல்வேலி இந்துக் கல்லூரி மாணவர்கள் 120 பேர் ஒரு சமூக சேவை பயிற்சி முகாம் நடத்தினர். 2 பர்லாங் நீள சாலை அவர்களால் அமைக்கப்பட்டது. கிராமங்களில் அவர்கள் சுகாதார முறைகளை எடுத்துக் கூறினர்.

இவ்வட்டாரத்தில் 15 முதியோர் கல்வி நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. சுமார் ஆபிரம் பேர்கள் இவற்றால் கல்வியறிவு பெற்றுள்ளனர். 45 வாசகசாலைகள் நடைபெற்று வருகின்றன. 14 இடங்களில் பொது ரேடியோ வைக்கப்பட்டுள்ளது.

சேரன்மாதேவி வட்டாரத்தில் 31 கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாம்கள் நடைபெற்றன. 2000 கிராமத் தலைவர்கள் அவைகளில் பயிற்சி பெற்றார்கள். அரசாங்க முயற்சியுடன் பொதுமக்கள் இணைந்து ஒத்துழைக்கிறார்கள். மேலச் செவலிலும், உதய மார்த்தாண்ட புரத்திலும் ரூ. 10,000 செலவில் சமுதாய மன்றங்கள் கட்டப்பட்டுள்ளன. அதில் பாதித் தொகை மக்கள் போட்டுக் கொண்டதாகும். அரசாங்க மானியம் இல்லாமல் மாவடி, பொழிக்கரை, பிராஞ்சேரி, மேலச்செவல், கீழமாவடி, திருவிருத்தான் புளி, ஓடக்கரை, கலிசூழ்ந்த மங்கலம், வடக்கூர் ஆகிய இடங்களி



குற்ருலம் நூல் நிலையம்

லும் ரூ. 10,000 செலவில் மன்றங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த வட்டாரத்தில் ரூ. 58,600 செலவில் 35 கிணறுகள் தோண்டப் பட்டன. அதில் மக்கள் பங்குத் தொகை ரூ. 19,000 ஆகும். ரூ. 20,000 செலவில் 32 கிணறுகள் சீர்திருத்தப்பட்டன. இதில் மக்கள் உதவிய தொகை ரூ. 16000 ஆகும். முக்கூடல், கல்லி டைக் குறிச்சி ஆகியவைகளில் சாக்கடை அமைப்பு வேலைகளிலும் மக்கள் பங்குத் தொகை கொடுத்து ஒத்துழைத்துள்ளனர்.

ரூ. 1,76,000 செலவில் 46 சாலைகள் அமைக்கப்பட்டன. இதில் பொதுமக்கள் உதவிய தொகை ரூ. 47,221 ஆகும். ரூ. 64000 செலவில் 22 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ. 10500 செலவில் ஒன்பது பழைய பாலங்கள் பலப்படுத்தப் பட்டன. இவ்வேலைகளுக்கு முறையே ரூ. 14,785ம், ரூ. 3850ம் மக்கள் உதவினர்.

ரூ. 20,000 செலவில் கோபால சமுத்திரம், பிராஞ்சேரி, பத்தமடை, பொழிக்கரை ஆகிய நான்கு இடங்களில் ஐந்து பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. இதில் ரூ. 10,000 இந்த வட்டார மக்கள் பங்குத் தொகையாக வழங்கினர்கள். எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் மதிய உணவுத் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

சேரன்மாதேவி வட்டாரத்தில் சென்ற பத்து ஆண்டுகளில், உழவு, வண்டி மாடுகள் வாங்கும் பொருட்டு விவசாயிகளுக்கு ரூ. 48,000 வரை கடனுகை வழங்கப்பட்டது. குடிசைத் தொழில் அபிவிருத்திக்காக, 10 வருடத் தவணையில் திருப்பிச் செலுத்த 470 குடும்பங்களுக்கு ரூ. 79,310 தரப்பட்டது. வேளாண்மைக்

கான கிணறுகள் வெட்டவும் கிணறுகளைச் செப்பனிடவும் ரூ. 163,800 நீண்ட கால கடன் வழங்கப்பட்டது. பழைய வீடுகளைச் செப்பனிடும் வகையில் 120 வீடுகளுக்கு ரூ. 68,240 கடனுக வழங்கப்பட்டது.

கடையம்

கடையம் பூர்வாங்க நிலை வட்டாரம் 1961 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. வேளாண்மை சர்வே வேலைகள் முடிந்துள்ளன. இந்த வட்டாரத்தைச் சேர்ந்த கிராமங்களில் பெரும்பாலானவற்றில் முதலாவது இரண்டாவது திட்ட காலங்களிலேயே மின்சார வசதி ஏற்பட்டுவிட்டது. குடியானவர்கள், மின்சார பம்பு செட் மூலம் பயனடைந்து வருகிறார்கள். சுமார் ரூபாய் ஒரு லட்சம் செலவில் ஆறு மேல்மட்ட தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. சிவசைலம் கிராமத்தில் கடனநதிக்கு குறுக்கே ரூ. 2 லட்சம் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது.

வள்ளியூர்

தேசிய நல வளர்ச்சித் திட்டத்தின் பகுதியாக வள்ளியூர் வட்டாரம் 1955ல் தொடங்கப்பட்டது. 154 குக் கிராமங்கள் கொண்ட 23 கிராமங்கள் இதில் இருக்கின்றன. இந்த வட்டாரம் பாலைப் பகுதி என அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகும். மழை பெய்யும் காலத்தில் மட்டும் நீரோடும் அனுமன் நதி இவ் வட்டாரத்தில் பாய்கிறது. வேளாண்மை, பனைமரத் தொழில், நூல் நூற்றல் ஆகியன இங்குள்ள முக்கிய தொழில்களாகும்.

நிலவளம், நீர்வளம் சற்று குறையலாமே தவிர, மக்கள் மன வளத்துக்கு இங்கு குறைவில்லை. சென்ற 10 ஆண்டுகளில் அபிவிருத்தி வேலைகளில் மக்கள் நல்ல முறையில் ஒத்துழைத்திருக்கிறார்கள். மக்களின் ஒத்துழைப்புடன் இந்த வட்டாரத்தில் சென்ற 10 ஆண்டுகளில் 2 உயர்நிலைப் பள்ளிகளும் 9 ஆரம்பப் பள்ளிகளும் புதிதாகத் திறக்கப் பட்டன.

சென்ற ஐந்து ஆண்டுகளில் இந்த வட்டாரத்தில் பொறுக்கு விதைகள் வகையில் நெல் 5215 மணங்கும், சிறு தானியங்கள் 1320 மணங்கும் வழங்கப்பட்டன. பூச்சி, பூஞ்சாண மருந்துகள் 3606 மணங்கு வழங்கப்பட்டன. அம்மோனியம் சல்பேட் 20337 மணங்கும் சூப்பர் 2269 மணங்கும், இதர உரங்கள் 14712 மணங்கும் வழங்கப்பட்டன. இந்த வட்டாரத்தில் 3347 கம்போஸ்ட் உரக் குழிகள் உள்ளன. 4573 ஏக்கரில் ஜப்பானிய முறையில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

இந்த வட்டாரத்தில் 19 பஞ்சாயத்துகள் உள்ளன. அவைகளில் 12 பஞ்சாயத்துக்கு அரசாங்க கடன் உதவி அளிக்கப்பட்டு கம்போஸ்ட் உரம் தயார் செய்யப்படுகிறது. கால் நடை தா அபிவிருத்திக்காக 7 பொலி காளைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. நாட்டு கிடாக்களுக்குப் பதிலாக 30 இராமநாதபுரம் கிடாக்கள் வழங்கப்பட்டுள்ளன. உயர்ந்த ஜாதி சேவல்கள் சுமார் 1000 வழங்கப்பட்டுள்ளன. 13 தனிப்பட்டவர் கோழிப் பண்ணைகளுக்கு சுமார் ரூ 2000 மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பனைவெல்லம், பனைப் பொருள்கள் தயாரித்தல் ஆகியவை தான் இப்பகுதியில் முக்கிய கைத் தொழில்கள். பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்களுக்கு, வட்டார வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக ரூ 8400 வரையில் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இது போக நவீன முறையில் வெல்லம் காய்ச்சும் கொப்பரைகள் மொத்தம் 140 பாதி விலையில் கூட்டுறவு ஸ்தாபன உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. 15 பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் பனை வெல்ல வியாபாரம் செய்து வருகின்றன.

மூங்கில் தீப்பெட்டி

மூங்கிலினால் தீப்பெட்டி செய்வதற்கான அரசினர் தொழிற் சாலை ஒன்று ரூ 9000 செலவில் வள்ளியூரில் இயங்கி வருகின்றது. 12 குடும்பங்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. நாள் ஒன்றுக்கு 8 குரோஸ் முதல் 10 குரோஸ் வரை உற்பத்தியாகிறது. தமிழ்

முத்தலாபுரம் பாலம்



நாட்டில் மூங்கிலினல் தீப்பெட்டி செய்யும் தொழிற்சாலை இது ஒன்றேயாகும்.

தொழில்களுக்கு உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் தச்சுத் தொழில், கருமான் வேலை, பனை ஓலைத் தொழில், தோல் பதனிடுதல், மண் பாண்டத் தொழில், சாக்பீஸ் தொழில், செங்கல் ஓட்டுத் தொழில் ஆகியவைகளுக்கு ரூ 15000 வரை கடன் வழங்கப் பட்டுள்ளது.

வீடு கட்ட உதவி

கேசவ நேரி, கூட்டப்புளி, பெருங்குடி, பன்னிமலை, பெருமணல் ஆகியவைகளில் கிராமிய வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்டும் திட்ட வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கேசவ நேரியில் மொத்தம் 116 வீடுகளுக்கு கடன் கொடுக்கப் பட்டுள்ளது 66 வீடுகள் முடிந்து குடியேறிவிட்டார்கள். 50 வீடுகள் முடியும் தறுவாயில் இருக்கின்றன. மொத்தம் செலவு ரூ 1,31,450.

கூட்டப்புளியில் 223 வீடுகளுக்கு கடன் வழங்கப் பட்டுள்ளது. கட்டிட வேலைகள் நடந்து வருகின்றன. இதற்கு இது வரை மொத்தச் செலவு ரூ 2,10,893.

பெருமணல் கிராமத்தில் நான்கு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இது வரை மொத்தச் செலவு ரூ 2200.

பெருங்குடியில் மொத்தம் 78 வீடுகளுக்கு கடன் கொடுக்கப் பட்டுள்ளது. 21 வீடுகள் முடிவடைந்து விட்டன. மற்ற வீடுகள் கட்டும் வேலை நடைபெற்று வருகின்றது. இது வரை செலவு ரூ 96921.

பெருங்குடிச் சேரியில் 50 வீடுகளுக்கு கடன் கொடுக்கப் பட்டிருக்கிறது. வேலை நடந்து கொண்டிருக்கிறது. இதற்கான மொத்தச் செலவு ரூ 33042

பன்னிமலையில் 74 வீடுகளுக்கு கடன் கொடுக்கப்பட்டிருக் கிறது. 30 வீடுகள் முடிவடைந்து விட்டன. இதுவரை ரூ 69420 செலவிடப்படிருக்கிறது.

ராதாபுரம்

நாங்குனேரி வட்டத்தில் ராதாபுரம் தேசீய நலப் பரப்பு வட்டாரம் 1956 ல் தொடங்கப்பட்டது. 17 ரயத்துவாரி கிராமங் களும் 14 இனம் கிராமங்களும் இதில் அடங்கியவை. இந்த வட்டாரத்துக்கு நீண்ட கடற்கரை உள்ளது.

முன்பு இந்த வட்டாரத்தில் 18 பஞ்சாயத்துகள் இருந்தன. இப்போது 24 பஞ்சாயத்துகள் உள்ளன. திசையன் விளையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஏற்பட்டுள்ளது. ராதாபுரம் வட்டாரம் வறட்சிப் பிரதேசம். கிணறுகள் வெட்டவும், மோட்டார் பம்பு செட்டுகள் வைக்கவும் அரசாங்கம் உதவியது. 1957 லிருந்து 1961 வரையில் இப் பகுதியில் அபிவிருத்தி வேலைகளின் சாதனைகள் பின்வருமாறு :—

18610 ராத்தல் பொறுக்கு விதை நெல் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டது. 3000 ஏக்கரில் ஜப்பானிய முறை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. 405 டன் ரசாயன உரங்கள் வழங்கப் பட்டன. இப் பகுதியில் சோளம் சாகுபடி விஷயத்தில் பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டு, இப்போது சாகுபடி கணிசமாக அதிகரித் துள்ளது.

கரையோரத்தில் மணல் பாங்கான பகுதியில் முந்திரி சாகு படிக்காக உதவி அளிக்கப்பட்டது. தக்காவி கடன் பெற்று, சுமார் 241 ஏக்கரில் குடியானவர்கள் முந்திரி பயிர் செய்திருக்கிறார்கள். இதனைக் கண்டு மற்ற குடியானவர்களுக்கும் ஊக்கம் ஏற்பட் டது. தரிசாகக் கிடந்த மேற் கொண்டு 600 ஏக்கரில் முந்திரி சாகுபடி மேற்கொள்ளப் பட் டிருக்கிறது. இந்த வட்டாரத் துக்கு 229 ராத்தல் முந்திரி விதை வழங்கப் பட்டது.

தேனீ வளர்ப்பு



குடியானவர்களுக்கு 53மின் சார மோட்டார் பம்பு செட்டு கள் வழங்கப்பட்டன. இந்த வட்டாரம் தொடங்கப்பட்ட காலத்தில் 51 சதவீத மக்கள் கூட்டுறவு இயக்கத்தினால் பய னடைந்து வந்தனர். இரண் டாம் திட்ட முடிவில் 65 சதவீத மக்கள் கூட்டுறவு இயக்கத்தினால் பயனடைந்து வருகின்றனர்.

பனஞ் சர்க்கரை

இந்த வட்டாரத்தில் பனை மரங்கள் அதிகம். எனவே பனை மரத் தொழில்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்

பட்டுள்ளது. சுத்தமான முறையில் விஞ்ஞான பூர்வமாக பனைவெல்லம் உற்பத்தி செய்வதற்காக, பனைவெல்ல உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு 30 பனைவெல்ல கருவிகள் வழங்கப் பட்டன. பனஞ்சாறிலிருந்து சர்க்கரை எடுப்பதற்கான செண்ட்ரி பியூகல் யந்திரம் ஒன்று வெல்ல உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்பட்டது. தோல் பதனிடும் தொழில், மண் 'பாண்டத் தொழில் ஆகியவைகளுக்கும் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

துணி பொம்மை உற்பத்தியில் 12 பேருக்கு பயிற்சி அளிக்கக் கூடிய பயிற்சி நிலையம் ஒன்று இந்த வட்டாரத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. பயிற்சி பெற்றவர்கள் விரைவில் கூட்டுறவு முறையில் உற்பத்தி யூனிட் .தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த வட்டாரத்தில் கதர் வேலை மிகவும் பிரபலமடைந் துள்ளது. சர்வ சேவா சங்கம் போன்றவைகள், ராட்டை வழங்கு வதிலும், கதர் விற்பனையிலும் குறிப்பிடத்தக்க முறையில் பணி யாற்றுகின்றன. இந்த வட்டாரத்தில் 1820 ராட்டைகள் வழங்கப் பட்டுள்ளன ; 4 மாதர் சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. அவை மூலம் தையல் யந்திரங்கள் முதலியன வழங்கப்பட்டு, பல பெண்கள் தையல் தொழில் தெரிந்தவர்களாக விளங்கு கின்றனர். சேமிப்பு இயக்கத்திலும் அவர்கள் அக்கறை காட்டி வருகிறார்கள்.

விவசாயிகளுக்கு, பம்பு செட்டுகள் வழங்குவதற்காகவும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகவும் ரூ. 2,02,840 கடன் வழங்கப்பட்டது. கிராமங்களில் வீடுகள் கட்டுவதற்கு உதவும் வகையில் ரூ. 2,26,30 கடன் வழங்கப்பட்டுள்ளது

சாத்தாங்குளம்

சாத்தாங்குளம் வட்டாரம் 1958ல் தொடங்கப்பட்டது. இதில் 21 பெரிய கிராமங்களும் 269 குக்கிராமங்களும் உள்ளன. இது மழை குறைந்த வறட்சிப் பிரதேசம். இந்த வட்டாரத்தில் 53 வானம் பார்த்த ஏரிகள் உள்ளன. இவற்றில் சில ஏரிகளுக்கு, மணிமுத்தாறு நதியிலிருந்து நீர் கிடைக்கின்றது. ஆனால் நதியில் நீர் அதிகமாக வரும்போது மட்டுமே சப்ளை கிடைக் கிறது. சிறு பாசனத் திட்டத்தின் கீழ் பாசனம் பெறும் நிலப் பரப்பு 1660 ஏக்கர்தான்.

இந்த வட்டாரத்தில் பனை மரங்கள் அதிகம். பனை வெல்லம், பனை ஓலைப் பாய்கள், கூடைகள், பனை ஓலைகள், பனை நார் ஆகி யவைகளைக் கொண்டே மக்கள் வாழ்கின்றனர். பனை நார் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது.

1958 லிருந்து 1961 வரை இந்த வட்டாரத்தில் அபிவிருத்தி வேலைகளின் சாதனைகள் வருமாறு:—வட்டார தலைமை கிராமமான சாத்தாங்குளத்தில், வட்டார வளர்ச்சி வேலை ஆரம்பிக்கப் படு முன்பு புன்செய்ப் பயிர்கள் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டன. ஆனல் இப்பொழுது நெல்லும் வாழையும் பயிர் செய்யப் படுகின்றன. மின்சார பம்பு செட்டுகளைப் பயன்படுத்தி, கிணற்று நீர் மூலமாக இப்போது நெல் சாகுபடி செய்கிறார்கள். இந்த வட்டாரத்தில் 211 மணங்கு பொறுக்கு விதை நெல் வழங்கப் பட்டது. அம்மோனியம் சல்பேட் 5860 மணங்கும், சூப்பர் பாஸ் பேட் 164 மணங்கும் வழங்கப்பட்டன. தழை உர விதைகள் 125 மணங்கும் இரும்புக் கலப்பைகள் 193 ம் வழங்கப்பட்டன. 471 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டுள்ளன. 213 கிராம கக்கூஸ்கள் கட்டப்பட்டன. 101 குடிநீர் கிணறுகள் புதுப்பிக்கப் பட்டன. பாசன வேலைகளுக்காக ரூ. 1,68,262 கடன் வழங்கப் பட்டது.

உடங்குடி

உடங்குடி வட்டாரம், 1959 ல் பூர்வாங்க வேலை நிலை வட்டார மாக மேற்கொள்ளப்பட்டது. 1960 லிருந்து முதல் நிலை வட்டார மாக ஆக்கப்பட்டுள்ளது. சென்ற இரண்டு ஆண்டுகளில் இந்த வட்டாரத்தில் புதிதாக சுமார் 150 ஏக்கர், கிணற்றுப் பாசனம் பெற்றன. அந்தக் கிணறுகளில் மின்சார பம்பு செட்டுகள் அமைக்கப் பட்டுள்ளன. 150 ஏக்கர் பூமி புதிதாகப் பண் படுத்தப்பட்டு, சாகுபடிக்கு வந்துள்ளது. இரண்டே ஆண்டுகளில் இந்த வட்டாரத் தில் சுமார் 75 சதவீத விளை நிலங்களில் பொறுக்கு விதைகளைப் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். 160 ஏக்கரில் ஜப்பானிய சாகுபடி முறை மேற் கொள்ளப்பட்டது.

டாலர் வசதியை சம்பாதிக்கக் கூடிய முந்திரி இங்கு சுமார் 100 ஏக்கரில் பயிரிடப் படுகின்றது. முந்திரி சாகுபடி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 7 குடியானவர்களுக்கு ரூ. 3700 வரை கடன் வழங்கப் பட்டது.

உடங்குடி வட்டாரத்தில், குறிப்பிட்டதொரு அடக்கமான பகுதியில் ஆயிரம் ஏக்கரில் தென்னை பயிராகின்றது. தென்னை சாகுபடியை அபிவிருத்தி செய்வதில் ரசாயன உரங்களுக்கு வகை செய்வதற்காக தென்னை சாகுபடியாளருக்கு ரூ. 5000 வரை கடன் அனுமதிக்கப் பட்டுள்ளது.

இந்த வட்டாரத்தில் மூன்று ஏரிகள் மட்டுமே உள்ளன. அவை வானம் பார்த்தவை. கிணறுகள் வெட்டியும், மின்சார பம்பு செட்டு கள் அமைத்தும் பாசன வசதி செய்யப்படுகின்றது. இந்த

வட்டாரத்தில் 35 கூட்டுறவு கடன் வழங்கு சொசைட்டிகள் உள்ளன.

உடங்குடி வட்டாரத்தில் சில பகுதிகளில் தேனீ வளர்ப்புத் தொழில் பிரபலமடைந்துள்ளது. 60 தேனடைக் கூண்டுகள் வழங்கப்பட்டன. பயனடைகிறவர்களிடமிருந்து அச் செலவில் பாதி வசூலித்துக் கொள்ளப்பட்டது. அரசாங்கத்துக்கு இந்த வகையில்



குற்றாலம் சிறுவர் பூங்கா

செலவு ரூ. 900. இந்த வட்டாரத்தில் 27 வெல்ல சொசைட்டிகள் இயங்கி வருகின்றன. ஒரு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடமும், 2 ஆரம்ப பள்ளி கட்டிடங்களும் கட்டப்பட்டன. இதற்கு ஆன செலவு ரூ. 35,000. இதில் 50 சத விகித தொகையை மக்கள் உதவினர்.

கருங்குளம்

கருங்குளம் வட்டாரம் 1957 ல் ஏற்பட்டது. இதில் 37 ரெவின்யூ கிராமங்கள் அடங்கியுள்ளன. தாமிரபரணியின் மருதூர் அணைக்கட்டு மூலம் இப் பகுதி பாசன வசதி பெறுகின்றது. மணிமுத்தாறு தேக்கம் கட்டப்பட்ட பின்பு, இந்த வட்டாரத்து ஏரி குளங்களுக்கு அதிக அளவில் நீர் கிடைக்கின்றது. இது போக வானம் பார்த்த ஏரி குளங்களும், பாசனக் கிணறுகளும் உள்ளன. இந்த வட்டாரத்தில் வல்லநாட்டில் ஒரு உயர்நிலைப் பள்ளி உள்ளது. 10 உயர்தர ஆரம்பப் பள்ளிகளும் 63 ஆரம்பப் பள்ளிகளும்

இப் பகுதியில் உள்ளன. 1957 லிருந்து இதுவரை இந்த வட்டாரத்தில் அபிவிருத்தி வேலைகள் விவரம் வருமாறு :—

குடியானவர்களுக்கு மொத்தம் 366 திருந்திய முறை உழு கருவிகள் வழங்கப்பட்டன. திட்ட காலத்தில் 54 டன் பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டன. பயிர்ப் பாதுகாப்புக்காக 15 டன் மருந்துகள் வழங்கப்பட்டன. முதலாவது இரண்டாவது திட்ட காலங்களில் 5225 ஏக்கரில் ஜப்பானிய முறை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. 850 கம்போஸ்ட் உரக் குழிகள் வெட்டப்பட்டன. 9517 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டது. சென்ற 10 ஆண்டுகளில் இந்த வட்டாரத்தில் 1939 ராட்டைகள் வழங்கப்பட்டன. ரூ 17000 பெறுமான கதர் விற்கப்பட்டது.

வட்டார வளர்ச்சி வேலை தொடங்கப்பட்ட பின்பு, பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும், கூட்டுறவு கைத்தொழில் சங்கங்கள் மூன்றும், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மக்களில் சுமார் 77 சதவிதம் பேர் கூட்டுறவுச் சங்கங்களின் பயனை அனுபவித்து வருகின்றனர்.

தொழில் வளர்ச்சித் திட்டம் மூலம் முதலாவது இரண்டாவது திட்டக் காலங்களில் 120 பேர் வேலை வசதி பெற்றுள்ளனர். திட்ட காலத்தில் 100 தேனீப் பெட்டிகள் வழங்கப்பட்டன இதனுல் 100 குடும்பங்கள் கூடுதல் ஊதியம் பெற்று பயனடைகின்றன. இத் திட்டத்துக்குச் செலவு ரூ 3500 ஆகும். 26 கிராம தொழில் வினைஞர்களுக்கு ரூ 4000 கடன் வழங்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு 30 தொழில் வினைஞர்களுக்கு விரைவில் ரூ 35000 வழங்கப்படும். இந்த வட்டாரத்தில் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதுவரை ரூ. 1,14,000 வழங்கப்பட்டுள்ளது.

கையால் செய்யும் காகிதம்

செய்துங்கநல்லூரில் ரூ 40,000 செலவில் விரைவில், கையால் காகிதம் செய்யும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படும். இத்தொழிற்சாலை மூலம் ஆண்டு ஒன்றுக்கு 300 டன் காகிதம் தயாரிக்கலாம். 50-60 பேர்கள் வேலை வசதி பெறுவார்கள்.

இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட 12 பேர்களுக்கு கடன் தொகையாக ரூ 2,000 வழங்கப்பட்டிருக்கிறது.

கருங்குளம் வட்டாரத்தில் பின்கண்ட மூன்று கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன:

1. செய்துங்கநல்லூரில் மண்பாண்டத் தொழில் கூட்டுறவுச் சங்கம். இதில் உறுப்பினர்கள் 45 பேர்.

2. வல்லநாட்டில் ஹரிஜன செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். இதில் உறுப்பினர்கள் 105 பேர்.

3. களியாவூர் பாய் முடை வேலை கூட்டுறவுச் சங்கம். இதில் உறுப்பினர்கள் 33 பேர்.

ஓடு தொழிற்சாலை ஒன்று தொடங்கப்பட்டு தினம் 35 பேருக்கு அது வேலை அளிக்கிறது.

இந்த வட்டாரத்தில் நகர பஞ்சாயத்துக்கள் இல்லை. எல்லா கிராமங்களிலும் பஞ்சாயத்துக்கள் உள்ளன. திட்ட காலத்தில் ரூ 48,000 செலவில் 8 பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. இதில் 50 சதவீதம் பொதுமக்கள் உதவினர். திட்ட காலத்தில் புதிதாக 6 பள்ளிகள் தொடங்கப்பட்டன.

இந்த வட்டாரத்தில் கிராம சுகாதார திட்டத்தின்கீழ் 53 வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் 33 வேலைகள் முடிந்துவிட்டன. மற்ற வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி

தூத்துக்குடி வட்டாரத்தில் 36 கிராமங்கள் உள்ளன. வேளாண்மை அபிவிருத்திக்காக 130 டன் பொறுக்கு விதை நெல்லும் 10டன் பொறுக்கு விதைக் கம்பும் வழங்கப்பட்டன. 840 டன் சராயன உரங்கள் கொடுக்கப்பட்டன.

இந்த வட்டாரத்தில் சுமார் 50 ஏக்கரில் புதிதாக முந்திரி சாகுபடி வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 5,000 ஏக்கரில் ஜப்பானிய சாகுபடி முறை மேற்கொள்ளப்பட்டது.

கிராம மக்களுக்கு துணைத் தொழில் அளிப்பதற்காக 800 ராட்டைகள் இந்த வட்டாரத்தில் விற்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டது. ஹரிஜனங்களுக்கு 30 ராட்டைகள் இனமாக வழங்கப்பட்டன.

தூத்துக்குடி வட்டாரத்தில் உள்ள கூட்டாம்புளியில் பனை ஓலை பொருள் பயிற்சி நிலையம் ஒன்று ரூ 13,800 செலவில் நிறுவப்பட்டுள்ளது. இதில் 15 மாணவிகள், மாதம் ரூ 20 உபகாரச் சம்ப

ளம் பெற்று பயிற்சி பெற்றனர். 1—3—61 முதல் மேலும் 15 மாணவிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர். ஓலையினுல் பூக்கள், மாலைகள், அழகிய பெட்டிகள், குடைகள் முதலியன செய்வதில் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் இந்த நிலையம் தொழில் கூட்டுறவு திட்டத்தின் கீழ் நடத்தப்படும்.

மங்களகிரியில் ரூ 29,000 செலவில் தச்சுப்பட்டறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் 8 மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்குரூ 25 வீதம் உபகாரச் சம்பளம் அளித்து பயிற்சியளிக்கப்படுகிறது.

முடி திருத்தும் கருவிகள்

முடிவெட்டும் தொழில் செய்வோர், சலவைத் தொழில் செய்வோர் ஆகியோருக்கு பாதி விலையில் தொழில் கருவிகள் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வட்டாரத்திலுள்ள கருப்பட்டி உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ 300 மானிய உதவி வழங்கப்பட்டது.

நவீன கல்லுப்பட்டி செக்குகள் 2 பாதி விலையில் வழங்கப்பட்டன.

கோவில்பட்டி

கோவில்பட்டி வட்டார வளர்ச்சித் திட்டம் 1954-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1957-ல் சமுதாய நல திட்டமாக மாற்றப்பட்டது. 1960 அக்டோபர் முதல் பஞ்சாயத்து யூனியனுக இயங்கி வருகின்றது.

இந்த வட்டாரத்தில் அபிவிருத்தி வேலைகளில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் வருமாறு:—சென்ற ஐந்து ஆண்டுகளில் பொறுக்கு விதை நெல் 10526 ராத்தல் வழங்கப்பட்டது. சிறு தானியங்களில் பொறுக்கு விதைகள் 18045 ராத்தல்கள் வழங்கப்பட்டன. மருந்து தெளிக்கும் கருவிகள் 40 ம், பழச் செடிகள் 3000 மும், தென்னங்கன்றுகள் 1000 மும் வழங்கப்பட்டன. 13 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. 5 மக்கள் மனமகிழ் மன்றங்கள் கட்டப்பட்டுள்ளன. 26 சிறுவர் பூங்காக்கள் நிறுவப்பட்டுள்ளன. 15 கிராம நூல் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 10 மாதர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

இந்த வட்டாரத்தில் தொழிலாளருக்காக வீடு கட்ட உதவும் அரசாங்க உதவித் திட்டத்தின் கீழ், கோவில்பட்டி லாயல் மில்ஸ் தொழிலாளர்களுக்காக வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று

ஆரம்பிக்கப்பட்டு 1956 முதல் இயங்கி வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு 65 சதவீதம் கடனுகவும் 25 சதவீதம் மானியமாகவும் இந்திய அரசாங்கம் பணம் கொடுத்து உதவுகிறது. இச் சங்கத்தில் 139 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்திய அரசாங்கம் ரூ 2,98,155 கடனுகவும், ரூ 57,337 மானியமாகவும் கொடுத்திருக்கிறது.

புதூர்

புதூர் வட்டாரம் 1959-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1960-ல் வட்டார வளர்ச்சி முதல் நிலை வேலை மேற்கொள்ளப்பட்டது. இந்த வட்டாரம் 49 கிராமங்களையும், 66 குக்கிராமங்களையும் கொண்டது. மக்களில் பெரும்பான்மையோர் விவசாயிகள். போதிய மழை இன்மையால் புஞ்சை தானியங்கள்தான் அதிகப்படியாக சாகுபடியாகின்றன. இப்பகுதியில் பெரும்பாலான கிராமங்கள் முன்பு ஜமீன் பகுதியில் இருந்தன. ஏரி, குளங்கள் எல்லாம் இப்பொழுது சீர் திருத்தப்பட்டுள்ளன.

இந்த வட்டாரத்தில் 76 கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. ரூ. 17, 400 நீண்ட காலக் கடனுகவும், ரூ. 19,590 குறுகிய காலக் கடனுகவும் வழங்கப்பட்டுள்ளது. 20 ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்காக ரூ. 3000 கடனுகத் தரப்பட்டுள்ளது. புதூர், சென்னமரெட்டிப்பட்டி ஆகியவைகளில் உயர்தர பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதூரில் மேல்மட்ட தண்ணீர் தொட்டி

கிராமநலப் பயிற்சி நிலையம், கோவில்பட்டி



காங்கயம் காளை : இந்த ஜாதி மாட்டின் பிறப்பிடம் கோவை மாவட்டம் காங்கயப் பகுதியாகும். இது உழைப்புத் திறனில் சிறந்தது. கண்ணைக் கவரும் அழகுடன் கட்டான உடலுடன் வலிமையும், வீரியமும் வாய்ந்தது. சமுதாயநல வளர்ச்சி வட்டாரங்களில் நாட்டு மாடுகள் தரவிருத்திக்கு இந்த ஜாதியைப் பயன்படுத்துகிறார்கள்.

கட்டப்பட்டுள்ளது. மருத்துவமனை ஒன்றும் புதூரில் கட்டப்பட்டுள்ளது. வைப்பாற்றில் ரூபாய் 6 லட்சம் செலவில் ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க வேலைகளில் இந்த வட்டாரம் முன்னணியில் நிற்கிறது. விவசாயப் பெருக்கத்திற்காக பொறுக்கு விதைகள் 1990 ராத்தல் வழங்கப்பட்டன. 40 டன் ரசாயன உரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 410 குழிகள் தோண்டி தழை உர உற்பத்தி செய்து காட்டப்பட்டிருக்கிறது.

ஓட்டப்பிடாரம்

ஓட்டப்பிடாரம் வட்டாரம் 1958 ல் ஆரம்பிக்கப்பட்டு 1959 முதல், முதல் நிலை வட்டாரமாகியது. 1961 ஏப்ரலிலிருந்து பஞ்சாயத்து யூனியனாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இதில் மொத்தம் 64 ரெவின்யூ கிராமங்கள் உள்ளன. 58 பஞ்சாயத்துகள் செயலாற்றி வருகின்றன. சென்ற இரண்டரை ஆண்டுகளில் இந்த வட்டாரத்தில் முக்கிய சாதனைகள் வருமாறு :

20 கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. சுமார் 1000 விவசாயிகள் பயிற்சி பெற்றனர். 32 விவசாயச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. அமோனியம் சல்பேட் 152 டன்க

ளும் சூபர்பாஸ்பேட் 35 டன்களும் வழங்கப்பட்டன. இந்த வட்டாரத்தில் கால்நடைகள் தரத்தை உயர்த்துவதற்காக இரண்டு கால்நடை முதலுதவி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நான்கு நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வட்டார வளர்ச்சி வேலை தொடங்குவதற்கு முன்பாக 86 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இப்பொழுது மேலும் 19 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 84 சதவீதம் மக்கள் கூட்டுறவு இயக்கம் மூலம் பயனடைந்து வருகின்றனர். இந்த வட்டாரத்தில் 1959 அக்டோபர் முதல் முழுக் கடன் திட்டம் அமுலிலிருந்து வருகிறது.

ஒட்டப்பிடாரம் வட்டாரத்தில் மலைப்பட்டி கிராமத்தில் கூட்டுறவுப் பண்ணை ஒன்று பணியாற்றத் தொடங்கியுள்ளது. இப்பண்ணையின் பரப்பளவு 213 ஏக்கர்.

தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐந்து கூட்டுறவு பண்டக சாலைகள், ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கம், ஒரு குடிசைத் தொழில் சங்கம், நான்கு கருப்புக்கட்டி சங்கங்கள் ஆகியனவும் செவ்வனே பணியாற்றி வருகின்றன. கொம்பாடி, வடமலாபுரம், கைலாசபுரம் புதூர்பாண்டியாபுரம் ஆகிய கிராமங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காகவும், சக்கம்மாள்புரம் கிராமத்தில் மறவர் குலத்தவர்களுக்காகவும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

குருவிகுளம்

சங்கரன் கோவில் வட்டத்தில் உள்ள குருவிகுளம் வட்டாரம் 52 கிராமங்களைக் கொண்டது. 1949 லேயே இப்பகுதியில் கிராம அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1953 ல் தேசிய நலப்பரப்புத் திட்டம் தொடங்கப்பட்டது. 1955 முதல் இந்த வட்டாரத்தில் சமுதாய நல வளர்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 1959 முதல் சமுதாய நல வளர்ச்சி வேலையில் இரண்டாம் நிலை தொடங்கிற்று. 1960 முதல் பஞ்சாயத்து யூனியனாகச் செயல் பட்டு வருகின்றது.

இப்பகுதியில் 111 பாசனக் குளங்கள் உள்ளன. இவற்றின் மூலம் 5300 ஏக்கர் பாசனம் பெறுகின்றன. 7100 கிணறுகள் மூலம் சுமார் 13,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகின்றது.

ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகு முன்பே இப்பகுதியில் அபிவிருத்தி வேலைகள் தொடங்கி விட்டன. வேளாண்மைத் தொழில் முறைகளும், மக்கள் மனப்பாங்கும் வெகுவாக முன்னேற்றமடைந்துள்ளன. இந்த வட்டாரத்தில் 10,000 மணங்கு பொறுக்கு விதைகள் வழங்கப்பட்டுள்ளன. 44,000 மணங்கு ரசாயன உரங்களும்

400 திருந்திய முறை வேளாண்மைக் கருவிகளும் வழங்கப்பட்டுள் ளன. இரண்டாம் திட்ட காலத்தில் ரூ 9200 செலவில் விலங்கு மருத்துவ மனை ஒன்று கட்டப்பட்டது. திருவேங்கடத்தில் ஒன்றும் நாய்க்கர் பட்டியில் ஒன்றுமாக இரண்டு விலங்கு மருத்துவ முதல் உதவி நிலையங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தொழுநோய் சிகிச்சை

இந்த வட்டாரத்தில் எல்லா கிராமங்களிலும் நல்ல குடிநீர் வசதி ஏற்பட்டுள்ளது. மாயப்பாரையில் ரூ 15,000 செலவில் மேல் மட்ட தண்ணீர் தொட்டி ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. ரூ 20,000 செல வில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டுள்ளது. பொது மக்கள் இதற்கு ரூ 10,000:உதவினர். பெருங் கோட்டூரில் தொழு நோய் சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வட்ட„ரத்தில் சென்ற பத்து ஆண்டுகளில் ரூ 1,41,000 செலவில் 43 மைல் நீள சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இரண் டாம் திட்ட காலத்தில் 4 கிராமங்களில் மாதர் சங்கங்களுக்கு கட்டி டங்கள் கட்டப்பட்டுள்ளன. 3000 க்கு மேற்பட்ட ராட்டைகள் இந்த வட்டாரத்தில் வழங்கப்பட்டுள்ளன. குருவிகுளத்தில் தீவிர கதர் டிப்போ ஒன்றும் உள்ளது. நவீன முறையில் தோலுரிப்பு வகையைக் காட்டும் நிலையம் ஒன்றும் இந்த வட்டாரத்தில் உள்ளது. எலும்புத்தூள் தயாரிக்கப்பட்டு குடியானவர்களுக்கு வழங்கப் படுகிறது.

இலஞ்சி தண்ணீர் சப்ளை தொட்டி



கணபதி பட்டியில் தேசிய மாணவ படையினர் ஒன்றரை மைல் நீள சாலே அமைத்தனர். வெள்ள குளத்தில் கிராம சேவா சங்கத்தினர் 2 பர்லாங் நீள சாலே அமைத்தனர். ஊமைத் தலேவன் பட்டியில் கிராம வாசிகள் ஒரு பர்லாங் நீள சாலே அமைத்தனர்.

சங்கரன்கோவில்

சங்கரன்கோவில் வட்டாரத்தில் 1953 ல் தேசிய நலப்பரப்புத் திட்டம் அமுலுக்கு வந்தது. இரு ஐந்தாண்டுத் திட்டங்களின் உதவியால் இந்த வட்டாரத்தில் பழைய காட்சிகள் மறைந்து புதுப் பொலிவு தென்படுகின்றது. சென்ற ஏழு ஆண்டுகளில் இந்த வட்டாரத்தில் சமுதாய நலத் திட்ட உதவியால் ஒரு உயர்நிலேப் பள்ளிக் கட்டிடமும், 24 ஆரம்ப பள்ளிக் கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளன. எட்டு கிராமங்களில் வளர்ந்தோர் கல்வி நிலேயங்களும், நான்கு மாதர் சங்கங்களும், 12 கிராம வாசகசாலேகளும் ஏற்பட்டுள்ளன. 23 ஊர்களுக்கு ரேடியோக்கள் வழங்கப்பட்டன. 29 கிராமத் தலேவர்கள் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. 950 கிராமத் தலேவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. பெரும்பத்தூரில் கூட்டுறவு விவசாயப் பண்ணே ஒன்று துவங்கப்பட இருக்கிறது.

சென்ற ஏழு ஆண்டுகளில் 3,600 மணங்கு பொறுக்கு விதைகள் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த வட்டாரத்தில் குடிநீர்ப்பஞ்சம் தீர்க்கப்பட்டுவிட்டது. திட்ட காலத்தில் 45 புதிய கிணறுகள் வெட்டப்பட்டதுடன் 94 கிணறுகள் பழுது பார்க்கப்பட்டன. திட்டவேலே தொடங்கிய பின்னர் இந்த வட்டாரத்தில் 14 புதிய கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டு மொத்தம் 40 சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. ஒரு விவசாய பாங்கும் செயல்பட்டு வருகின்றது.

1953 ல் கூட்டுறவு சங்கங்களில் இருந்தோர் 25 சதவீதம் பேர் ஆவர். 1960 ல் இவர்கள் தொகை 66 சதவீதமாக உயர்ந்துள்ளது. முதல் திட்ட தொடக்கத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடன் தொகை ரூ 95,000. இந்த ஆண்டில் இத்தொகை ரூ 4,28,000 ஆக அதிகரித்துள்ளது.

மேலநீலித நல்லூர்

மேலநீலித நல்லூரில் சமுதாய நலத்திட்டம் 1958 ல் தொடங்கப்பட்டது. இரண்டாம் நிலே வட்டாரமாகச் செயல்பட்டு வருகின்றது. இந்த வட்டாரம் வறண்ட பிரதேசம். மக்கள் உழைப்பில் சிறந்தவர்கள். வேளாண்மை அபிவிருத்திக்காக சொல்லப்படும் புதிய முறைகளே மக்கள் ஆர்வத்தோடு பின்பற்றுகிருர்கள்.

சேந்த மரம் கிராமத்தில் அரசாங்க கடன் உதவியைப் பயன் படுத்தி விவசாயிகள் 6 ஏக்கர் பழத்தோட்டம் அமைத்துள்ளனர். சோளம், பருத்தி, மிளகாய் சாகுபடியில் இவ்வட்டார விவசாயிகள் சிறந்து விளங்குகின்றனர்.

இந்த வட்டாரத்தில் 10,400 கால்நடைகளுக்கும் 11,400 கோழிகளுக்கும் நோய் தடுப்பு ஊசி போடப்பட்டிருக்கிறது. கால் நடைகள் இன அபிவிருத்திக்காக 5 காங்கயம் பொலிகாளைகளும் 50 செம்மறிக் கிடாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

வாசுதேவ நல்லூர்

வாசுதேவ நல்லூர் வட்டாரம் 1961 ஏப்ரல் முதல் பஞ்சாயத்து யூனியனாக இயங்கி வருகின்றது.

38 கிராமங்களைக் கொண்ட இந்த வட்டாரம் மேற்குத் தொடர்ச்சிமலை அடிவாரத்தில் சங்கரன்கோவில் வட்ட மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. கருப்பையாறு, உள்ளாறு ஆகிய ஆறுகள் இப்பகுதிக்குப் பாசனமளிக்கின்றன. ஆனால் அவை நிரந்தர பாசன வசதி அளிப்பன அல்ல. எனவே குடியானவர்கள் பாசன வசதிக்கு குளங்களையும் கிணறுகளையுமே முக்கியமாக நம்ப வேண்டியிருக்கிறது. திட்ட வேலைகள் தொடங்கு முன்பு இப்பகுதியில் 3,879 கிணறுகளும் 17 நீர் இறைக்கும் பம்புகளும் தான் இருந்தன. புதிதாக 4,945 கிணறுகள் தோண்டப்பட்டன. 194 புதிய பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக சாகுபடி நிலப் பரப்பளவு 18,948 ஏக்கர் அதிகரித்துள்ளது. தானிய உற்பத்தி நல்ல முறையில் பெருகியிருக்கிறது. இப்பகுதியில் திருந்திய முறை வேளாண்மைக் கருவிகள் மொத்தம் 846 வழங்கப்பட்டுள்ளன. கிராமங்களில் ஒவ்வொருவருக்கும் பொறுக்கு விதைகள் கிடைக்க வழி ஏற்பட்டிருக்கிறது.

சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நீர்ப் பாசன திட்ட வேலைகளுக்காக ரூ 2,23,400 ம், நிலத்தைப் பண் படுத்த ரூ 13,675 ம், இதர விவசாய அபிவிருத்தி வேலைகளுக்கு ரூ 4,85,000 ம் கடனாகக் கொடுக்கப்பட்டது.

இந்த வட்டாரத்தில் 44 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. திட்ட காலத்தில் இச் சங்கங்கள் குறுகிய கால கடனாக ரூ 42,76,000 வழங்கின. திட்ட காலத்தில் 24 புதிய கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இரண்டு கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு, செவ்வனே செயலாற்றி வருகின்றன.

திட்ட காலத்தில் பஞ்ச நிவாரண திட்ட வேலைகளின் கீழ் 18 மைல் நீள கச்சா ரோடு போடப்பட்டது. சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 24 மைல் நீள சாலைகள் அமைக்கப்பட்டன. கிராமங்களுக்கும் நெடுஞ்சாலைகளுக்கும் வழி ஏற்பட்டதால், விவசாயப் பொருள்கள் வெளியே சென்று, குடியானவர்களுக்கு நல்ல பலனைத் தருகின்றன.

தேனீப் பெட்டிகள்

வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் 82 தேனீப் பெட்டிகள் வாங்கி வழங்கப்பட்டன. புளியங்குடியில் விஸ்வகர்ம கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ 5,000 உதவித் தொகை அளிக்கப்பட்டது. இதனால் அவர்கள் தங்கள் சங்கத்துக்குப் புதிய வகைக் கருவிகளை வாங்கி உற்பத்தியைப் பெருக்க முடிந்தது. கொழும்பிலிருந்து தாய்நாடு திரும்பிய முடி சிங்காரிப்பவர்களுக்கு ரூ 3,400 வட்டி இல்லாக் கடனைக் கொடுக்கப்பட்டது. ராயகிரியில் தோல் பதனிடும் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. வாசுதேவ நல்லூரில் கருமான் வேலையில் பயிற்சி அளிக்க ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதற்கு ஒரு பெரிய கட்டிடம் உருவாகிக்கொண்டிருக்கிறது. இரண்டு கைக்குத்தரிசி

சமூக நல மன்றம்; பண்டார குளம்



சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவை 28 பேர்களுக்கு வேலை அளித்து வருகின்றன.

ஏழை விவசாயிகள் தங்கள் வீடுகளைப் புதுப்பித்துக்கொள்ள ரூ 10,000 கடனாகத் தரப்பட்டது. வீரசிகாமணியிலும், செந்தட்டையாபுரத்திலும் மறவர்களுக்கு 40 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சங்குபுரத்திலும் விஸ்வநாதப் பேரியிலும் துரைசாமி புரத்திலும் ஆதி திராவிடர்களுக்காக 60 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

வட்டாரத்தில்8 பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான்கு பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மின்சாரப் பெருக்கம்

மக்கள் குலம் இன்று பல துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளது. இந்த முன்னேத்திற்குக் காரணமான பல சக்திகளுள் மின்சாரம் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. கைத் தொழில், பொருளாதார முன்னேற்றத்துக்கும், வாழ்க்கை வசதிகளை அடைவதற்கும் மின்சாரம் இன்றியமையாத கருவியாகி விட்டது.

நாடு விடுதலை யடைந்த பிறகு, குறிப்பாக சென்ற பத்தாண்டுக் காலத்தில் தமிழ் நாட்டின் நாட்டுப் புறத்தின் தோற்றம் வெகுவாக மாறிவிட்டது. இருள் அகன்று விட்டது. குடியானவர்கள் முகத்தில் தேங்கியிருந்த கவலை இருளும் வேகமாக மறைந்து வருகின்றது. வாழ்வில் ஒளியேற்றிய இந்த அரிய சக்தி மின்சாரமேயாகும். மின்சாரத்தை மாநிலம் முழுவதிலும் பரவலாகப் பயன்படுத்துவதிலும், கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்துவதிலும், தமிழ் நாடு இன்று இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்றது.

முதலாவது இரண்டாவது திட்ட காலங்களில் பாபநாசம் மின் விசை உற்பத்தி நிலையத்தின் உற்பத்தித் திறன் மேற்கொண்டு 7000 கிலோவாட் அதிகரிக்கப்பட்டது. 1,05,000 கிலோவாட்

சக்தியுள்ள பெரியாறு மின்சார உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டது. 1,80,000 கிலோவாட் சக்தியுள்ள குந்தா மின்விசை நிலையங்கள் நிறுவப்பட்டன. சென்னை பேசின் பிரிட்ஜிலுள்ள அனல் மின்சார நிலையத்தின் உற்பத்தித் திறன் முதல் திட்ட காலத்தில் 30,000 கிலோ வாட்டும், இரண்டாவது திட்ட காலத்தில் 30,000 கிலோ வாட்டும் அதிகரிக்கப் பட்டது.

இவ்வாறு அதிகப்படியாக உற்பத்தி செய்யப்பட்ட மின் விசையைக் கொண்டு செல்வதற்காக, 1,10,000 வோல்ட் சக்தி யுள்ள பெரியாறு—ஆறுமுகனேரி—கயத்தாறு மின் தொடரும், 66000 வோல்ட் சக்தியுள்ள தாழையூத்து—கயத்தாறு புது மின் தொடரும் நிறுவப்பட்டன. நெல்லை மாவட்டத்தில் எப்போதும் வென்றானில் ஒரு 66/11 கிலோவாட் வினியோக நிலையமும், பணக் குடி, களக்காடு, சாத்தங்குளம், ஸ்ரீவைகுண்டம் முதலிய இடங் களில் 33/11 கி. வா. சப் ஸ்டேஷன்களும் நிறுவப் பட்டுள்ளன.

அதிக அழுத்த லைன்கள்

கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக சென்ற பத்து ஆண்டுகளில் 730 மைல் அதிக அழுத்த லைன்களும், 1600 மைல் குறைந்த அழுத்த லைன்களும் அமைக்கப் பட்டன.

முதலாவது இரண்டாவது திட்ட காலங்களில் நெல்லை மாவட்டத்தில் மின்சாரத் துறையில் ஏற்பட்டுள்ள சாதனைகள் வருமாறு:—

சென்ற பத்து ஆண்டுகளில் மாவட்டத்தில் 688 ஊர்களுக்கு புதிதாக மின்சாரம் வழங்கப் பட்டது. 4982 விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டது. 528 சிறு கைத் தொழில்கள் மின்சார வசதி பெற்றன. இதற்காக ஆன செலவு ரூ. 5·31 கோடி ஆகும்.

இது தவிர, திருநெல்வேலி தூத்துக்குடி மின்சார வினியோக கம்பெனியார், திட்ட காலத்தில் 22 கிராமங்களுக்கும், விவசாயம், கைத்தொழில்களுக்கான 880 மோட்டார்களுக்கும் மின்விசை வழங்கியுள்ளனர். மற்றும் ஆறுமுகனேரியிலுள்ள தாரங்கதாரா ரசாயனத் தொழிற்சாலை, தாழையூத்து ரசாயனத் தொழிற் சாலை, கடம்பூரிலுள்ள மதுரை மில், நெல்லை பஞ்சாலை, நாசரத்தி லுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலை, ஸ்ரீ வைகுண்டத்தி லுள்ள திருநெல்வேலி இரும்பு உருக்குத் தொழிற்சாலை, கோவில் பட்டியிலுள்ள வேல் முருகன் எண்ணெய் ஆலை, முதலிய பெரும் தொழிற்சாலைகளுக்கும், அதி அழுத்த லைன் மூலம் மின்சார வசதி விஸ்தரிக்கப் பட்டுள்ளது. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், ஏர்வாடி, வேப்பங்குளம்

ஆகியவைகளிலுள்ள விவசாயப் பண்ணைகள், மணிமுத்தாறு தேக்கப் பகுதி ஆகியவைகளுக்கும் மின்சார வசதி அளிக்கப் பட்டுள்ளது. குற்றாலத்திலிருந்து ஐந்தருவி வரை மின் விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டு, வேலை தொடங்கப்பட்டுள்ளது.

ஒளி பெற்ற கிராமங்கள்

திட்ட காலங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டங்களுக்காக கீழ்க்கண்ட ஊர்களுக்கு மின்சார சப்ளை வழங்கப் பட்டுள்ளது.



பாபநாசம் நீர் மின்சார நிலையம்

செங்கோட்டை வட்டத்தில் வீர கேரளம் புதூர், பண்பொழி, பெரிய பிள்ளை வலசை, வடகரை கீழ்ப்படிகை, கீழ்ப் பாவூர், முத்து கிருஷ்ணபுரம் ஆகிய ஊர்கள்.

நாங்குனேரி வட்டத்தில் பட்டர் புரம், இராம கிருஷ்ணபுரம் ஆகிய ஊர்கள்.

திருச்செந்தூர் வட்டத்தில் காயல் பட்டினம், காயா மொழி.

அம்பா சமுத் திரம் வட்டத்தில் பொட்டல் புதூர்.

கோவில்பட்டி வட்டத்தில் குமரெட்டியாபுரம்.

திட்ட காலத்தில் பேட்டை, கோவில் பட்டி ஆகியவைகளில் அரசாங்க கைத்தொழில் துறையின் தொழில் பேட்டைகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது. மூன்றும் திட்ட காலத்தில் முடியுமானவரை எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி ஏற்படுத்திவிடவேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணமாகும்.

வளரும் தொழில்க

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கம் ஆகும். மக்களின் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்தத் தேவைகளுக்கு ஈடு கொடுத்து, பொருளாதார முன்னேற்றமும் காணவேண்டுமானால், தொழில் வளர்ந்தாக வேண்டும், எனவேதான் ஐந்தாண்டுத் திட்டவேலைகளில் தொழில் வளர்ச்சிக்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் சிமிட்டி, ஜவுளி, ரசாயனம், கிராமக் கைத் தொழிலகள், பனைவெல்லத் தொழில் ஆகிய துறைகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வேளாண்மைதான் முக்கிய தொழில் என்ற நிலை மாறி, வேளாண்மையுடன் கைத் தொழில்களும் பரவலாகப் பெருகி வரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பஞ்சாலைத் தொழிலிலும் நூற்பு ஆலைகளிலும், தமிழ்நாடு தலை சிறந்து விளங்குகிறது. எனினும் கைத்தறியாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்கச் செய்ய தகுந்த ஏற்பாடுகள் அவசி

யம் என்பது உணரப்பட்டது. இதையொட்டியே கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்பட அரசாங்கம் ஊக்கமும் ஆதரவும் அளித்தது.

தமிழ் நாட்டிலேயே, நெல்லை மாவட்டத்தில்தான் முதன் முதலாக கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்தப்பட்டது. தென் இந்திய கூட்டுறவு நூற்பு ஆலை என்ற பெயரில் 1958 ல் திருநெல்வேலி பேட்டையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலை, திருப்திகரமாக இயங்கி வருகின்றது. இந்த கூட்டுறவு ஆலைக்கு செலுத்தப்பட்ட மூலதனம் ரூ 47·94 லட்சம். தமிழ் நாடு அரசாங்கம் இதில் எடுத்துக் கொண்டுள்ள பங்கு ரூ 16,77,500 ஆகும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் ...ள் ரூ 17·31 லட்சத்துக்கும், சென்னை மாநில கைத்தறி ...வாளர் கூட்டுறவுச் சங்கம் ரூ 15·90 லட்சத்துக்கும் பங்குகள் ...ள்ளன. சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு ...ன் தலைவரே இந்த ஆலை நிர்வாக டைரக்டர்கள் போர்டின் ... இருக்கிறார். இந்த ஆலையில் உற்பத்தியாகும் நூல் ... ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப் ...து.

தென் இந்திய கூட்டுறவு நூற்பு ஆலை, பேட்டை

இந்த ஆலை 600 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இதில் உள்ள மொத்தக் கதிர்கள் 16,000.

தென் இந்திய கூட்டுறவு நூற்பு ஆலையில் மாதம் ஒன்றுக்கு 20 ம் நெம்பர் நூல் 470 பேலும், 40 ம் நெம்பர் நூல் மாதம் ஒன்றுக்கு 110 பேலும் உற்பத்தியாகின்றன.

திருச்செந்தூர் வட்டம் நாஸரத்தில், திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை என்ற பெயரால் இரண்டாவது கூட்டுறவு ஆலை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. 1961 ஏப்ரல் வரையில் இந்த ஆலைக்

காக செலுத்தப்பட்ட மூலதனம் ரூ 14,66,519 ஆகும். தமிழ் நாடு அரசாங்க பங்கு மூலதனம் ரூ 10 லட்சமும் இதில் அடங்கும். இந்த ஆலை 1958 ல் பதிவு செய்யப்பட்டது. கட்டிட வேலைகள் நடை பெற்று வருகின்றன. வேண்டுமான யந்திரங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

தூத்துக்குடி, கோவில்பட்டி, திருநெல்வேலி நகரம் ஆகிய இடங்களில் தனியார் துறையின் கீழ் ஆலைத் தொழில் வளர்ச்சியடைந்துள்ளது. கோவில்பட்டியில் பருத்தி ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை அரசாங்கம் நடத்தி வருகின்றது.

சிமிட்டித் தொழிற்சாலைகள்

நெல்லை மாவட்டம் தாழையூத்தில் உள்ள இந்தியா சிமெண்ட்ஸ் தொழிற்சாலையில் 1949ல் சிமிட்டி உற்பத்தி தொடங்கியது. முதலில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் டன் உற்பத்தித் திறனுடையதாக இருந்தது. 1957-லிருந்து இதன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 2 லட்சம் டன் ஆக அதிகரித்தது. இப்போது அதன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 4,50,000 டன் ஆகும். ஆந்திரப்பிரதேசம் விசாகப்பட்டினத்திலும், சேலம் மாவட்டம் சங்கரியிலும் கிளைத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி உற்பத்தியை மேலும் அதிகரிக்க திட்டமிட்டிருக்கிறார்கள்.

இத்தொழிற்சாலைக்கு செலுத்தப்பட்டுள்ள முதலீடு 4·7 கோடி ரூபாய். சுமார் 1900 பேர் வேலை செய்கின்றனர். ஊழியர்களின் குழந்தைகளுக்கு பள்ளி வசதி செய்யப்பட்டுள்ளது. தொழில் பயிற்சிக்காக பாலிடெக்னிக் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்க உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 500 வீடுகள் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாரங்கதரா கெமிக்கல்ஸ்

காஸ்டிக் சோடா தயாரிப்புக்கான தாரங்கதரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிடெட் என்ற பெரிய தொழிற்சாலை ஆறுமுகநேரி சாகுபுரத்தில் தொடங்கப்பட்டு, காஸ்டிக் சோடா உற்பத்தி செய்து வருகின்றது. இதில் செலுத்தப்பட்ட மூலதனம் 3·5 கோடி ரூபாய். 650 பேர் இத் தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். இந்த நிறுவனம் 1951 லிருந்து இருந்து வருகின்றது. ஆனால் காஸ்டிக் சோடா தொழிற்சாலைப் பிரிவு 1958ல் தான் தொடங்கப்பட்டது. இத் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 80 டன் காஸ்டிக் சோடா உற்பத்தியாகின்றது. நம் நாட்டிலேயே மிகப் பெரிய காஸ்டிக் சோடா தொழிற்சாலை இது. நாளொன்றுக்கு 150 டன் உற்பத்தி

செய்யக்கூடிய வகையில் இதை அபிவிருத்தி செய்வதற்கான வேலை கள் மேற்கொள்ளப்படுகின்றன. குளோரைன் உப பொருள்களைப் பயன் படுத்தவும் பிளாஸ்டிக் மற்றும் இதர ரசாயனங்களைத் தயா ரிக்கவும் திட்டமிடப்பட்டு வருகிறது.

லட்சுமி மில்ஸ், கோவில்பட்டி

கோவில்பட்டியிலுள்ள லட்சுமி மில்ஸ் கம்பெனி லிமிடெட்டின் கிளையில் 1681 தொழிலாளர்கள் வேலைசெய்கிருர்கள். இந்த மில் 1941ல் 7776 கதிர்களுடன் தொடங்கப்பட்டது. 1955-க் குப் பின் 25300 கதிர்களுடன் கூடிய புதிய ஆலை ஏற்படுத்தப் பட்டது. தற்போது 51120 கதிர்களும் 2880 டப்ளிங் கதிர் களும் உள்ளன. தொழிலாளர்களுக்கு 293 வீடுகள் கட்டித்தரப் பட்டுள்ளன. பள்ளி, ஆஸ்பத்திரி, வாசகசாலை முதலிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. பலவிதமான தரமான நூல்கள் இந்த ஆலையில் உற்பத்தியாகின்றன.

கீதாஞ்சலி மில்ஸ் லிமிடெட்டில் 10,044 கதிர்கள் உள்ளன. 315 தொழிலாளர்கள் வேலை செய்கிருர்கள். செலுத் தப்பட்ட மூலதனம் 14 லட்சம் ரூபாய். 1952ல் இந்த ஆலை ஏற்

தாரங்கதரா காஸ்டிக் சோடா ரசாயன தொழிற்சாலை உள்பகுதி தோற்றம்



படுத்தப்பட்டது. 20 ம் நெம்பர், 26 ம் நெம்பர் நூல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உணவுக்குச் சுவை உயிர் கொடுக்கும் உப்பு விளையும் நேர்த்தி

உப்பளம், நெல்லை மாவட்டத்தின் பெரிய தொழில்களில் ஒன்று. தூத்துக்குடி, ஆறுமுகநேரி பகுதிகளில் உப்பு காய்ச்சப் படுகிறது. உப்புக்காய்ச்சும் தொழில் சமீப காலத்தில் பெருமள வுக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

கிராமத் தொழில்கள்

நமது நாடும், கிராமங்களும் பொருளாதாரத்தில் தன் நிறைவு பெறவும் வேலை வசதிகள் அதிகரிக்கவும் கிராமத் தொழில்களும் வளர்ச்சி யடைந்தாக வேண்டும். எனவேதான் நாடு விடுதலை யடைந்த பிறகு, கிராமத் தொழில்களின் வளர்ச்சிக்காகவும் மறு மலர்ச்சிக்காகவும் :பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறு தொழில்கள் வளர்ச்சியிலும் கூட்டுறவு முறையில் வளர்ச்சி ஏற்படச் செய்வது இன்னும் சிறப்பானது. கிராம கைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதில் அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தி வருகின்றது. கூட்டுறவு முறை தொழில் வளர்ச்சியில் நெல்லை மாவட்டம் சென்ற பத்து ஆண்டுகளில் கணிச மான முன்னேற்றம் கண்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தின் முக்கியமான கிராமக் கைத் தொழில் கள், மண்பாண்டம் செய்தல், கைக் குத்தரிசி, எண்ணெய் செக்கு, சோப்பு உற்பத்தி, செங்கல் செய்தல், தோல் பதனிடும் தொழில், குடிசைத் தொழில் முறையில் தீக்குச்சி செய்தல், பனைவெல்லத் தொழில், பாய் நெய்தல் முதலியனவாகும். முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குவதற்கு முன்பு நெல்லை மாவட்டத்தில்,

எண்ணெய்த் தொழில், மண் பாண்டத் தொழில் வளர்ச்சிக்காக நான்கு கிராம கைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. போதுமான அளவு நிதி உதவியும் தொழில் நுட்ப உதவியும் இல்லாமல், ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள்ளாகவே அவை பணியாற்றி வந்தன. மற்ற தொழில்கள் ஊக்கப்படுத்துவாரின்றி, தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு வந்தன.

நாட்டுச் செக்கு

நெல்லை மாவட்டத்தில் பேட்டை, சிந்தாமணி, கடலை, வள்ளியூர் கீழ்ப்பாவூர், சங்கரன் கோவில், கடைய நல்லூர் ஆகிய 7 இடங்களில் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 337 உறுப்பினர்கள் உளளனர். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ 21,255. நாட்டுச் செக்குகளைக் கொண்டு கடலை எண்ணெயும் நல்லெண்ணெயும் எடுப்பது இந்தச் சங்கங்களின் முக்கிய வேலைகளாகும். உறுப்பினர்கள் வேலை செய்கிறார்கள். பிண்ணுக்கும், எண்ணெயும் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன. கதர் கமிஷனின் உதவி நிதி, மாநில கதர் கிராமத் தொழில் போர்டு மூலமாக இத் தொழிலுக்குக் கிடைக்கின்றது. எண்ணெய் வித்துக்களை வாங்கி இருப்பில் வைத்துக்கொள்ளவும், நடை முதல் மூலதனத்துக்காகவும் கடன் வடிவில் அந்த உதவி வழங்கப்படுகிறது.

கிராம எண்ணெய்த் தொழிலுக்கு ஊக்கமளிப்பதற்காக செக்கு, எண்ணெய் விற்பனையில் குன்டால் ஒன்றுக்கு ரூ 5 கழிவு அனுமதிக்கப்படுகிறது. விற்பனை நிறுவன மானிய உதவியும் இந்தச் சங்கங்களுக்கு அளிக்கப்படுகின்றது. சங்கங்களுக்கு 1961 மார்ச் கடைசிவரையில் ரூ 2,12,510 கடனும், ரூ 3840 மானிய உதவியும் வழங்கப்பட்டுள்ளன. 1960-61-ல் நெல்லை மாவட்டத்தில் எண்ணெய் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் ரூ 7,44,091

தொழில் பேட்டை பொதுத் தோற்றம்



பெறுமான சரக்கு உற்பத்தி செய்தன. மொத்தம் ரூ 759,158-க்கு விற்பனை நடந்தது.

சத்துள்ள அரிசி

பாளையங்கோட்டை, திருச்செந்தூர், மூக்குப்பீறி, தெற்கு கல்லிகுளம். குலசேகர பட்டினம், திசையன் விளை, மேலகடைய நல்லூர், வாசுதேவ நல்லூர், குருவிகுளம், புளியங்குடி, செட்டிக் குறிச்சி, ஊர்க்காடு, சொக்கன்குடியிருப்பு, சில்லார் குளம் வேப்பங்குளம் ஆகிய 15 இடங்களில் கைக்குத்தரிசி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் உறுப்பினர்கள் தொகை 878; செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ 18,830.

இந்தச் சங்கங்கள் அறுவடைக் காலத்தில் நெல்லை வாங்கி. உறுப்பினர்களைக் கொண்டு கையால் குத்தி, பொதுமக்களுக்கு அரிசியை விற்கின்றன. மாவட்டத்திலுள்ள அரசாங்க நிறுவனங்கள் அனைத்தும், தங்கள் தேவைக்கான அரிசியை இந்த நிறுவனங்களிடமிருந்தே பெறுகின்றன. நெல் வாங்கி இருப்பில் வைக்கவும், நடை முதல் மூலதனத்துக்காகவும் வேண்டிய பணத்தை, மாநில கதர், கிராமக் கைத் தொழில் போர்டு கடனைக் கொடுக்கிறது. தானியம் உலர்த்தப் போடுவதற்கான களம் கட்ட மானிய உதவி வழங்கப்படுகிறது. குத்தப்படும் நெல் குன்டால் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. 1961 மார்ச் வரை இந்தச் சங்கங்களுக்கு ரூ 1,45,100 கடனும் ரூ 71400 மானிய உதவியும் வழங்கப்பட்டுள்ளன. 1960-61-ல் இந்தச் சங்கங்கள் ரூ 3,34,269 பெறுமான கைக்குத்தரிசி தயாரித்தன. ரூ. 3,32,074-க்கு விற்பனை செய்தன.

உண்ணாத எண்ணெய் சோப்பு

உண்ணாத எண்ணெய் வகைகளிலிருந்து சோப்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று சங்கரன் கோவிலில் செயல்பட்டு வருகின்றது. ரூ 15,500 பெறுமான வசதியான கட்டிடத்தில் இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மாதம் ரூ 1500 பெறுமான சோப்பு உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படுகிறது.

வடக்கு காருகுறிச்சியில் உள்ள செங்கல் சுடுவோர் கூட்டுறவுச் சங்கம், ஹரிஜனங்கள் நலனுக்காகப் பணியாற்றி வருகின்றது. இச்சங்கத்தில் 40 பேர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ 480. இச்சங்கத்தின் நடை முதல் மூலதனத்துக்கு மானிய உதவி ரூ 4500-ம், சங்க கொட்டகை அமைப்பதில் உதவியாக ரூ 1750-ம் அளிக்கப்பட்டிருக்கிறது. 1960-61-ல் இந்தச் சங்கத்தின் உற்பத்திப்

பொருள் மதிப்பு ரூ 6217. விற்பனை மூலம் கிடைத்த தொகை ரூ 6836 ஆகும்.

பனைமரம், நெல்லை மாட்டத்தின் மிக முக்கியமான இயற்கைச் செல்வம். நாங்குனேரி திருச்செந்தூர் வட்டங்களைச் சேர்ந்த மக்கள் பனைமரத் தொழிலில் அதிக அளவில் ஈடுபட்டுள்ளனர். இதுவே மிகப்பெரிய குடிசைத்தொழில். ஒரு கோடி 10 லட்சம் பனைமரங்கள் இந்த மாவட்டத்தில் உள்ளன. உடலுக்கு நலம் தரும் பனைவெல்லத் தொழிலில் இந்த மாவட்டம் தலை சிறந்து விளங்குகிறது. 63016 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மொத்தம் 401 கருப்பட்டி உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனம் ரூ 78984. வெல்ல உற்பத்தி ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளை ஒருமுகப் படுத்தவும், பனைவெல்லத் தொழில் வளர்ச்சிக்காகவும் மாவட்ட கூட்டுறவு சம்மேளனம் ஒன்றும் பணியாற்றி வருகின்றது.

கருவிகள்

பனைவெல்ல தொழில் அபிவிருத்தித் திட்டம் 1953-லேயே மேற்கொள்ளப்பட்டது. பனைவெல்ல உற்பத்திக் கருவிகள் இலவசமாகவும், பாதி விலையிலும் வழங்கப்பட்டன. திருத்தப்பட்ட அமைப்பு முறையில் மேற்கொண்டு 300 செட்டு கருவிகளை வழங்க வேண்டியுள்ளது. மாவட்ட சங்கத்தினர் அவற்றைத் தயாரித்து வருகின்றனர். கருப்பட்டி காய்ச்சுவதற்கான புதிய அடுப்பும் சாதனங்களும் மிக வசதியாக இருப்பதாக வேலை செய்வோர் கூறுகின்றனர். இவைகளுக்கு நல்ல கிராக்கியும் ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்கள் மிக ஏழைகளாக இருந்ததால், சங்கத்தின் மூலம் பாதிவிலைக்கு அவர்களுக்கு கருவிகள் வழங்கப்பட்டன. இது போக 33 வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்களுக்கு 40 சென்ட்ரி பியூகல் யந்திரங்களும், 14மிட்டாய் செய்யும் யந்திரங்களும் இதர கருவிகளும் பாதி மானியம் பாதி கடன் அடிப்படையில் வழங்கப் பட்டன.

பண உதவி

நெல்லை மாவட்டத்தில் சென்ற நான்கு ஆண்டுகளில் பனை வெல்லத் தொழில் அபிவிருத்திக்காக பல்வேறு வகைகளிலும் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரம் பின்வருமாறு :—

பனைவெல்ல உற்பத்தி சம்பந்தப்பட்ட 38 சங்கங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ 500 வீதம் ரிசர்வ் நிதி மானியம் அளிக்கப் பட்டது. மூன்று சங்கங்களுக்கு நிறுவன மானியம் வழங்கப்பட்டது. உதவித் தொகைகள் மற்ற உதவிகள் எல்லாமாகச் சேர்ந்து ரூ 47,830 வழங்கப்பட்டுள்ளது.

நல்ல முறையில் வேலே செய்யும் வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்களுக்கு மாவட்ட சங்கம், சிறு அளவில் தொகைகள் கடன் கொடுத்தும் உதவுகிறது. திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கிலிருந்து சில சங்க்ங்களுக்கு குறுகிய கால கடன் கிடைக்கிறது.

கிராமக் கைத் தொழில்களில் இந்த அபிவிருத்தியின் மூலம் வேலே இல்லாதிருந்த பலருக்கு வேலே கிடைத்துள்ளது. ஓரளவு வேலே வசதி பெற்றிருந்த பலர் இப்போது நிறை வேலே பெற்றுள்ளனர். அரசாங்கம் அளித்த உதவிகளேக் கொண்டு தொழில் விஞைர்கள் திருந்திய தொழில் முறைகளேக் கையாண்டு அதிகப் பயன் அடைந்து வருகின்றனர். வேலே இல்லாத நிலேமையைத் தீர்ப்பதிலும், கிராமப் பொருளாதார அபிவிருத்தியிலும் இந்தச் சிறு தொழில்கள் கணிசமான அளவுக்கு உதவியுள்ளன.

தொழில் பயிற்சி

திருநெல்வேலி பேட்டையில் அரசாங்கத் தொழில் பயிற்சி நிறுவனம் ரூ. 15·55 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. ஆறுவிததொழில்களில் அங்கு பயிற்சியளிக்கப்படுகின்றது. பயிற்சி பெறும் மாணவர்கள் பயிற்சிகால இறுதித் தேர்வுக்குப் பின்பு தாமாக அனுபவமிக்க தொழில் வன்மையுடன் தொழில் புரிந்து வாழ, போதுமான பயிற்சி அளிக்கப்படுகிறது.

தச்சு வேலே, கருமான் வேலேக்காக இணேப்புத் தொழிற்சாலே ஒன்று பேட்டையில் நிறுவப்பட்டு நடந்து வருகின்றது. பல்வேறு இடங்களுக்கும் சென்று தொழிலாளர்களுக்கு திருந்திய முறைக் கருவிகளில் பயிற்சியளிப்பதற்காக, தச்சுவேலே மோட்டார் யூனிட் ஒன்றும், கருமான் வேலே யூனிட் ஒன்றும் உள்ளன. ஆண்டுக்கு 15 பேர்களுக்கு தச்சு வேலேயிலும், 20 பேர்களுக்கு கருமான் வேலேயிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக ரூ. 4·83 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அலுவலகங்களுக்கு வேண்டிய மரச் சாமான்களேத் தயாரிப்பதுடன், மரவேலேக்கான யந்திரங்களேயும் இத்தொழிற்சாலே உற்பத்தி செய்கின்றது.

அம்பர் ராட்டை

பேட்டையில் அம்பர் ராட்டை உற்பத்தி நிலேயம் ஒன்று நிறுவப்பட்டு, அம்பர் ராட்டைகள் தயாரிக்கப்பட்டு, கதர் துறைக்கு அனுப்பப்படுகின்றன. அம்பர் ராட்டை செய்வதற்கான தச்சு வேலேயில் இந்த நிலேயம் ஆண்டு ஒன்றுக்கு 20 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.

தொழிற்சாலேகளுக்கு வசதியான இடங்கள் கிடைக்கச் செய்யவும், தொழில் தேவைக்கு வேண்டுமான மூலப் பொருள்கள்,

மின்சாரம், யந்திரங்கள் முதலியன கிடைக்கச் செய்து, தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் அரசாங்கம் வழி செய்துள்ளது. பேட்டையில் இதற்காக எட்டு யூனிட்டுகள் தொழில் பேட்டை ஒன்று நிறுவப்பட்டு, சிறு தொழிலதிபர்களுக்கு வாடகைக்கு விடப் பட்டுள்ளது. இவற்றில் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த தொழில் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் அலுவலர்களுக்கும் வீடுகள் முதலியன கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்தப் பேட்டைக்கு ரூ. 6 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பத்தமடையில் மாதிரி தச்சுவேலை தொழில் கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அலுவலகங்களுக்கு வேண்டுமான மரச்



பேட்டையிலுள்ள தொழில் பயிற்சி நிறுவனம்

சாமான்கள் அதில் தயாரிக்கப்படுகின்றன. இக்கூடம், கிராமாந்திர தச்சு வேலைத் தொழிலாளர்களுக்கு நவீனயந்திரங்களைக் கையாள்வதில் பயிற்சி அளிக்கிறது.

விவசாயக் கருவிகள் முதலியன தயாரிப்பதற்காக நெல்லை மாவட்டத்தில் சிறு ரக இரும்புத் தொழிற்சாலை நிறுவத்திட்டமிடப் பட்டுள்ளது. இதற்கென அரசாங்கம் ரூ. ஒரு லட்சம் ஒதுக்கியுள்ளது. அத்தொழிற்சாலையில் 15 தொழிலாளர்கள் தொழில் பயிற்சி பெறவும் வசதி இருக்கும்.

பனை ஓலைத் தொழில்

மணப்பாடு பனை ஓலை தொழில் பயிற்சி நிலையம் 1957 ல் 20 பெண் பயிற்சியாளர்களுடன் தொடங்கப்பட்டது. இப்போது அது மணப்பாடு தொழில் கூட்டுறவுச் சங்கமாக மாறி கவர்ச்சிகரமான பனை ஓலைப் பொருள்களை உற்பத்தி செய்து வருகின்றது

பனை மரங்களிலிருந்து பனை நார், கயறுகள் உற்பத்திக்கான நிலையம் ஒன்று திருச்செந்தூரில் 1957-ல் 'தொடங்கப்பட்டது. இந்த நிலையம் மூலம் ஆயிரம் குடும்பங்களுக்கு இத்தொழிலுக்கு வேண்டிய சிறு கருவிகள் வழங்கப்பட்டன.

கோரைப் பாயினுல் அழகும் கவர்ச்சியும் உள்ள பை முதலான பொருள்கள் உற்பத்தி செய்ய திருநெல்வேலியில் 1956ல் ஒரு நிலையம் தொடங்கப்பட்டது. 5 நபர்கள் பயிற்சி பெறவும் அதில் வசதி உண்டு.

தையல், பூ வேலை

குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களின் வருவாயைப் பெருக்கவும், பெண்களின் ஓய்வு நேரத்தை நன்கு பயன்படுத்தவும் பாளையங்கோட்டையில் தையல், லேஸ், பூவேலை தொழில் நிலையம் ஒன்று 1956ல் ஆரம்பிக்கப்பட்டது. தையல் பூ வேலைகளில் 30 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்போது, பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்ட குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கமாகமாறி நன்கு நடைபெற்று வருகின்றது.

பாளையங்கோட்டையில் 1958ல் ஆரம்பிக்கப்பட்ட துணிப் பொம்மைத் தொழில் நிலையத்தில் 6 பெண்கள் பயிற்சி அளிக்கப் பட்டனர். பயிற்சி முடிந்து அவர்கள் பாளையங்கோட்டை குடிசைக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக்கப் பட்டு பணியாற்றி வருகின்றனர்.

கடையநல்லூரில் சுங்குடிப் புடவை அச்சுத் தொழில் நிலையத்தில் 20 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முடிந்து அவர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம் நடத்தி வருகிருர்கள்.

பனையிலிருந்து பிரஷ்

மீனவர்கள், மற்றும் குறைந்த வருமானப் பிரிவினரின் வருவாயை அதிகரிக்க வகை செய்வதற்காக பிரஷ், ரெடிமேடு ஆடைகள் முதலியன செய்யும் பல்நோக்கு தொழில் நிலையம் குலசேகர பட்டினத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஏழு பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பனையிலிருந்து பிரஷ் தயாரிக்க 10 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

பனைமரத்திலிருந்து கட்டில், நாற்காலி முதலியன செய்வதற்கான தொழில் நிலையம் நாசரத்தில் நிறுவப்பட்டது. இதில் உற்பத்தியான அழகிய மரச்சாமான்களுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது.

கத்தாழை நாரை தொழில் உபயோகப் பொருளாக மாற்றுவதற்கு பயிற்சி அளிப்பதற்காக நெடுவயலில் ஒரு பயிற்சி நிலையம் நடைபெற்று வருகின்றது. இந்த நிலையத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 30,010. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3000 மதிப்புள்ள விரிப்புகள் தயார் செய்யப்படுகின்றன. இதுவரை 87 பேர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இப்போது 14 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கத்தாழை நார் தொழில் பயிற்சி நிலையத்துடன் இணைந்த உறுப்பாக தனியே இயங்கக்கூடிய தொழிற்சாலை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது. இத் தொழிற்சாலைக்கு ரூ. 97,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 50 தொழிலாளர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.

ரத்தினக் கம்பளம்

சடம்பு நாரிலிருந்து நேர்த்தியான விரிப்புகளும் ரத்தினக் கம்பளங்களும் தயாரிக்கும் பயிற்சி நிலையம் ஒன்று கோபாலசமுத்திரத்தில் ரூ. 19,270 செலவில் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றது. இந்த நிலையத்தில் 23 பேர்களுக்கு இரண்டு ஆண்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது மேற்கொண்டு 24 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் விரிப்புகள், கம்பளங்களுக்கு அயல் நாடுகளிலும் நல்ல கிராக்கி இருக்கிறது. இந்த நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் கொடுக்கும் முறையில் உருவாகி வரும் ஒரு தொழில் நிலையத்துக்கு அரசாங்கம் ரூ. 1,20,700 ஒதுக்கியிருக்கிறது. கட்டிட வேலை நடைபெற்று வருகின்றது. பயிற்சி முடிந்த 50 பேர்கள் அதில் அமர்த்தப்படுவர்.

கோபால சமுத்திரம் ரத்தினக் கம்பள நெசவுப் பயிற்சி

விற்பனை நிலையம்

திருநெல்வேலி ஜங்ஷனில் கைவேலைப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்

பட்டு, நல்ல விற்பனை நடந்து வருகின்றது. மாதம் சுமார் ரூ. 4000 பெறுமான பொருள்கள் விற்பனையாகின்றன.

குடிசைத் தொழில், சிறு தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்யவும், இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழில் வினைஞர்களிடமிருந்து அவர்களின் உற்பத்திப் பொருள் களை வாங்கி விற்கவும் தூத்துக்குடியில் ஒரு நிலையம் செயல்பட்டு வருகின்றது. இதற்காக ரூ. 76,770 ஒதுக்கப்பட்டுள்ளது. மாதம் ரூ. 1000 க்கு பொருள்கள் விற்பனையாகின்றன. குடி சைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஊக்கமாக வளர்ச்சியடைய இதன் மூலம் வசதி ஏற்பட்டுள்ளது.

அம்பாசமுத்திரம் வட்டம் வாகைக் குளத்தில் வெண்கல வார்ப்பட தொழில் நிலையம் அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ளது. இந்த வேலைக்காக ரூ. 1,85,400 ஒதுக்கப் பட்டது. வெண்கலக் கலவையில் சிறந்த முறைகள் இங்கு கற்றுத் தரப்படும். பயிற்சிக் காலம் 6 மாதம். இந்த நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,05,000 விலை மதிப்புள்ள 30,000 ராத்தல் வெண்கல வார்ப் படப் பொருள்கள் உற்பத்தியாகும் என்று மதிப்பிடப் பட்டிருக் கிறது.

தென்னை நார் தயாரிப்பதில் இலங்கையில் இருந்து வரும் முறை, இந்திய முறையைவிட லகுவானதாக இருக்கின்றது. அதில் சேதமும் குறைவு. எனவே அந்த முறையில் தென்னை நார் தயாரிப்புக்கான திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசாங்கம் அங்கீகரித் துள்ளது. நிலம் வாங்குவது, கட்டிட வேலை முதலியவைகளுக்காக நடை முறை ஆண்டில் ரூ. 1,93,200 ஒதுக்கப் பட்டுள்ளது. இந்த நிலையத்துக்கான இடம் தென்காசி அருகில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

கண்ணாடி பொம்மைகள்

ராஜஸ்தான் மாநிலத்தில் கண்ணாடி பொம்மைகள் உற்பத்தி ஒரு சிறு தொழிலாக இயங்கி வருகின்றது. ஒரு வகையான மண் ணும், உடைந்த கண்ணாடித் துண்டுகளுமே இத் தொழிலுக்கு மூலப் பொருள்கள். ராஜஸ்தான் மாதிரியில் அழகான கண்ணாடி பொம்மைகள் உற்பத்தி செய்ய நெல்லையில் 1961 பிப்ரவரியில் ஒரு தொழில் நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இதில் பயிற்சி பெறு வோர், பயிற்சிக் காலத்திலேயே திறமைக்கு ஏற்றபடி ஊதியமும், உபகாரச் சம்பளம் ரூ. 30 ம் அளிக்கப்படுவர். இதற்கு அரசினர் ரூ. 22,360 ஒதுக்கியுள்ளனர். 6 பேர்களுக்கு இத் தொழில் கற்றுத் தரப்படுகிறது. நெல்லை ஜங்ஷன் கைத்தொழில் பொருள் விற்பனை நிலையக் கட்டிடத்தில் இந்தக் கண்ணாடி பொம்மைத் தொழில் நிலையம் அமைந்துள்ளது.

பட்டு எடுக்கும் பணி

தென்காசிப் பகுதியில் உள்ள குடியானவர்களுக்கு, பட்டுப் பூச்சி வளர்ப்பை ஒரு உப தொழிலாக ஆக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. குடியிருப்பு கிராமத்தில் பட்டுப் பூச்சிப் பண்ணை நிறுவப் பட்டிருக்கிறது. முசுக்கட்டைச் செடி வளர்ப்பு வேலையும் பட்டுப்புழு வளர்ப்பு வேலையும் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையத்துக்காக மேலும் 5 ஏக்கர் நிலம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. குடியானவர்களுக்கு முசுக்கட்டை விதைகள், பதியங்கள் இலவசமாக வழங்கப் படுகின்றன. பட்டுப் புழு முட்டைகள் குறைந்த விலைக்கு வழங்கப்படுகின்றன. இப் பகுதியில் உற்பத்தியாகும் பட்டு நூல், தரத்தில் சிறந்து விளங்கு கிறது.

வட்டாரங்களில் உள்ள தொழில்களில் குறிப்பிடத் தக்கவை:— சங்கரன் கோவில் சோப்பு உற்பத்தி நிலையம்; குருவிகுளம் தோல் உரிக்கும் தொழிற்சாலை; வள்ளியூர் தீக்குச்சித் தொழில்; தாழை யூத்து மாஜி ராணுவ வீரர்கள் மரவேலை கூட்டுறவுச் சங்கம்; விஸ்வ கர்ம தொழிலாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம்; குலசேகர பட்டினம் கூட்டுறவு தீப்பெட்டி தொழிற்சாலை; திருச்செந்தூர் கூட் டுறவு தீப்பெட்டி தொழிற்சாலை முதலியன.

நெல்லை மாவட்டத்தில் பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கங் கள் மொத்தம் 6 உள்ளன. இவற்றில் உறுப்பினர்கள் தொகை

676. இவர்கள் போட்டுள்ள பங்குத் தொகை ரூ 23,604. இச் சங்கங்களுக்கும், பத்தமடைப் பாய்த் தொழிலுக்கும் ஊக்கமளிக்கும் வகையில் கடனுகை ரூ. 29,877 ம், மானியமாக ரூ. 6000மும் அரசாங்கம் உதவியிருக்கிறது.

மத்திய அரசாங்க மானியம்

மாவட்டத்தில் மட்பாண்டம், ஓடு செங்கல் உற்பத்தி, கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 14 உள்ளன. 626 உறுப்பினர்கள் மொத்தம் ரூ 28,745 பங்குத் தொகை போட்டுள்ளனர். சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் பெறுமான மட்பாண்டம், செங்கல் முதலியவைகளை உற்பத்தி செய்து இத் தொழில் பாங்குடன் வளர்கின்றது. அரசாங்கம் இத் தொழிலுக்கு ரூ 51,408 கடனுகைவும், ரூ 1,09,620 மானியமாகவும் உதவியுள்ளது. இதில் வல்ல நாடு ஹரிஜன் செங்கல் உற்பத்தியாளர் சங்கத்துக்கு மத்திய அரசாங்கம் மானியமாகவே ரூ 93,500 அளித்துள்ளது. இச் சங்கத்திலும் ஊர்க்காடு சங்கத்திலும் பெருமளவில் உற்பத்தி நடைபெற்று வருகின்றது. புதிய முறை சூளைகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

மாவட்டத்தில் உள்ள 10 எண்ணெய் கூட்டுறவு சங்கங்களில் மொத்தம் 440 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களால் செலுத்தப்பட்ட பங்குத் தொகை ரூ. 31,137 இச் சங்கங்கள் நாட்டு கல் செக்கில் சுகாதார முறைப்படி நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய், கடலை எண்ணெய் ஆகிய வைகளைத் தயாரிக்கின்றன. மாதம் ரூ 60,000 பெறுமான எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்பட்டு வருகின்றது. இச் சங்கங்களுக்கு அரசாங்கம் அளித்துள்ள கடனும், மானிய உதவியும் முறையே ரூ. 129,872 ம், ரூ. 9,560 ம் ஆகும்.

கைக்குத்தரிசி

நமது உணவில் ஊட்டச் சத்தை அதிகரிப்பதற்கு உதவுவது கைக்குத்தரிசி. நெல்லை மாவட்டத்தில் இத் தொழில் புத்துயிர் பெற்றுள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 14 கைக்குத்தரிசி சங்கங்கள் செயல் பட்டு வருகின்றன. அவற்றில் 766 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் செலுத்தியுள்ள பங்குத் தொகை ரூ 9285. இத் தொழில் பெண்களுக்கு ஒரு உப தொழிலை அளித்து, குடும்ப வருமானத்தைப் பெருக்கவும் உதவுகின்றது. மாதம் சுமார் ரூ 23,000 பெறுமான அரிசி விற்கப்பட்டு வருகின்றது. இச்சங்கங்களுக்கு அரசாங்கம் ரூ 67,951 கடனும், ரூ 47,080 மானிய உதவியும் அளித்துள்ளனர்.

வேப்பங் குளம் ஹரிஜன் குமரப்ப தொழில் கூட்டுறவு சங்கம் ரூ. 41,000 மானிய உதவி பெற்று, விரைவில் கையால் காகிதம் செய்யும் தொழிலைத் தொடங்கும்.

கைத்தறித் தொழிலுக்கு ஊக்கம்

வேளாண்மைக்கு அடுத்தபடியாக நமது நாட்டில் முக்கிய குடிசைத் தொழில் கைத்தறித்தொழில். முதலாவது, இரண்டாவது திட்ட காலங்களில் அரசாங்கம், இத்தொழில் முன்னேற்றத்துக்காக அதிக ஆதரவு காட்டி, நெசவாளர் நல்வாழ்வுக்கு உதவியிருக்கின்றது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குவதற்கு முன்பு நெல்லை மாவட்டத்தில் 102 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. சென்ற பத்து ஆண்டுகளில் 22 சங்கங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் பங்கு மூலதனத்துக்காக அரசாங்கம் ரூ. 2,84,348 கடன் உதவியுள்ளது. கூட்டுறவு முறையின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு தரமான துணி நெய்வதில் உதவுவதற்காக ரூ. 46,540 பெறுமான திருந்திய முறைக் கருவிகள் வழங்கப்பட்டன. கூட்டுறவு ரீதியில் சங்கக் கணக்குகளை வைப்பதற்காக 104 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களுக்கு ரூ. 4729 உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

நெசவாளர் சங்கங்களுக்கு வேண்டுமான நூலுக்கு சாயம் தோய்ப்பதற்காக சாயம் தோய்க்கும் தொழிற்சாலைகளை அமைதத்துக்கொள்ள 6 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டது.

நெசவாளர் குடியிருப்பு

நெசவாளர்கள் நல்ல காற்றோட்டமும் சுகாதார வசதிகளும் உள்ள வீடுகளில் வாழ்வதற்கேற்ற வகையில் கல்லிடைக் குறிச்சி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்களுக்காக 100:வீடு

கல்லிடைக்குறிச்சி நெசவாளர் குடியிருப்பு



கள் வரை கட்டி முடித்து, நெசவாளர்கள் குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். இத்திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் ரூ. 307,000 கடனாகவும், ரூ. 1,20,000 மானியமாகவும் வழங்கியிருக்கின்றது

கதர் வளர்ச்சி

நெல்லை மாவட்டத்தில் கதர்த் தொழில் நன்கு வேரூன்றி விட்ட ஒரு கிராமத்தொழில் ஆகும். தீவிர கதர் இயக்கத்தின் கீழ் இந்த மாவட்டத்தில் 15 உபகேந்திரங்களும் 4 விற்பனை நிலையங்களும் இயங்கி வருகின்றன. சுயதேவைப் பூர்த்திக்காகவும், கதர் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் இம்மாவட்டத்தில் 40,300 நூற்பவர்களும் 3400 நெசவாளர்களும் கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

வீரவநல்லூர் உபகேந்திரத்தில் பட்டும் பருத்தியும் கலந்து நெய்யப்படும் பாவ்டா என்ற பட்டுத்துணி உற்பத்தி செய்யப்படுகிறது.

கதர் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் 14 வட்டார வளர்ச்சிப் பிரதேசங்களில் இராட்டைகள் கொடுத்து, கதர்த் தொழில் பரப்பப்படுகிறது. இந்த வகையில் 29000 நூற்பாளர்கள் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அம்பர் ராட்டைப் பயிற்சிக்காக 5 கிளைப் பயிற்சி நிலையங்கள் 70 முகாம்களில் 7400 அம்பர் நூற்பாளர்களை பயிற்றுவித்துள்ளன.

தமிழ்நாடு மாநில கதர் கிராமத் தொழில் போர்டு சட்டரீதியாக அமைக்கப்பட்டு 1960 ஏப்ரல் முதல் செயல்படத் தொடங்கிற்று. தமிழ்நாடு அரசாங்கத்தின் ஒரு துறையாக இருந்து வந்த கதர் வளர்ச்சித்துறை 1960 செப்டம்பர் 15 முதல் மாநில கதர் கிராமத் தொழில் போர்டின் நிர்வாகத்தின் கீழும் கண்காணிப்பின் கீழும் கொண்டு வரப்பட்டது.

கல்வி விளக்கு

மக்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி. மக்கள் வளர்ச்சியில் கல்வியே முதலிடம் பெறுகின்றது. மக்களின் அகவிருள் நீங்கவும், வாழ்க்கை மேம்பாடு அடையவும் கல்வியே வழி செய்கின்றது. எனவேதான் அரசாங்கம், கல்வி வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது.

நெல்லை மாவட்டம், கல்வியைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டில் முன்னணியில் உள்ள மாவட்டமாகும். நெல்லை மாவட்டத்தில் படித்தவர்கள் தொகை மாநிலத்துக்கான சராசரி அளவை விட அதிகம். முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகளின் பயனாக, கல்வித் துறையில் மேலும் பெருமளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் பள்ளிகள் உள்ளன. 300 ஜனத்தொகை உள்ள கிராமங்களிலும் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நெல்லை மாவட்டத்தில் உயர்தர ஆரம்பப்பள்ளிகள் உள்ளிட்ட ஆரம்பப் பள்ளிகள் 1951 எப்ரலில் மொத்தம் 1990 இருந்தன.

1961ல் அப்பள்ளிகள் தொகை 2872 ஆக அதிகரித்துள்ளது. மாணவர்கள் தொகை 1·39 லட்சத்திலிருந்து 1·95 லட்சமாகவும், மாணவிகள் தொகை 82,269 லிருந்து 1·59 லட்சமாகவும் அதிகரித்துள்ளன. 1951ல் பணியாற்றி வந்த ஆசிரியர்கள் தொகை 8439 ஆகும், 1961 ல் ஆசிரியர்கள் தொகை 15,480 ஆக அதிகரித்துள்ளது.

1951ல் மாவட்டத்தில் 62 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. இப்போது மொத்தம் 118 உயர் நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. 10 ஆண்டுகளுக்கு முன்பு உயர் நிலைப்பள்ளிகளில் படித்த மாணவர்கள் மொத்தத் தொகை 22,954. இப்போது படிக்கும் மாணவர்கள் மொத்தத் தொகை 47,630.

உயர்தரப் படிப்புக்காக நெல்லை மாவட்டத்தில் 6 கல்லூரிகள் உள்ளன. இரண்டு பயிற்சிக் கல்லூரிகளும் இயங்கிவருகின்றன.

எட்டயபுரம்

நண்பகல் உணவுத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அமுலாக்கப்பட்டது. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த ஊராகிய எட்டயபுரம் ஆரம்பப்பள்ளியில்தான் இத்திட்டம் முதன் முதலாக அமுலாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மாவட்டத்தில் தற்போது 2826 பள்ளிகளில் இலவச நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. 1·19 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைகின்றனர். அரசாங்கம் மானிய உதவி வடிவில் இத்திட்டத்துக்கு ரூ. 30 லட்சத்துக்கு மேல் உதவியிருக்கிறது. அந்தந்தப் பிரதேச மக்கள் நன்கொடையாகக் கொடுத்தது சுமார் ரூ. 18 லட்சம் ஆகும்.

கட்டாய ஆரம்பக் கல்வி

1962-63 பள்ளி ஆண்டு முடிவுக்குள்ளாக மாவட்டம் முழுதிலும் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் அமுலாக்கப்படும். கட்டாய கல்விப் பிரதேசங்கள் 1951ல் மொத்தம் 30 ஆக இருந்தன. இப்போது அந்தப் பிரதேசங்கள் தொகை 379 ஆக அதிகரித்துள்ளது. இவற்றுள் கல்விபயிலும் மாணவர்கள் தொகை 10 ஆண்டுகளுக்கு முன் 31,455. இப்போது இவற்றுள் கல்வி பெறும் மாணவர்கள் தொகை 1,04,717 ஆகும்.

தணிந்த நிலையில் உள்ள வகுப்பினரின் முன்னேற்றத்துக்காக பல்வேறு உபகாரச் சம்பளங்கள் அளிக்கப்படுகின்றன. மறவர் சமூகத்தினருக்கு ஆரம்பப் பள்ளிகளில் சிறுவர்களுக்கு நபருக்கு, மாதம் ஒரு ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு உபகாரச் சம்பளம்

அளிக்கப்படுகிறது. சிறுமிகளுக்கு இதே வகையில் மாதம் ரூ. 1·50 அளிக்கப்படுகிறது. உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் 6 வது வகுப்புக்கு, மாணவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் வழங்கப்படுகிறது, 7-ஆம் வகுப்பில் ரூ. 2·50 வீதமும் 8-ஆம் வகுப்பில் ரூ. 3 வீதமும் கொடுக்கப்படுகிறது.

இதுபோக உயர்தர ஆரம்ப பள்ளிகளில் பொதுவான உபகாரச் சம்பளங்களும், முஸ்லிம்களில் சில பிரிவினருக்கு உபகாரச் சம்ப ளங்களும், உயர் நிலைப் பள்ளிகளில் பொது உபகாரச் சம்பளங்க ளும், உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் முஸ்லிம் சிறுமிகளுக்கான உபகாரச் சம்பளங்களும், உயர்தர ஆரம்பப்பள்ளிகளில் சிறுமி களுக்கான விசேஷ உபகாரச் சம்பளங்களும் தரப்படுகின்றன.

இந்த மாணவர்களுக்கு உயர் நிலைப்பள்ளிகளில் கீழ் படிவங் களில் மாதம் ரூ. 4 வீதமும், மேல் படிவங்களுக்கு நபருக்கு மாதம் ரூ. 8 வீதமும் வழங்கப்படுகின்றன. உயர்தர ஆரம்பப் பள்ளி களில் 6-ஆம் வகுப்புக்கு ரூ. 2ம், 7-ஆம் வகுப்புக்கு ரூ. 2·50ம், 8-ஆம் வகுப்புக்கு ரூ. 3ம் உபகாரச் சம்பளம் தரப்படுகிறது. இந்த உபகாரச் சம்பளம் பெறுவது சம்பந்தமாக முஸ்லிம் சிறுவர் கள் 14 வயதுக்குட்பட்டவர்களாயும், பின்னடைந்த வகுப்பு மாண வர்கள் 13 வயதுக்குட்பட்டவர்களாகவும், இதர வகுப்பினர் 12 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

மறவர் சமூகத்தினருக்கு ஏழ்மை—தகுதி ஆகிய இரண்டும் இணைந்த அடிப்படையில் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படு கின்றன.

பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள்

நாட்டில் கல்வி அறிவைப் பரப்புவதில் அரசாங்கத்தின் முயற்சி யுடன் பொதுமக்கள் எந்த அளவுக்கு ஆர்வத்துடன் ஒத்துழைக் கிறார்கள் என்பதற்கு பள்ளி அபிவிருத்தி மகாநாடுகள் ஏற்றதொரு சான்றாகும். நெல்லை மாவட்டத்தில் 17 பள்ளி அபிவிருத்தி மகா நாடுகள் நடைபெற்றுள்ளன, திருச்செந்தூர் வட்டம் அடைக்கலா புரத்தில் நடந்த பள்ளி அபிவிருத்தி மகாநாட்டில் இந்தியாவின் பிரதம மந்திரி ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு அவர்கள் கலந்து கொண் டார்கள். பரிவுள்ளம் படைத்த மக்கள் இத்திட்டத்துக்கு மிகுந்த அளவில் உதவியுள்ளனர்.

வள்ளியூர், திசையன்விளை, நாசரேத், அடைக்கலாபுரம், சாயேர் புரம், தூத்துக்குடி, குருவிகுளம், வெள்ளாங்குளம், நாகலாபுரம், கோவில்பட்டி, கடம்பூர், விளாத்திகுளம், சங்கரன்கோவில், திரு நெல்வேலி, சேரன்மாதேவி, பாளையங்கோட்டை, தென்காசி ஆகிய 17 இடங்களில் பள்ளி அபிவிருத்தி மகாநாடுகள் நடை

அடைக்கலாபுரத்தில் பள்ளிச் சீரமைப்பு மகாநாடு 1959-ல் நடைபெற்றது. பள்ளிக்காக வழங்கப்பட்ட பொருள்களை பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு, முதலமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ், கல்வித் துறை அமைச்சர் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் ஆகியோர் பார்வையிடும் காட்சி.

பெற்றன. இந்த மகாநாடுகளில் உதவப்பட்ட தொகை சுமார் ரூ. 77 லட்சம். மொத்தம் 2032 பள்ளிகள் பயனடைந்தன.

வயதானவர்களுக்கு கல்வி அளிப்பது சம்பந்தமாக முதியோர் கல்வித் திட்டம், முதல் திட்டகாலத்தில் மேற்கொள்ளப்பட்டது. சமுதாய நலவளர்ச்சி நிறுவனங்கள் இந்தப் பணியை மேற்கொண்டுள்ளன. 1951ல் மாவட்டத்தில் மொத்தம் 70 முதியோர் கல்வி நிலையங்கள் இருந்தன. இப்பொழுது 142 நிலையங்கள் இப்பணியாற்றி வருகின்றன. பத்து ஆண்டுகளுக்கு முன்பு இவைகளில் படித்தவர்கள் 810 பேர். இப்போது சுமார் 5246 பேர் படித்துப் பயனடைந்து வருகின்றனர்.

அடிப்படைக் கல்வி முறை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையாகும். சாதாரண பயிற்சிப் பள்ளிகள் எல்லாம், அடிப்படைக் கல்விப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இரண்டு அடிப்படைப் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன.

தொழிற் கல்வி

தாழையூத்தில் இந்தியா சிமெண்ட்ஸ் கல்வி நிறுவனத்தார் 1958ல் சங்கர் பாலிடெக்னிக் நிறுவனம் தொடங்கினர். சிவில், மெக்கானிகல், எலெக்ட்ரிகல் ஆகியவற்றில் டிப்ளமா படிப்புக்கு 120 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள இதில் வசதி உண்டு.

நாட்டின் நரம்புகள்

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பொருளாதாரம், கல்வி, நாகரீகம், வாணிபம் ஆகிய துறைகளில் சீரான வளர்ச்சி ஏற்பட வேண்டுமானல், ஒவ்வொரு கிராமத்துக்கும் சாலை வசதிகள் ஏற்படுத்துவது அவசியம் என்று அரசாங்கம் கருதியது. ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் சாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டதின் காரணமாக இப்பொழுது குடியானவர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை எளிதாக வெளியிடங்களுக்கு அனுப்ப முடிகின்றது. தங்கள் பொருள்களுக்கு நல்ல விலையும் பெற முடிகின்றது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் நெல்லை மாவட்டத்தில் மொத்தம் 1371 மைல் நீள சாலைகள் இருந்தன. முதலாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் பல்வேறு சாலை அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் புதிதாக 888 மைல் நீள சாலைகள் போடப்பட்டன. இப்போது மாவட்டத்தில் மொத்தம் 2259 மைல் நீள சாலைகள் உள்ளன. கிராமங்களில்தான் இந்த வசதி பெருமளவுக்கு ஏற்பட்டுள்ளது. 1951 ல் மொத்தம் 346 மைல் நீள கிரா

மச சாலைகளே இருந்தன. இப்போது கிராமச் சாலைகள் நீளம் 1140 மைல் ஆகும். மாவட்ட சாலைகள் முன்பு 843 மைல் நீளம் இருந்தன. 1961 ல் மாவட்ட சாலைகள் மொத்த நீளம் 929 மைல் ஆகும்.

கிராம மக்கள் ஒத்துழைப்பு

நெல்லை மாவட்டத்தின் நெடுஞ்சாலைகள் பொதுவாக நல்ல முறையில் இருக்கின்றன. 1953-54 லிலிருந்து உள்ளூர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிராம சாலைகள் விஷயத்தில் அதிக கவனம் செலுத்தப் பட்டது. கிராம வாசிகள், இந்த அபிவிருத்தி வேலைகளின் அவசியத்தை உணர்ந்து நல்ல முறையில் ஒத்துழைத்தனர். சாலை அமைக்க ஆகும் செலவில் பாதியை ஏற்கவும் முன் வந்தனர். முதல் திட்ட காலத்தின் கடைசி இரண்டு ஆண்டுகளில் மட்டும் 100 மைல் நீளத்துக்கு புதிதாகச் சாலைகள் போடப்பட்டன. இரண்டாம் திட்ட காலத்தில் 298 மைல் நீளத்துக்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டன. 500க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் சாலை வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையை யொட்டி அபிவிருத்தி வேலைகள் மேற் கொள்ளப்பட்டன.

சென்ற 10 ஆண்டுகளில் தேசீய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், பெரிய மாவட்ட சாலைகள் ஆகியவைகளுக்கு தார் போடுவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1951 ல் தார் போடப்பட்டிருந்த சாலைகள் நீளம் 205 மைல். 1961 ல் அவற்றின் நீளம் 549 மைல் ஆக அதிகரித்துள்ளது. கப்பி போட்ட சாலைகள் 1951 ல் 900 மைல் நீளம் ஆகும். இப்போது கப்பி போட்ட சாலைகள் நீளம் 1328 மைல்கள்.

முதலாவது இரண்டாவது திட்ட காலங்களில் பல பெரிய பாலங்களும் ஒடு பாலங்களும் கட்டப்பட்டன.

மணப்பாடு பாலம்

முதல் திட்ட காலத்தில் அம்பாசமுத்திரம் ஆலங்குளம் சாலையில் கடன நதிக்கு ரூ. 4·44 லட்சம் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டது. திருக்கரங்குடி சாலையில் நாங்குனேரி அருகில் நம்பியாறுக்கு குறுக்கே ஒரு பாலம் கட்டப்பட்டது. இதற்கு ஆன செலவு ரூ. 1·08 லட்சமாகும். மணப்பாடு அருகில் காராமணி யாறுக்கு குறுக்கே ரூ. 2·05 லட்சம் செலவில் ஒரு பாலம் கட்டப் பட்டது.

இரண்டாம் திட்ட காலத்தில் முடிக்கப்பட்ட பெரிய பாலங்கள், சாலைகள் வருமாறு :—

மேலநத்தம், கருப்பன்துறை அருகே தாமிரபரணிக்கு குறுக்கே ஒரு பாலம் (செலவு ரூ. 2·68 லட்சம்); கரிவலம் வந்த நல்லூரி லிருந்து ராயகிரிக்கு சாலை அமைக்கப்பட்டது (செலவு ரூ. 1·47 லட்சம்); தருவை குளத்திலிருந்து சுரங்குடிக்கு சாலை அமைக்கப் பட்டது (செலவு ரூ 6·71 லட்சம்); எட்டயபுரம்-அருப்புக்கோட்டை சாலையில் ஒரு பாலம் (செலவு ரூ. 7·25 லட்சம்); தூத்துக்குடி-திருச்செந்தூர் சாலையில் முக்காணி அருகே தாமிரபரணிக்கு ஒரு பாலம் கட்டப்பட்டது (செலவு ரூ. 8·91 லட்சம்); தென்காசி மதுரை சாலையில் பாலம் புதுப்பிக்கப் பட்டது (செலவு ரூ. 53,000); அம்பை தென்காசி-சாலையில் ஓடு பாலம் (செலவு ரூ. 1·26 லட்சம்); திருநெல்வேலி-ராஜபாளையம் சாலையில் உள்ள பாலம் திருத்திக் கட்டப்பட்டது (செலவு ரூ. 1·21 லட்சம்); பாளையங்கோட்டை - தூத்துக்குடி சாலைக்கு ரூ. 1·20 லட்சம் செல வில் கான்கிரீட் போடப்பட்டது.

சிறு பால வேலைகள்

இரண்டாம் திட்ட கால முடிவில் (1-4-1961-ல்) நடைபெற்று வரும்திட்ட வேலைகள் பின்வருமாறு :—

ஆழ்வார் குறிச்சி சிவசைலம் சாலையில் கடன நதிக்கு குறுக்கே பாலம் கட்டும் வேலை நடைபெற்று வருகிறது. இதற்குச் செலவு மதிப்பு ரூ 2·12 லட்சம். உடையார் பட்டி - சிவலபேரி சாலையில் ஒரு பாலம் (செலவு மதிப்பு ரூ 78000); விலாத்திகுளம்-பெருநாளி சாலையில் ஓடு பாலம் (செலவு மதிப்பு ரூ 1 லட்சம்); விலாத்தி குளம் வேம்பாறு சாலையில் ஒரு பாலம் (செலவு மதிப்பு ரூ 2 லட்சம்); அஞ்சுகரம் ஓவரி சாலையில் நம்பியாறு, ஹனும நதி உப்பாறு ஆகியவைகளுக்கு் குறுக்கே சிறு பாலங்கள், ஓடு பாலங்கள் (இத்திட்டத்துக்குச் செலவு மதிப்பு ரூ 5·29 லட்சம்); உக்கிரன் கோட்டை - கீழ வீரணம் சாலையில் சிறு பாலங்கள் (செலவு மதிப்பு ரூ 1 லட்சம்); கருப்பன் குளம் கிடார குளம் சாலையில் ஓடு பாலம் (செலவு மதிப்பு ரூ 1 லட்சம்); பாளையங்

கோட்டை அம்பாசமுத்திரம் சாலையில் பாலத்தை திருத்திக் கட்டும் வேலை (செலவு மதிப்பு ரூ 5.64 லட்சம்); அம்பா சமுத்திரம் தென் காசி சாலையில் பாலம், (செலவு மதிப்பு ரூ 4·5 லட்சம்) ; அம்பை - தென்காசி சாலையில் ஓடு பாலம் (செலவு மதிப்பு ரூ 2 லட்சம்) ; தென்காசி - மதுரை சாலையில் பாலத் திருத்த வேலைகள் (செலவு மதிப்பு ரூ 1·68 லட்சம்); திருநெல்வேலி - செங்கோட்டை சாலையில் சிறு பாலங்கள் அமைத்தல், அபிவிருத்தி செய்தல் ஆகிய வேலைகள் (இதற்குச் செலவு மதிப்பு ரூ 1·73 லட்சம்) ; திருநெல்வேலி-செங்கோட்டை சாலையில் அபிவிருத்தி வேலைகளும் கான்கிரீட்போடுவதும்(இதற்குச் செலவு மதிப்பு ரூ 1·60 லட்சம்)' இந்த வேலைகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன.

பஸ் வசதிகள்

நெல்லை மாவட்டத்தில் 1951-ல் 344 பஸ்களும், 296 லாரிகளும் இருந்தன. தற்போது பஸ்கள் தொகை 423 ஆகவும் லாரிகள் எண்ணிக்கை 583 ஆகவும் அதிகரித்துள்ளது. அதிகமான அளவில் சாலைகள் ஏற்பட்டதே பஸ்கள் எண்ணிக்கை அதிகரிக்க காரணமாக அமைந்தது. மாவட்டத்தில் தற்போது 25 பஸ் நிலையங்கள் உள்ளன.

ஒரு நாட்டிற்கு அணி சேர்க்கும் தன்மைகள் ஐந்து என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். அந்த ஐந்தில் அவர் முதலிடம் தந்து பேசுவது பிணியின்மை பற்றியே ஆகும். நாடும் மக்களும் நலம் பெறவேண்டுமானால் பிணி நீங்கவேண்டும். சிகிச்சை வசதிகள் போதிய அளவு ஏற்படவேண்டும். அதற்கடுத்த படியாக நோய்த் தடுப்பு முறைகளில் கவனம் செலுத்த வேண்டும். நோயின்றி இருப்பதுடன் திருப்தியடையாமல், எல்லா மக்களும் நல்ல உடல் உரம் பெற்று விளங்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். சிகிச்சை வசதியை அதிகரிக்கவும், மக்கள் உடல் நலனுக்கான சூழ் நிலைகளை ஏற்படுத்தவும் சென்ற பத்து ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

நெல்லை மாவட்டத்தில் 1951-ல் மொத்தம் 7 அரசாங்க மருத்துவ மனைகள் இருந்தன. 1961-ல் அவைகளின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது. அரசினர் மருந்தகங்கள் (டிஸ்பென்சரி) 1951-ல் 2 இருந்தன. இப்போது மொத்தம் 7 மருந்தகங்கள்

பாளையங்கோட்டை அரசாங்க மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது

உள்ளன. தல நிதி ஆஸ்பத்திரிகள் மொத்தம் 29 இருக்கின்றன. முதலாவது இரண்டாவது திட்ட காலங்களில் 6 புதிய கிராம ஆஸ் பத்திரிகள் ஏற்பட்டுள்ளன. தொழு நோய் சிகிச்சை நிலையம் ஒன்று புதிதாக ஏற்பட்டுள்ளது. நாட்டு மருத்துவ வகை அரசினர் ஆஸ் பத்திரி ஒன்று புதிதாக ஏற்பட்டுள்ளது. நாட்டு மருத்துவ முறை கிராம ஆஸ்பத்திரிகள் தொகை 6 லிருந்து 12 ஆக அதிகரித் துள்ளது.

வசதிகள் அதிகரிப்பு

பாளையங்கோட்டையில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில் தற்போது 200 படுக்கை வசதிகள் உள்ளன. 250 படுக்கை களுடனும், விசேஷ வசதிகளுடனும் புதிய மாவட்ட தலைமை மருத்துவ மனையை ரூ 17.5 லட்சம் செலில் கட்ட இரண்டாவது திட்ட காலத்தில் அரசாங்கம் அனுமதித்தது. கட்டிட வேலைகள் முடிவடைந்து வருகின்றன. இதன்மூலம் படுக்கைகள் எண்ணிக்கை 2()0 லிருந்து 250 ஆக உயரும்.

வண்ணாரப்பேட்டையில் தற்போது இருந்துவரும் பெண்கள் குழந்தைகளுக்கான அரசாங்க மருத்துவமனை 100 படுக்கை வசதி உள்ளதாக இருக்கின்றது. தலைமை ஆஸ்பத்திரி புதிய கட்டிடத்துக்கு மாறியதும் இந்த மருத்துவமனை, தற்போதைய தலைமை மருத்துவ மனைக் கட்டிடத்துக்கு மாறும். படுக்கை வசதி 100 லிருந்து 150 ஆக அதிகரிக்கப்படும்.

தூத்துக்குடியில் உள்ள அரசாங்க மருத்துவ மனைக்கு 1955-ல் ரூ 7 லட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டது. படுக்கை வசதி 100 லிருந்து 130 ஆக அதிகரிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இரண்டாம் திட்ட காலத்தில் காச நோய், பல் மருத்துவம் ஆகிய சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன.

அம்பா சமுத்திரத்திலுள்ள அரசாங்க மருத்துவ மனையில் இரண்டாம் திட்ட காலத்தில் 20 படுக்கைகளுடன் கூடிய வார்டும், அறுவை சிகிச்சை அறையும் ரூ 71000 செலவில் கட்டப்பட்டன. இந்த ஆஸ்பத்திரியில் படுக்கைகள் எண்ணிக்கை 30 லிருந்து 50 ஆக அதிகரிக்கப்படும்.

சங்கரன்கோவிலில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில் இரண்டாம் திட்ட காலத்தில் எக்ஸ்ரேபிரிவும் 22 படுக்கைகள் கொண்ட வார்டும் ரூ 76,200 செலவில் கட்டப்பட்டன. படுக்கைகள் தொகை 8 லிருந்து 30 ஆக அதிகரிக்கப்படும்,

தென்காசியில் உள்ள அரசாங்க மருந்துவ மனையில் இரண்டாம் திட்ட காலத்தில் ரூ 50,000 செலவில் 20 படுக்கைகளுடன் கூடிய புதிய வார்டு கட்டப்பட்டது. இதில் படுக்கைகள் எண்ணிக்கை 20 லிருந்து 40 ஆக அதிகரிக்கப்படும்.

நாங்குனேரி அரசாங்க மருத்துவ மனையில் ரூ 28,000 செலவில் 20 படுக்கைகள் கொண்ட வார்டும், வேறு வசதிகளும் அமைக்கப்பட்டன. இதில் படுக்கை வசதி 10 லிருந்து 30 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கோவில்பட்டியில் உள்ள அரசாங்க மருத்துவமனை அபிவிருத்தி வேலை மூன்றும் திட்ட காலத்தில் ரூ. 1·86 லட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். திருச்செந்தூரில் உள்ள அரசாங்க மருத்துவமனை தற்போது 26 படுக்கை வசதிகள் உள்ளதாக இருக்கிறது. ரூ. 1·68 லட்சம் செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள உத்திரவாகியிருக்கிறது. ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள ஆஸ்பத்திரி 1958 ல் அரசாங்க நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதில் தற்போது 20 படுக்கை வசதிகள் உள்ளன.

மகப்பேறு விடுதிகள்

முதலாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் நெல்லை மாவட்டத்தில் மொத்தம் 48 மகப்பேறு, குழந்தை நல விடுதிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதற்காக ஆன செலவு 1·56 லட்சம் ரூபாய்.

கிராமங்களில் உள்ள கர்ப்பிணிகளுக்கும், தாய்மார்களுக்கும் மருத்துவ முறைப் பயிற்சி உள்ளவர்களின் உதவி கிடைக்க இதன் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது.

மருத்துவ குல குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், பிள்ளைப் பேறு உதவிப் பயிற்சி பெறுவதற்காக தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு 6 மாத காலம் பயிற்சி அளிக்கப் பட்டது. இப் பயிற்சித் திட்டத்துக்கு தாயிகள் பயிற்சி என்று பெயர். நாங்குனேரி வட்டத்தில் 130 பேர்களும், சங்கரன்கோவில் வட்டத்தில் 88 பேர்களும், அம்பா சமுத்திரம் வட்டத்தில 7 பேர்களும், கோவில்பட்டி வட்டத்தில் 46 பேர்களும், ஸ்ரீ வைகுண்டம் வட்டத்தில் 49 பேர்களும் இப் பயிற்சி பெற்றனர்.

வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்தவர்களுக்கு இலவசமாக ரூ. 50 பெறுமான கருவிகள் அடங்கிய பையும், பயிற்சி பெற்றதற்கான சான்றுப் பத்திரமும் வழங்கப் பட்டன.

சுத்தமே சுகம்

தொத்து நோயையும், வியாதிகளையும் தடுப்பதில் சுத்தத்துக்கு முதலிடம் உண்டு. சுற்றுப்புற சுகாதார அபிவிருத்திக்கு உதவுவதற்காக, கக்கூஸ்களை அமைப்பதில் உதவி அளிக்கப் படுகிறது. 1600 கக்கூஸ் தள பலகைகள் வாங்கப்பட்டு, ஏழைகளுக்கு இலவசமாகவும் மற்றவர்களுக்கு குறைந்த விலையிலும் வழங்கப் பட்டன. இந்த வகையில் இதுவரை 1500 கக்கூஸ்கள் கட்டப்பட்டுள்ளன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நெல்லை மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

கோவில்பட்டி வட்டாரத்தில் கீழஏரல்; வள்ளியூர் வட்டாரத்தில் வடக்கன்குளம்; ராதாபுரம் வட்டாரத்தில் திசையன்விளை; சேரன்மாதேவி வட்டாரத்தில் பத்தமடை; குருவிகுளம் வட்டாரத்தில் குருவிகுளம்; தூத்துக்குடி வட்டாரத்தில் புதுக்கோட்டை; மேலநீலித நல்லூர் வட்டாரத்தில் சேந்தமரம். இவற்றுள் சேந்தமரம் தவிர மற்ற இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்களும் அலுவலர்களுக்கான வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

தொழுநோய் சிகிச்சை

திருச்செந்தூர் வட்டம் பரமன்குறிச்சியில் அரசாங்க தொழுநோய் சிகிச்சை நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது. ஒரு ஜீப், 6 சைக்கிள்கள் இந் நிலையப் பணிக்காக அனுமதிக்கப் பட்டுள்ளன. இந்த நிலையத்தின் அலுவலர்கள் தினமும் கிராமப் பகுதிகளுக்குச் சென்று, குஷ்ட நோய் உள்ளவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். இது தவிர, பெரும் கோட்டூர், சிவகிரி, வடகரை கீழ்ப்பிடகை ஆகிய இடங்களில் தொழுநோய் சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

பாளையங்கோட்டை, தூத்துக்குடி ஆஸ்பத்திரிகளில் காசநோய் சிகிச்சைக்கு வகை செய்யப் பட்டுள்ளது. வீட்டுக்கு வீடு சென்று பார்வையிட்டு, சிகிச்சை அளிக்கவும், ஆலோசனைகள் கூறவும் சுகாதாரப் பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். தொத்து நோய் பரவாமல் தடுக்கும் முறைகளை அவர்கள் மக்களுக்கு எடுத்துரைக்கின்றனர்.

பாளையங்கோட்டை அரசாங்க மருத்துவ மனையில் மேக நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1958 ல் மாவட்ட பொது சுகாதார ஆய்வுக் கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மாவட்டத்தில் எல்லா மருத்துவ நிறுவனங்களுக்கும் வேண்டுமான பரிசோதனை வேலைகளுக்கு இதில் வகை செய்யப்படும்.

நெல்லை மாவட்டத்தில் கீழ்க் கண்ட இடங்களில் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன :—பாளையங்கோட்டை, வண்ணாரப் பேட்டை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம், தென்காசி, செங்கோட்டை, நாங்குனேரி, திருச்செந்தூர், கோவில்பட்டி, சங்கரன் கோயில், ஸ்ரீ வைகுண்டம், மூலைக் காரைப்பட்டி.

மருந்து கலக்குவோரும், மகப்பேறு உதவியாளர்களும், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் பயிற்சியளிக்கப் படுகின்றனர். இவர்கள் குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரப் பணி புரிகின்றனர்.

தொழுநோய் சிகிச்சை நிலையம். இது பரமன் குறிச்சியில் உள்ளது

குடும்பக் கட்டுப்பாட்டுக்கு, அறுவை சிகிச்சை முறையைப் பிரபலப் படுத்துவதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் மேற் கொண்டுள்ளது. இத் திட்டப்படி, குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சைப் பிரிவில் அறுவை சிகிச்சை செய்து கொள்பவருக்கு ரூ. 30 அளிக் கப்படுகிறது. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஊக்குவிக்கும் பஞ்சாயத்து போர்டுகளுக்கு பிரச்சாரப் பணிக்காகவும் இத் திட்ட அமுல் வேலைக்காகவும் ரூ. 10 வீதம் தரப்படுகின்றது.

1957 லிருந்து 1961 மார்ச் வரையில் நெல்லை மாவட்டத்தில் ஆண்கள் 940 பேரும் பெண்கள் 304 பேரும் அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளனர்.

கூட்டுறவின்

சாதனைகள்

பொருளாதாரத்தில் ஜனநாயக முறையின் சின்னமாக விளங்குவது கூட்டுறவு. கூட்டுறவு வசதிகளைப் பெருக்கிக்கொள்ளுவதில் நெல்லை மாவட்டம் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. முதல் திட்ட காலத் தொடக்கத்தில் மாவட்டத்தில் 569 கிராம கூட்டுறவு கடன் வசதிச் சங்கங்கள் இருந்தன. 1961 ல் இவற்றின் தொகை 786 ஆக அதிகரித்துள்ளது. கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினர்கள் தொகை சென்ற பத்து ஆண்டுகளில் 52,330 லிருந்து 236,455 ஆக அதிகரித்துள்ளது.

இரண்டாம் திட்ட காலத்தில் மாவட்டத்தில் 19 விவசாய பாங்குகள் ஏற்படுத்தப்பட்டன ; 8 சாகுபடியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 3 கூட்டுறவு கூட்டுப் பண்ணைச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. இரண்டாம் திட்ட காலத்தில் 11 விற்பனைச் சங்கங்கள் தொடங்கப்பட்டன.

நெல்லை மாவட்டத்தில் பால் சப்ளை கூட்டுறவுச் சங்கங்கள் எண்ணிக்கை 12 லிருந்து 30 ஆக அதிகரித்துள்ளது. தினசரி பால் உற்பத்தி அளவு 2,200 பட்டணம் படியிலிருந்து 3,828



நாசரத் கூட்டுறவு நூற்பு ஆலை கட்டப்பட்டு வருகிறது

படி ஆக அதிகரித்துள்ளது. பால் வற்றிய கால் நடைகளுக்கான பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு தொழில் வளர்ச்சி

பேட்டை, நாசரத் ஆகிய இடங்களில்·கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்ற பத்து ஆண்டுகளில் அளிக்கப்பட்ட ஊக்கம், ஆதரவு காரணமாக நெல்லை மாவட்டத்தில் தற்போது 12 மண் பாண்டத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. எண்ணெய்த் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 7 செயல்பட்டு வருகின்றன. கைக் குத்தரிசி தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 15 ம், சோப்பு செய்யும் தொழில் நிறுவனம் ஒன்றும், செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும், தோல் பதனிடு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும், குடிசைத் தொழில் முறையில் தீக்குச்சி செய்யும் சங்கம் ஒன்றும் உள்ளன.

நெல்லை மாவட்டத்தில் வெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 401 இயங்கி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கிராம கைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கூட்டுறவுத் துறையின் சேவை இலவசமாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு தொழிலின் வளர்ச்சிக்கும் வழிவகை கூற, தகுதி வாய்ந்த தொழில் நுட்ப நபர்களும் உள்ளனர். இவர்களுக்கான செலவை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது.

முதலாவது இரண்டாவது திட்ட காலங்களில் நெல்லை மாவட்டத்தில் கிராமக் கைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள சாதனைகள் (1961 மார்ச் முடிவு வரை) பின் வருமாறு:—

நெல்லை மாவட்டத்தில் நெல்லை, தேன் பொதை, காருகுறிச்சி, இலஞ்சி, செங்கோட்டை, வூரவநகரம், குருவிகுளம்,

பெருங்குளம், குறிச்சி, மேல ஆத்தூர், செய்துங்க நல்லூர், சுந்தர பாண்டியபுரம் ஆகிய 12 இடங்களில் மண் பாண்டத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் மொத்தம் 525 உறுப்பினர்கள் உள்ளனர். செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 28,395. இந்தச் சங்கங்கள், உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் மண் பாண்டங்களை வாங்கி, பொது மக்களுக்கு விற்கின்றன. காருகுறிச்சி, நெல்லை, தேன் பொதை ஆகியவைகளிலுள்ள சங்கங்கள், பொது தொழில் கொட்டகையில், உறுப்பினர்களை வேலைக்கமர்த்தி மண் பாண்டங்கள் உற்பத்தி செய்கின்றன. காருகுறிச்சி சங்கத்துக்கு தொழில் போதகர் ஒருவரின் சேவை இலவசமாக அளிக்கப் பட்டுள்ளது. காரு குறிச்சி மாதிரி மண் பாண்ட தொழிற்சாலையின் கொட்டகை, கருவிகள் முதலியன அந்தச் சங்கத்துக்கு இலவசமாக வழங்கப்பட்டன. மகன் சூளைகள், ஜனதா குளிர்பதன கருவிகள் மற்றும் வேலைப்பாடமைந்த பாண்டங்களை இச் சங்கம் தயாரிக்கிறது.

இந்தச் சங்கங்களுக்கு ரூ 46,650 வரை கடனும் ரூ 12,399 மானிய உதவியும் வழங்கப்பட்டுள்ளன. 1960-61-ல் மட்டும் இந்தச் சங்கங்கள் ரூ 271,027 பெறுமான பாண்டங்களை உற்பத்தி செய்தன; மொத்தம் ரூ. 298274க்கு சரக்குகளை விற்றன.

வீடு கட்டும் நிறுவனங்கள்

வீடு வசதிக்கான கூட்டுறவுச் சங்கம் முன்பு ஒன்றுதான் இருந்தது. இப்பொழுது நெல்லை மாவட்டத்தில் 16 வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அரசாங்க வீடு வசதி திட்டத்தின் கீழ் (State Housing Scheme) 143 வீடுகளும், குறைந்த வருமானப் பிரிவினருக்கான வீடுகள் 11 ம் கட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் திட்ட முடிவில் நெல்லை மாவட்டத்திலுள்ள 1077 கிராமங்களும், கூட்டுறவு இயக்கப் பயனை அடைந்து வருகின்றன.

தொழிலாளர்களுக்க்கு வீடு வசதி ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் 139 வீடுகள் கட்டுவதற்காக, இரண்டாவது திட்ட காலத்தில் அரசாங்கம் ரூ. 2,98,155 கடனும், ரூ. 5,7337 உதவித் தொகையும் அளித்திருக்கிறது. மக்களின் பொருளாதார நிலையில் அபிவிருத்தி ஏற்படுத்தி வாழ்வில் மேம்பாடு காண கூட்டுறவு இயக்கம் கணிசமாக உதவியுள்ளது.

சமூக முன்னேற்றம்

ஹரிஜனங்களையும் இதர பின்னடைந்த வகுப்பு மக்களையும், மற்ற முன்னேற்றமடைந்த வகுப்பு மக்களின் நிலைக்கு உயர்த்த வேண்டும் என்பதே ஹரிஜன நலத்துறை நடவடிக்கைகளின் நோக்கமாகும். நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து, சமுதாயத்தில் பின் தங்கிய மக்களின் முன்னேற்றத்தில் அரசினர் முனைப்பான கவனம் செலுத்தி வருகின்றனர்.

மாநிலம் பிரிக்கப்படாமல் இருந்தபோது 1950—51-இல் ஹரிஜன் நலனுக்காக 69 லட்சம் ரூபாயே செலவாயிற்று. ஆனால் 1960-61ல் இச் செலவு ரூ 355 லட்சம் அளவுக்கு வந்துள்ளது.

கல்வி வசதிக்காக உபகாரச் சம்பளங்கள் அளிப்பது, பள்ளிகளை நடத்துவது, மதியஉணவு, வீடு வசதிகள், கிணறு வெட்ட உதவி, மாடுகள் விவசாயக் கருவிகள் வாங்கிக் கொடுத்தல், குடிசைத் தொழில்களைச் செய்ய உதவி ஆகியன ஹரிஜன முன்னேற்றத்தில் அரசாங்கத்தின் முக்கியமான நடவடிக்கைகள் ஆகும்.

ஹரிஜன் நலத் துறையில் முதல் திட்ட காலத்தில் 80677 உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன. இரண்டாவது திட்ட காலத்

தில் 283101 உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன. முதல் திட்ட காலத்தில் 18 மாணவர் விடுதிகள் இருந்தன. இரண்டாம் திட்ட காலத்தில் பராமரிக்கப்பட்டு வந்த மாணவர் விடுதிகள் 169 ஆக உயர்ந்தது. உணவு மானிய உதவித் தொகையாக முதல் திட்ட காலத்தில் ரூ 37,90,400 வழங்கப்பட்டது. இரண்டாம் திட்டகாலத்தில் வழங்கப்பட்ட தொகை ரூ 53,26,400 ஆகும்.

பின்னடைந்த மக்கள் முன்னேற்றத்தில் நெல்லை மாவட்ட சாதனைகள் வருமாறு : ஷெடியூல் வகுப்பினருக்கான பள்ளிகள் 13 லிருந்து 17 ஆக உயர்ந்தன. மதிய உணவுச் செலவு ரூ 110,464 லிருந்து ரூ 224,416 ஆக உயர்ந்துள்ளது. அரசாங்க மாணவர் விடுதி, முன்பு ஒன்று மட்டுமே இருந்தது. இரண்டாம்திட்ட முடிவில் அவற்றின் தொகை 19 ஆக உயர்ந்தது. இரண்டாம் திட்டக்காலத் தில் மாவட்டத்தில் ஷெட்யூல் வகுப்பினருக்குக்காக 1264 வீடுகள் கட்டித்தரப் பட்டன; 4877 மனை இடங்கள் வழங்கப்பட்டன; ரூ 436,050 செலவில் 1530 உழவுக் காளைகள் வழங்கப்பட்டன. 100 பாசனக் கிணறுகள் வெட்ட உதவி அளிக்கப்பட்டது.

ஷெட்யூல் பழங்குடியினருக்காக இரண்டாவது திட்ட காலத் தில் 18 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. 29 ஜோடி காளைகள் வழங்கப்பட்டன.

குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்கு அரசாங்க உதவி பெறும் மாணவர் விடுதிகள் !8 உள்ளன. இரண்டாம் திட்ட காலத்தில் இவ் வகுப்பினருக்கு 492 வீடுகள் கட்டித் தரப்பட்டன. 2468 உழவு மாடுகள் வழங்கப்பட்டன. 1034 உபகாரச் சம்பளங்கள் தரப்பட்டன.

வடக்கு வள்ளியூர் பகுதியில் காமராஜ் நகர் என்று பெயர் சூட்டப்பட்டுள்ள கேசவனேரியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வீடுகள்

மரந்தை ஹரிஜன் குடியிருப்பு

இதர பின்னடைந்த வகுப்பு மாணவர்களுக்காக நெல்லை மாவட்டத்தில் முதல் திட்டக் காலத்தில், அரசாங்க உதவி பெறும் மாணவர் விடுதிகள் 17 இருந்தன. மொத்தம் 1027 உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன.

ஹரிஜன குடியிருப்புகள்

மானூர் வட்டாரத்தில் நரியூத்து, கண்டியபேரி, புதூர், அன தலைப் பச்சேரி, மேட்டுப்பச்சேரி ஆகிய ஐந்து இடங்களில் ஹரிஜன் குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு குடியிருப்பிலும் 20 வீடுகள் கட்டப்பட்டுள்ளன, ஒவ்வொரு வீட்டுக்கும் உதவித் தொகை ரூ. 550. சில பகுதியினருக்கு ரூ. 200 வட்டியில்லா கடனும் வழங்கப்பட்டுள்ளது.

எட்டாங்குளத்தில் மறவர்களுக்காக 10 வீடுகள் கொண்ட குடியிருப்பும் ஏற்பட்டுள்ளது.

தென்காசி வட்டாரத்தில் இலஞ்சி ஹரிஜனங்களுக்கு 20 வீடுகளும், பாட்டாகுறிச்சி மறவர்களுக்கு 10 வீடுகளும் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன.

செங்கோட்டை வட்டாரத்தில் பாலமார்த்தாண்டபுரத்தில் ஹரிஜனங்களுக்காக 20 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக அச்சம்புதூரில் 10 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஹரிஜன் குடியிருப்புக்கு ரூ. 11000 மானிய உதவியும், மறவர் குடியிருப்புக்கு ரூ. 5500 மானிய உதவியும் அனுமதிக்கப்பட்டன. குடியிருப்பைக் கட்டுவதற்கு 20 ஹரிஜனங்களுக்கு ரூ. 3400 வட்டியில்லாக் கடனும் வழங்கப்பட்டது.

சேரன் மாதேவி வட்டாரத்தில் ஹரிஜன நல உதவி திட்டத்தின்கீழ் பத்தமடை, கோபாலசமுத்திரம், உதயமார்த்தாண்டபுரம்,

தெற்கு அரியநாயகிபுரம், சுண்ணும்புக்கல், பிராஞ்சேரி ஆகிய ஊர்களில் ஹரிஜனக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக் கின்றன. மாதந்தோறும் 30ந் தேதி ஹரிஜன் தினவிழா நடத்தப் படுகிறது.

ராதாபுரம் வட்டாரத்தில் 4 ஹரிஜன குடியிருப்புகளும், மறவர் குடியிருப்பு ஒன்றும் கட்டப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்கு மொத்தச் செலவு ரூ. 51,000. பயனடைவோர், ரொக்கமாக அல்லது உழைப்பாக இத் திட்டத்துக்கு உதவியதின் மதிப்பு ரூ. 136,00 ஆகும்.

கருங்குளம் வட்டாரத்தில் ஹரிஜன நல உதவி திட்டத்தின்கீழ் ரூ. 37,500 செலவில் 52 புதிய வீடுகள் கட்டப்பட்டு ஹரி ஜனங்களுக்கு வழங்கப்பட்டன. இத்திட்டத்துக்கு பொதுமக்கள் உதவியுள்ளனர், சீவலபேரியில் 12 வீடுகளும் உலகுடியில் 20 வீடுகளும் காசிலிங்கபுரத்தில் 20 வீடுகளும் கட்டப்பட்டன. சொந்த வீடு பெற்ற ஹரிஜனங்கள் இப்போது திருப்தியுடன் வாழ் கின்றனர். அகரத்தில் 20 வீடுகளும் களவாயில் 12 வீடுகளும் கட்டப்பட்டு வீடுகள் மறவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மறவர் குடியிருப்பு

ஹரிஜன நலத்துறை உதவி மூலம் மேலநீலித நல்லூர் வட்டாரத் தில் இரண்டு, மறவர் குடியிருப்புகள் (20 வீடுகள்) கட்டப்பட்டுள் ளன. இந்த வட்டாரம் தனியே பிரிந்து செயல்படுமுன்பு தேவர் குளத் தில் ஹரிஜனங்களுக்கு 17 வீடுகளும், வன்னிக் கோனேந்தலில் மற வர்களுக்கு 20 வீடுகளும் கட்டப்பட்டன. அபிவிருத்தி வேலைகளுக் காகஇந்த வட்டார மக்கள் பணமாகவும், பொருளாகவும், உழைப் பாகவும் உதவியதின் மதிப்பு ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரம் ஆகும்.

வாசுதேவநல்லூர் வட்டாரப் பகுதியில் மலைப்பாங்கான இடங் களில் வசிக்கும் ஆதிவாசிகளுக்காக, ஹரிஜன நலத்திட்டத்திலி ருந்து குறிப்பிடத்தக்க உதவி அளிக்கப்பட்டுள்ளது. தலையணை அருகே அவர்களுக்கு 10 ஏக்கர் நிலம் இனமாகக் கொடுத்து பாசனத்துக்கு ஒரு கிணறு வெட்டி, பம்பும் வைத்துக் கொடுக் கப்பட்டுள்ளது. அவர்கள் விவசாயம் செய்து நல்ல முறையில் வாழ வகை செய்யப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் ராயகிரியில் தோல் பதனிடும் தொழி லாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று உள்ளது. ஹரிஜனங்களுக்காக

மத்திய அரசாங்க உதவித் திட்டத்தின் கீழ் இச் சங்கத்துக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. இக் கூட்டுறவு சங்கத்துக்கு ரூ 31,000 மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது. சங்கத்தில் 28 உறுப்பினர்கள் உள்ளனர். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ 830. இந்த தொழிற்சாலையில் பதனம் செய்யப்படும் தோல் நல்ல தரமுள்ள தாகவும் நன்கு விற்பனையாகக் கூடியதாகவும் இருக்கின்றது. 1960-61-ல் இந்தச் சங்கம் ரூ 34,956 பெறுமான பொருள்களை உற்பத்தி செய்தது. விற்பனை மூலம் கிடைத்த தொகை ரூ 40,020 ஆகும். குருவி குளத்தில் நவீன முறையில் தோல் உரிக்கும் நிலையம் ஒன்றும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. இந்த நிலையத்துக்கு ரூ 6750 மானிய உதவி அளிக்கப்பட்டு, கொட்டகை ஒன்று கட்டப்பட்டுள்ளது. எலும்புத்தூள் பிரிவு ஒன்றும் இந்த நிலையத்தில் உள்ளது. இது வரை ரூ 5025 பெறுமான எலும்புத் தூள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

வேப்பங் குளத்தில் ஹரிஜனங்களுக்கான கைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், காந்தியப் பொருளாதார அறிஞர் ஸ்ரீ குமரப்பாவின் பெயரால் இயங்கி வருகின்றது.

மாதர் நலம்

குடும்ப நலம், சமூகசேவை, கைத்தொழில்கள், மருத்துவம், முதலிய துறைகளில் மாதர்களிடையே பணியாற்றுவதற்காக்



கோவில்பட்டி அரசாங்க விவசாயப் பண்ணையில் பெண்கள் பணியாற்றுகிறார்கள்

மாதர் நலத் துறையின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல கிளை நிறுவனங்கள் இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர்

வட்டத்தைச் சேர்ந்த மூக்குப்பீறி, ஸ்ரீவைகுண்டம் வட்டத்தைச் சேர்ந்த ஏரல், தென்காசி வட்டத்தைச் சேர்ந்த சுரண்டை ஆகிய மூன்று இடங்களில் கிளை நிறுவனங்கள் உள்ளன.

ஒவ்வொரு கிளையிலும் ஒரு அமைப்பாளரும், வழி காட்டியும் உள்ளனர். ஒவ்வொரு கிளையும் அங்கங்கே சுற்றுப்புறப் பகுதிகளில் மாதர் சங்கங்களைக் கூட்டிப் பணியாற்றுகின்றன. மூக்குப்பீறி நிறுவனம் மூலம். நாசரத், ஒய்யான்குடி, குளத்துக்குடியிருப்பு, நாசரத் ஷெடியூல் வகுப்புக் குடியிருப்பு முதலியவற்றின் நலன்கள் கவனிக்கப்படுகின்றன. ஏரல் நிறுவனம் மூலம் லட்சுமி புரம், முஸ்லிம் தெரு ஆகிய இடங்கள் கவனிக்கப் படுகின்றன, கீழ்ச் சுரண்டை, மேலூர் ஆகிய பகுதிகளிலும் மாதர் நலப்பணி நடைபெறுகின்றது. பாளையங்கோட்டையில் போலீசார் குடியிருப்பில் மாதர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

மாதர் நல அமைப்பாளர், குடும்ப நலன் பற்றி விசாரித்தும் படிப்பு, வேலை வசதி முதலியவைகளில் ஆலோசனை கூறியும் உதவுகிறார். இவ்வாறு 5145 குடும்பங்கள் பார்வையிடப்பட்டன, 138 பேர் பயனடைந்தனர். குழந்தைகளுக்கு ஒழுக்கம் சுத்தம் முதலியன போதிக்கும் வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. பெண்களுக்கு சிறு கைத் தொழில்கள் கற்றுத்தரப்படுகின்றன.

தூத்துக்குடி துறைமுகம்

தூத்துக்குடி முக்கியமானதொரு துறைமுகப் பட்டினம். சென்னை நகரிலிருந்து 447 மைல் தூரத்தில் மன்னார் வளைகுடாவில் இது அமைந்துள்ளது.

கடல் வாணிபத்துறைமுகம் என்ற முறையில் சென்னையை விட இது பழமையானது. போர்ச்சுகீஸியர் முதன்முதலில் 1532-ல் இங்கு வந்தனர், செயின்ட் பிரான்சிஸ் சேவியர் 1542-ல் தூத்துக் குடி வந்தார். இத்துறைமுகம் சிறிது காலம் போர்ச்சுகீஸியர் வசம் இருந்தது. பின்னர் டச்சுக்காரர்கள் கைக்கு மாறி 1792-ல் பிரிட்டிஷார் இதைப் பிடித்தனர். அப்போது தூத்துக்குடி துறைமுகம் மூலம் வர்த்தகம் அதிகம் நடைபெறவில்லை. காயல் பட்டினமும், குலசேகர பட்டினமும் வாணிபத்தில் முக்கியமாக விளங்கின. காயல்பட்டினத் துறைமுகம் பின்னர் மூடப்பட்டுவிட்டது. குலசேகர பட்டினம் மூலம் மிகக் கொஞ்ச அளவில் வியாபாரம் நடைபெறுகின்றது.

1876-ல் தூத்துக்குடிக்கு ரயில் வசதி ஏற்பட்டது. தூத்துக்குடி உள் துறைமுகம் வளைகுடாவில் நுழைவாயிலுடன் குதிரைலாட வடிவில் அமைந்துள்ளது. 10 அடிக்கு அடி மட்டம் உள்ள கப்பல்

கள் இத்துறைமுகத்துக்குள் வரலாம். பெரிய கப்பல்கள் 5 மைலுக்கு அப்பால் நங்கூரம் பாய்ச்சி நிற்கவேண்டும். பருவ நிலை பற்றிக் கவலை இல்லாமல் ஆண்டு முழுவதிலும் எல்லா நாட்களிலும் வேலை நடக்கும் படியாக இது அமைந்துள்ளது. இந்தியாவில் சிறு துறை முகங்களில் தூத்துக்குடி முதல் ஸ்தானம் வகிக்கின்றது. தமிழ் நாட்டில் சென்னைக்கு அடுத்தபடியாக தூத்துக்குடியே இரண்டாவது பெரிய துறைமுகம் ஆகும்.

1950—51-ல் இத்துறைமுகம் வழியாக ஏற்றுமதியும் இறக்குமதியும் ஆன சரக்குகள் மொத்தம் 51,3164 டன்கள். 1960-61-ல் இது 95,9416 டன்களாக அதிகரித்தது.

தூத்துக்குடி துறைமுகத்தை ஆழ் கடல் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கென ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் இறுதி வடிவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


வ. உ. சிதம்பரனுர் நினைவாக ஓட்டப்பிடாரத்தில் ரூ. 60000 செலவில் கட்டப்பட்டுள்ள நினைவு மண்டபம்

நினைவுச் சின்னங்கள்

நாட்டுக்காக அரும்பணியாற்றிய தலைவர்களின் நினைவைப் போற்றும் முறையில் நினைவுச் சின்னங்கள் அமைப்பதும் முக்கிய பணியாகக் கருதப்பட்டது. கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் நினைவாக அவர் பிறந்த

போலீசார் இல்லங்கள்

ஊராகிய ஒட்டப்பிடாரத்தில் சுமார் ரூ. 60,000 செலவில் நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. பாபநாசத்தில் கலியாண தீர்த்தக் கரையில், மறைந்த தலைவர் வ. வே. சு. அய்யர் நினைவாக நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

போலீசார் இல்லங்கள்

போலீசாருக்கு இல்லங்கள் கட்டுவதற்கு, இரண்டாவது திட்டத்தில் முக்கிய இடம் அளிக்கப்பட்டது. இரண்டாம் திட்ட காலத்தில் போலீசாருக்காக 1961 எப்ரல் வரை 358 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 105 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

நகர அமைப்பு

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி ஆகிய நகராட்சிகளில் நகரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தில் மொத்தம் நான்கு நகராட்சிகள் உள்ளன. ஒவ்வொரு நகராட்சிப் பகுதியிலும் போதுமான அளவு ரேடியோ செட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. பாளையங்கோட்டை நகராட்சியில் வயர்பிராட்காஸ்டிங் ஒலிபரப்பு சாதனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள 814 பஞ்சாயத்துகளில் 75 சதவீதத்துக்கு மேற்பட்டவைகளில் ரேடியோ செட்டுகள் உள்ளன.

அபிவிருத்திப் பணிகளுக்காக ஊராட்சி மன்றங்களுக்கு அரசாங்கம் கடன் கொடுத்து உதவியுள்ளது. மேலப்பாளையம் நகராட்சிக்கு ரூ 24,450-ம், பாளைங்கோட்டை நகராட்சிக்கு ரூ 1·2 லட்சமும், திருநெல்வேலி நகராட்சிக்கு ரூ 3·35 லட்சமும் கடன் அளிக்கப்பட்டுள்ளது. அங்காடிகள் அமைத்தல், உர உற்பத்திக்கு வகை செய்தல், வீடு வசதி ஏற்படுத்தல் முதலிய

காரியங்களுக்காக இக் கடன் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயிகுடி, கோவில்பட்டி, திருச்செந்தூர், குலசேகரப்பட்டினம், திசையன் விளை, ஸ்ரீவைகுண்டம். களக்காடு பஞ்சாயத்துகளுக்கும் அரசாங் கம் கடன் வழங்கி உதவியுள்ளது.

தண்ணீர் சப்ளை

நெல்லை மாட்டத்தில் சென்ற பத்து ஆண்டுகளில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம், பெருமாள்புரம், தூத்துக்குடி, ஆகிய நகரங்களுக்கும், தென்காசி, காயல்பட்டினம், திருச்செந்தூர், இலஞ்சி, மேலகரம் பஞ்சாயத்துகளுக்கும், சேந்தமங்கலம், புன்னை



தண்ணீர் சப்ளை தொட்டி, பேட்டை

காயல், ஆறுமுகனேரி, லட்சுமணபுரம், கந்தசாமிபுரம், அடைக்கலா புரம், வீரபாண்டிய பட்டினம், ஆத்தூர், மேலத்தூர் கிராமங் களுக்கும், குற்றாலம் நகரமைப்புக்கும் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வசதி ஏற்படுத்தப்பட்டது. தூத்துக்குடி விஷயத்தில் ஏற்கனவே இருந்த வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

செய்தித் துறையின் பணி

சிறு சேமிப்புத் திட்ட பிரச்சாரத்தையொட்டி "பணம் பத்தி ரம்" என்ற நாடகம் நெல்லை மாவட்டத்தில் பல இடங்களில் நடத்தப் பட்டது. தீண்டாமை ஒழிப்பு பற்றிய "வாழப் பிறந்தவர்கள்" என்ற நாடகம் நெல்லை மாவட்டத்தில் 1960-61-ல் ஆறு இடங் களில் நடத்தப்பட்டது. இந்த விழாக்களின் போது ஐந்தாண்டுத் திட்ட சாதனைகளை விளக்கும் சொற்பொழிவுகள் நடந்தன.

பரிசுப் பத்திர இயக்கத்தை பிரபலப்படுத்துவதற்கான பணி நெல்லை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. கன்னியாகுமரி மாவட்ட செய்தித் துறை அதிகாரி, நெல்லை மாவட்டத்தில் 20 இடங்களில் பொதுக் கூட்டங்களுக்கு ஏற்பாடுசெய்தார். சினிமாப் படங்களும் காண்பிக்கப்பட்டன. நெல்லை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறை இரண்டு பொருட் காட்சிகளை நடத்தியது. 1958ல் திருநெல்வேலி நகராட்சிப் பொருட் காட்சியின் போதும் 1961-ல் குற்றாலத்தில் இளைஞர் முகாமின் போதும் நடந்த அப்பொருட் காட்சிகள், ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மக்கள் நன்கு உணருமாறு அமைக்கப் பட்டிருந்தன.

முதலாவது இரண்டாவது திட்ட காலங்களில் இத்திட்டங் களுக்காக ரூ 152·96 லட்சம் செலவாயிற்று. மொத்தம் 5 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளனர்.

ஐந்து அருவிகள்

"தேனருவி திரை எழும்பி வானின் வழி ஒழுகும்" என்று புகழப்பட்ட குற்றால அருவிப் பகுதி, தமிழகத்தில் இயற்கை எழில் கொஞ்சும் இடமாகும். உடலுக்கும் உள்ளத்துக்கும் இதந்தரும் குளுமையான சூழல் இதன் தனிச் சிறப்பு. சாரல் காலத்தில்



பழைய குற்றாலம் அருவி

அதாவது தென்றல் பருவத்தில் இந்த அருவியில் நீராடி மகிழ, வெகு தொலைவிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். பச்சை மாமலையிலிருந்து வெள்ளிப் பிழம்புபோல துள்ளிக் குதித்து விழும் இந்த அருவியில் நீராடுவது மறக்க முடியாத சுகத்தைத் தருவதாகும்.

பஞ்சாயத்தாக இருந்த குற்றாலம், 1955-ல் நகரமைப்பாக ஆக்கப்பட்டது. இங்கு வரும் பொதுமக்களின் வசதிக்காக பல



திருச்செந்தூர்: முருகப்பெருமானுடைய ஆறு படைவீடுகளில் ஒன்று. திருமுருகாற்றுப்படையில் திருச்சீரலைவாய் என்று பாடப்பெற்ற தலம்.

அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பூங்காவுக்கு எதிரில் உள்ள சமுதாய நிலையத்தில் வாசகசாலை அமைக்கப் பட்டுள்ளது. குற்றாலத்துக்கு வரும் மாணவர் குழுக்களுக்கு இந்த நிலையத்தில் வாடகை இல்லாமல் இட வசதி தரப்படுகிறது.

விஜயம் செய்யும் பிரமுகர்கள் வசதிக்காக சர்க்யூட் ஹவுஸ் கட்டப்பட்டுள்ளது. 31 அறைகள் உள்ள ஒரு சத்திரத்தையும் 2 டூரிஸ்ட் பங்களாக்களையும் நகரமைப்புக் கமிட்டி பராமரித்து வருகின்றது. குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகின்றது. முன் கூட்டி மனுச் செய்து ரிசர்வ் செய்து கொள்ளவும் வசதி உண்டு.

குற்றால அருவி, ஐந்தருவி, சித்தருவி, சண்பகதேவி, புலி அருவி ஆகிய ஐந்து அருவிகளில் மக்கள் நீராடுகிறார்கள். பிரதான அருவிப்பகுதியில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள நரமைப்புக் கமிட்டி உத்தேசித்துள்ளது. அரசாங்கம் இதற்காக ரூ 10000 கடன் அனுமதித்துள்ளது. "பழைய குற்றாலம் அருவி" இப்பகுதியிலிருந்து நாலரை மைல் தூரத்தில் இருக்கிறது, இந்த அருவிக்குச் செல்லச் சரியான சாலை வசதியும் நீராடுவதற்கான இடவசதியும் சரிவர இல்லாமல் இருந்ததினால் இக்குறையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது.

இப்போது மோட்டார் செல்லக்கூடிய சாலை அமைக்கப்பட்டு, அருவிப்பகுதியும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. பழைய குற்றாலம் இப்போது எழில் கொஞ்சும் இடமாகிவிட்டது. சாரல் காலத்தில் விசேஷ பஸ்கள் விடப்படுகின்றன.

தங்குமிட வசதிகள்

தென்காசி தான், குற்றாலத்துக்கு மிக அருகில் உள்ள ரயில்வே நிலையம் ஆகும். அங்கிருந்து பஸ், கார் அல்லது வண்டி மூலம் தான் மக்கள் குற்றாலம் வரமுடியும். முன்பு ஒரு பஸ் நிலையம் தான் இருந்தது. போதுமான வசதிகளுடன் புதிதாக ஒரு பஸ் நிலை

குற்றாலம் சர்க்யூட் ஹவுஸ்

யம் கட்டப்பட்டு வருகின்றது, அரசாங்கம் இதற்காக ரூ 20000 கடன் அனுமதித்துள்ளது. கார் நிறுத்துவதற்கான இடவசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார்குடா கடற்கரையில் கிழக்கு நோக்கி மிக அழகாக அமைந்துள்ள திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில், நெல்லை மாவட்டத்தின் சிறப்புகளில் ஒன்றாக விளங்குகிறது.

தூத்துக்குடி துறைமுகத்திற்கருகே கடற்கரையோரமாக சர்க்யூட் விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

பாளையங்கோட்டையைச் சேர்ந்த வண்ணாரப்பேட்டையில் சர்க்யூட் ஹவுஸ் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மத்திய அரசாங்க திட்டங்கள்

தமிழ் நாட்டில் மத்திய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள மிகப் பெரிய தொழில்கள் பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டமும் ஆகும். இவையல்லாமல் கச்சா பிலிம் தொழிற்சாலை, டெலிபிரிண்டர் தொழிற்சாலை, மருத்துவ மனைகளுக்கான அறுவைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை முதலிய தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

நெய்வேலி திட்டம்

இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மிக முக்கியமானது ஆகும். எதிர் காலத்தில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் இதன் சேவை மிகப் பெரியதாகவிருக்கும். தென் ஆர்க்காடு மாவட்டம் நெய்வேலிப் பிரதேசத்தில், 145 லிருந்து 200 அடிக்கு மேற்பட்ட ஆழத்தில் 100 சதுர மைல் பரப்பளவுக்கு 200 கோடி டன்கள் பழுப்பு நிலக்கரி படிந்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படும். இதைப் பயன்படுத்தி 4 லட்சம் கிலோவாட் வரை மின்சாரம் உற்

பத்தி செய்யவும், 1·5 லட்சம் டன் ஊரியா உரம் தயாரிக்கவும், 3·8 லட்சம் டன் சுட்ட நிலக்கரி அச்சுக்கள் தயாரிக்கவும், 6,400 டன் மோட்டார் ஸ்பிரிட், 54,300 டன் தார், 1,032 டன் பினயில் ஆகியன தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நிலக்கரியைத் தோண்டும்போது வெளிவரும் தரமான களிமண்ணைப் பயன்படுத்துவதற்கான தொழிற்சாலையும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது, நெய்வேலி நிலக்கரித் திட்டம் ரூ. 86 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, மூன்றாவது திட்டக் கால விஸ்தரிப்பு வேலைகளையும் சேர்த்து சுமார் ரூ. 110 கோடி செலவிடப்படும்.

பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை

பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை முதல் திட்டக் காலத்தில் இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. இது 1955-ல் உற்பத்தியைத் தொடங்கிற்று. சுவிட்ஸர்லாந்து உதவியுடன் இது அமைக்கப்பட்டது. இதில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை 8 கோடி ரூபாய். இரண்டாம் திட்டக் காலத்தில் இத் தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 620 பெட்டிகளைத் தயாரிக்கும் திறன் பெற்றுள்ளது. தற்போது இத் தொழிற்சாலையில் சுமார் 7500 பேர் வேலை செய்கின்றனர், 300 பெட்டிகளுக்கு ஆசனம் முதலிய வசதிகளை அமைப்பதற்கான தொழிற்சாலைப் பிரிவு ரூ. 3·5 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாவது திட்ட மத்தியில் இங்குத் தயாராகும் எல்லாப் பெட்டிகளுக்கும் இந்தத் தொழிற்சாலையிலேயே ஆசனம் முதலிய வசதிகள் அமைக்கப்படும்.

உதகை பிலிம் தொழிற்சாலை

உதகையில் கச்சா பிலிம் தொழிற்சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. பிரெஞ்சு நிபுணர்களின் ஒத்துழைப்புடன் போட்டோ பிலிம்கள் உற்பத்தி

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டத்தோடு

செய்யப்படும். இத்திட்ட வேலைக்காக இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி கம்பெனி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் ரூ. 6·5 கோடி செலவாகும். நானூறு நிபுணர்கள் உட்படச் சுமார் ஆயிரம் பேர் இதில் வேலை வசதி பெறுவர். எக்ஸ்-ரே போட்டோ பிலிம், பதிவுத் தாள்கள், போட்டோ லித்தோவுக்கான தாள்கள் முதலியன இதில் உற்பத்தியாகும். மூன்றாவது திட்ட முடிவில் கலர் பிலிம்களும், கலர் போட்டோ தாள்களும் உற்பத்தியாகும், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் இதில் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுறது. இந்தக் கம்பெனிக்காக 272 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கத் தமிழ்நாடு அரசாங்கம் இசைந்துள்ளது.

டெலிபிரின்டர்

"ஆலிவெட்டி" என்ற இத்தாலி நாட்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்திய அரசாங்கம் கிண்டியில் ஒரு டெலிபிரின்டர தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. மாதம் 100 டெலிபிரின்டர்கள் இதில் உற்பத்தி செய்யப்படும். இதில் மொத்தம் சுமார் 200 பேர் வேலை பெறுவர். கிண்டி தொழிற் பண்ணையில் ஏற்கனவே இதற்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு அளவில் உற்பத்தி தொடங்கிவிட்டது.

மத்திய அரசாங்கம், ரஷ்யத் தொழில் நுணுக்க உதவியுடன் கிண்டியில் அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இதற்குச் சுமார் 5 கோடி ரூபாய் செலவாகும். இங்கு 150 வகைகளில் சுமார் 25 லட்சம் அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கப்படும். இந்தக் கம்பெனிக்

புதியதோர் நகரமும் எழுந்துள்ளது.



காக 115 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கத் தமிழ்நாடு அரசாங்கம் இசைந்துள்ளது.

சேலம் இரும்பு

சேலம் மாவட்டத்தில் இரும்புக் கனி அதிக அளவில் கிடைக்கிறது. ஆயின் அதில் இரும்புச்சத்துக் குறைவாக இருக்கிறது. இப்பொழுது நெய்வேலியில் நிலக்கரி கிடைப்பதினுல், அதையும் சேலம் இரும்புக் கனியையும் கொண்டு இரும்பு உற்பத்தி செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. பூர்வாங்க சோதனைகள் நம்பிக்கை அளித்துள்ளன. நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்ட பின்புதான், விரிந்த அளவில் சோதனைகளை மேற்கொள்ள இயலும். இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் மூன்ரும் திட்டத்தில் ரூ. 25 கோடி ஒதுக்கியுள்ளது. பூர்வாங்க வேலைகளுக்காக மாநில அரசாங்கம் மூன்ருவது திட்டத்தில் ரூ. 75 லட்சம் ஒதுக்கியுள்ளது.

காவேரி எண்ணெய்

காவேரிப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பற்றிப் பல அயல்நாட்டு நிபுணர்களால் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வந்துள்ளது. 1956-ம் ஆண்டு ரஷ்ய நிபுணர்கள் அவ்விடத்தைப் பார்வையிட்டு இங்கு எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறிகள் இருப்பதைத் தெரிவித்தனர். அதனையொட்டி 1957-58-ல் பூர்வாங்க சோதனைகள் நடத்தப்பட்டன, இந்தியப் புவியியல் ஆராய்ச்சிக் கழகம் இதற்கான சோதனைகளை மேற்கொண்டது. இதுவரை சுமார் 4,000 சதுர மைல் அளவில் சர்வே நடத்தப்பட்டுள்ளது. மேலும் சில பகுதிகளில் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பூர்வாங்க சோதனைகள் இந்தப் பகுதியில் எண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றன.

சேது சமுத்திரத் திட்டம்

சேது சமுத்திரத் திட்டமும் இந்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பாக் ஜலசந்திக்கும் மன்ஞர் வளைகுடாவிற்கும் இடையில் அடித்தரை பாறையாக உள்ள பகுதியில் கால்வாய் அமைத்துப் போக்குவரத்துக்கு வழி செய்வதே இத் திட்டத்தின் முக்கிய அம்சம் ஆகும். இந்தக் கால்வாய் அமைப்பின் மூலம் இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கு வரும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றிவர வேண்டிய அவசியம் இராது. இதன் மூலம் கப்பல் பிரயாண நேரமும் எரி பொருளும் கணிசமாகக் குறையும்.

ரயில் பாதை

தமிழ் நாட்டில் ரயில்பாதை வசதிகளை அதிகரிப்பதற்கான திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன. சேலம்-பெங்களூர், விருதுநகர்-மானாமதுரை, திருநெல்வேலி-கன்னியாகுமரி ரயில் பாதைத் திட்டங்களை மூன்றாவது திட்டத்தில் சேர்க்கும் விஷயமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கைத்தொழிலும் வாணிபமும் செழிப்படைவதற்கு வேண்டுமான நிலக்கரி, உருக்கு, மற்றும் இதர கச்சாப் பொருள்கள் போதிய அளவில் கிடைக்கவேண்டுமானால், ரயில் வசதிகள் அதிகரித்தாக வேண்டும். இந்த வசதியைச் செய்வதின் அவசியம் பற்றி மாநில அரசாங்கம் தீவிரமாக வலியுறுத்தியுள்ளது.

கல்கத்தா-சென்னை, அரக்கோணம்-ஈரோடு ஆகியவைகளுக்கு இடையில் பிராட்காஜ் லைன் இரட்டைப்பாதை அமைப்பதற்கான ஏற்பாடும், ரயில்வே அபிவிருத்தித் திட்டத்தில் இடம் பெறும் என்று நம்பப்படுகிறது.

வளமான எதிர்காலம்

சுதந்திரப் பாதையில் பயணம் தொடங்கிப் பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் நிறைவேறி விட்டன. தற்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெற்றுவருகிறது.

நாட்டு மக்கள் நலனுக்காக முதல் திட்டக் காலத்தில் ரூ. 80 கோடியும், இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 186 கோடியும் அரசாங்கத்தால் செலவிடப்பட்டதை அறிந்தோம். மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 291 கோடி செலவிடப்படும். இரண்டாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்து நடத்தவும், நிறுவனங்களைப் பராமரிக்கவும் ஆண்டுதோறும் ரூ. 8 கோடி செலவிட வேண்டியிருக்கிறது. மூன்றாவது திட்டக்கால அளவில் இச் செலவு ரூ. 40 கோடியாகும். இதற்கு வழி வகுப்பதோடு, திட்டச் செலவுக்காக மாநில அரசாங்கம் ரூ. 101 கோடி ஒதுக்கும். அதற்கு மேல் ரூ. 190 கோடி வரை மத்திய அரசாங்கம் உதவி செய்யும். இந்த வகையில் மூன்றாவது திட்டத்தின் மொத்த அளவு

ரூ. 291 கோடியாக இருக்கும். திட்ட வாரியான செலவு விவரங்கள் பின் வருமாறு :—

(1)	முதல் திட்டச் செலவு (2)	இரண்டாம் திட்டச் செலவு (3)	மூன்றும் திட்ட உத்தேசச் செலவு (4)
		(ரூபாய்கள் கோடியில்)	
வேளாண்மை	9·67	16·80	36·98
சமுதாயநல அபிவிருத்தியும் கூட்டுறவும்		15·23	25·18
பாசனமும் மின்சக்தியும்	50·43	95·78	127·61
பெருந் தொழில்களும், நடுத்தரத் தொழில்களும்,	1·53	1·13	3·35
சிறு தொழில்களும், கிராமத் தொழில்களும்		12·72	20·16
சாலைகள், சுற்றுலா வசதிகள்	2·70	5·38	11·25
கல்வி	3·82	13·73	32·16
சுகாதாரம்	6·42	14·35	21·50
வீட்டு வசதி	1·29	4·80	7·00
பின்தங்கிய வகுப்பினர் நலன்	4·52	4·59	5·38 (—) 2·12*
சமூக நலன்		0·18	0·52
தொழிலாளர் நலன்		0·48	1·33
மற்ற இனங்கள்		1·01	0·59
மொத்தம்	80·38	186·18	290·89

* மத்திய அரசாங்கத் துறையில் செலவிடப்படும் தொகை.

நம் நாட்டில் பெரும்பாலோர் ஈடுபட்டிருக்கும் வேளாண்மைக்காக உற்பத்திக்கும் சிறு பாசனத்திற்கும் இரண்டாவது திட்டத்தில் ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது மூன்றுவது திட்டத்தில் ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு பாசனக் குளங்களையும் ஏரிகளையும் புதுப்பிப்பதற்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 4·4 கோடி செலவாகியிருக்க, இப்போது அதற்கு ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை மட்டும் அல்லாமல், தூர்வாரிச் செப்பஞ் செய்யும் வேலைத் திட்டம் ரூ. 80 லட்சம் செலவில் தொடர்ந்து நடத்தப்படும். கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 1 கோடி அளவிற்குக் கடன் தொகைகளும், உதவித் தொகைகளும் வழங்கப்படும். சுமார் 7,200 மின்சார மோட்டார் பம்பு செட்டுகளும் 1,240 ஆயில் என்ஜின் பம்பு செட்டுகளும் வாடகைக் கிரய அடிப்படையில் வழங்கப்படும். இதற்குச் சுமார் ரூ. 1 கோடி செலவாகும். வாடகைக் கிரய அடிப்படையில் 250 யந்திரக் கலப்பைகள் விநியோகிக்கப்படும். மேலும் 2,000 துளைக் கிணறுகளுக்காக

ரூ. 50 லட்சம், 150 குழாய்க் கிணறுகள், 500 ஊற்றுக் கிணறுகள் ஆகியவற்றிற்காக ரூ. 94 லட்சம், 3,000 வடிமுனைக் கிணறுகளுக்காக ரூ. 50 லட்சம் செலவிடப்படும். அரசாங்க விதைப் பண்ணைகள் புதிதாக 76 நிறுவ ரூ. 100 லட்சம் செலவாகும். தனிப்பட்ட சாகுபடியாளர்க்கு வாடகைக்கு விடுவதற்காக 25 கனரக டிராக்டர்கள் வாங்க ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கிருமி, பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் வழங்க ரூ. 100 லட்சமும், சிறந்த வேளாண்மைக் கருவிகளை வழங்க ரூ. 20 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. வாணிகப் பயிர்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்குரிய பல்வேறு திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 192 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாசனத்துக்கு ரூ. 27 கோடி

பாசனத்துக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 17 கோடி செலவிடப்பட்டது. மூன்ருவது திட்டத்தில் இதற்கென ரூ. 27 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வகை செய்துள்ள ரூ. 21 கோடியும் இதில் சேர்ந்ததாகும். ரூ. 48 லட்சம் செலவில் பாலாறு கால்வாய்த் திட்டம், ரூ. 55 லட்சம் செலவில் சாத்தனூர் (இரண்டாம் நிலை) திட்டம் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளால், உணவு உற்பத்தி 53 லட்சம் டன்களிலிருந்து திட்ட முடிவில் 70 லட்சம் டன்களாக உயரும் என எதிர்பார்க்கலாம். கரும்பு (வெல்லம்) 40 லட்சம் டன்னிலிருந்து 50 லட்சம் டன்னுகவும், எண்ணெய் வித்துக்கள் 10·50 லட்சம் டன்னிலிருந்து 13·40 லட்சம் டன்னுகவும், பருத்தி 4·20 லட்சம் பேல்களிலிருந்து 5·20 லட்சம் பேல்களாகவும், தேங்காய் 4150 லட்சம் காய்களிலிருந்து 5160 லட்சம் காய்களாகவும் உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கால்நடை நலம்

கால்நடை வளர்ப்புக்கென மூன்ருவது திட்டத்தில் ரூ. 352 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கேந்திர கிராம நிலையங்களுக்கான ரூ. 75 லட்சமும், கோழி வளர்ப்புக்கான ரூ. 52 லட்சமும் இதில் அடங்கும்.

பால் பண்ணையும், பால் வழங்கலும் என்பதன்கீழ் மூன்ருவது திட்டத்தில் ரூ. 275 லட்சம் செலவாகும். இத்தொகையிலிருந்து சென்னை பால் பண்ணைத் திட்டத்திற்காக ரூ. 100 லட்சமும், திருச்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் பால் பதப்படுத்தும் இயந்திரங்கள் அமைக்க ரூ. 53 லட்சமும் செலவிடப்படும்.

மதுரையில் ஏற்படுத்தப்படும் இயந்திரத்திற்காக ஐக்கிய நாட்டு சர்வதேச குழந்தைகள் நிதியிலிருந்து உதவி கிடைக்கக்கூடும். ரூ. 15 லட்சம் செலவில் வெண்ணெய், பால் பவுடர் தொழிற்சாலையும், ரூ. 6 லட்சம் செலவில் கால்நடைத் தீனி தயாரிப்பு நிலையமும் அமைக்கப்படும்.

மீன் வளத்திற்காக இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 79 லட்சம் செலவாயிற்று. இப்போது மூன்ருவது திட்டத்தில் இதற்காக மொத்தம் ரூ. 2·22 கோடி செலவிடப்படும். அத்தொகையில் படகுகள் வழங்க ரூ. 63 லட்சமும், நைலான் வலைகள் போன்றவை வாங்க ரூ. 20 லட்சமும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுக்க ரூ. 30 லட்சமும், மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவும், மீன்களைக் கரைசேர்க்கும் வசதிகளைச் செய்து தரவும் ரூ. 35 லட்சமும் செலவிடப்படும்.

ரப்பர் தோட்டம்

மூன்ருவது திட்டத்தில் வன வளத்திற்காக ரூ. 2·12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 2·62 லட்சம் ஏக்கரில் கிராமக்காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்கு ரூ. 75 லட்சம் செலவாகும். ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள் ஆகியவற்றின் கரைகளில் மரங்கள் நட ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 2000 ஏக்கர் பரப்பில் ரப்பர் தோட்டம் வைக்கப்படும். மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக ரூ. 250 லட்சம் செலவிடப்படும். குந்தா பள்ளத்தாக்கு மண்வளப் பாதுகாப்பு, சிறப்புத் திட்டத்திற்கு ஆகும் செலவுக்காக ரூ. 25 லட்சம் செலவுத் தொகையை மத்திய அரசாங்கம் ஏற்கும்.

சமுதாய நல வளர்ச்சித் திட்டத்திற்கு மூன்ருவது திட்டத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1962-63க்குள் மாநிலம் முழுவதற்கும் சமுதாய நலவளர்ச்சி வேலை விஸ்தரிக்கப்படும்.

மூன்ருவது திட்டக்கால அளவில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் குறுகியகால, நடுத்தரக் காலக் கடன்களாக ரூ. 47 கோடியும், நீண்டகாலக் கடன்களாக ரூ. 3 கோடியும் வழங்கும். கூட்டுறவு என்பதன்கீழ் பல்வேறு திட்டங்களுக்காக ரூ. 471 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில், நான்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான ரூ. 110 லட்சமும், 1030 கிடங்குகளைக் கட்டுவதற்கான ரூ. 100 லட்சமும் அடங்கும்.

கூட்டுறவு ஆலைகள்

இரண்டாவது திட்டக் காலத்தில் திருநெல்வேலி மாவட்டம் பேட்டை, நாசரத் ஆகிய இடங்களிலும், இராமநாதபுரம் மாவட்

டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும், சேலம் மாவட்டம் அம்மாபேட்டையிலும் ஆக நான்கு இடங்களில் கூட்டுறவு நூற்பு ஆலேகள் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டது. பேட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகியவைகளில் ஆலேகள் ஏற்படுத்தப்பட்டு உற்பத்தி தொடங்கி விட்டன. நாசரத்தில் கூட்டுறவு நூற்பு ஆலே விரைவில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேலம் கூட்டுறவு நூற்பு ஆலே இன்னும் உருவாகும் கட்டத்தில் உள்ளது. மூன்ருவது திட்டக் காலத்தில் தமிழ் நாட்டில் மேலும் நான்கு கூட்டுறவு நூற்பு ஆலேகளே ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு நூற்பாலேகளின் பங்கு மூலதனத்தில் அரசாங்கம் ரூ. 39 லட்சம் முதலீடு செய்துள்ளது. மூன்ருவது திட்டக் காலத்தில் இதற்கென ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு நியாய விலேயில் நூல் கிடைக்கச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

அணு மின்சார உற்பத்தி

மின்சார அபிவிருத்திக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 79 கோடி செலவிடப்பட்டது. மூன்ரும் திட்டத்தில் மின்சாரப் பெருக்கத்திற்கு ரூ. 100 கோடி செலவிடப்படும். நெய்வேலியில் மத்திய அரசாங்கத்திட்டத்தின்கீழ் அனல் மின்சாரநிலேய விஸ்தரிப்பு வேலே ரூ. 15 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். இரண்டாம் திட்ட முடிவில் தமிழ்நாடு மின்சார இணைப்பில் உற்பத்தி 5·71 லட்சம் கிலோ வாட்டாகும். மூன்ரும் திட்ட முடிவில் 10·46 லட்சம் கிலோ வாட்டாக இது உயரும். ஆனுலும்கூட, மின்சாரத் தேவை இந்த உற்பத்தித் திறனுக்கும் மேல் போகக் கூடுமாதலால், மாநிலத்தில் அணுமின்சார நிலேயம் அமைப்பு சம்மந்தமான ஆய்வு வேலேகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சார விநியோக வேலேத் திட்டங்களுக்காக ரூ. 60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு மின்சார வசதியும் இதில் அடங்கும். 7300 கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிப்பதென்ற லட்சிய அளவை அடைவது கடினமாக இருக்காது என்று கருதப்படுகிறது. கிராம மின்சாரத் திட்டங்களுக்காகத் தனிப்பட்ட லேசென்சுதாரர்களுக்குக் கடன் கொடுப்பதற்கென ரூ. 200 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக மூன்ருவது திட்டத்தில் ரூ. 11·2 கோடி செலவிடப்படும். தொழிற் கூடங்கள் தொழிற்சாலே யூனிட்டுகள் இவற்றை நிறுவவும், அபிவிருத்தி செய்யப்பட்ட மனேகளே வழங்கவும் ஒதுக்கப்பட்ட ரூ. 320 லட்சம் இத்தொகையில் அடங்கும். கைத்தறிகளுக்காக மொத்தம் ரூ. 800 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தறி கூட்டுறவு சங்கங்களில்

2500 விசைத் தறிகளை நிறுவுவதற்கென மத்திய அரசாங்கத் தொழில் துறையின் கீழும் தொகை ஒதுக்கப்படும்.

சாலைகள் அபிவிருத்திக்காக இரண்டாம் திட்டத்தில் ரூ. 5·33 கோடி செலவிடப்பட்டது. மூன்றும் திட்டத்தில் இந்த வகையில் சுமார் ரூ. 11 கோடி செலவிடப்படும்.

கட்டாயக் கல்வி

கல்வி அபிவிருத்திக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 25 கோடி செலவிடப்படும். கட்டாய ஆரம்பக் கல்வியை அமுலாக்க ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் 6 முதல் 11 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளும் 1965-66-ஆம் ஆண்டுக்குள் பள்ளி செல்வர். மூன்றும் திட்டக்கால முடிவில் 17 லட்சம் குழந்தைகள் மதிய உணவு பெறும்படியாகத் திட்டம் விஸ்தரிக்கப்படும்.

பொறியியற் கல்லூரிகளில் மேற்கொண்டு 610 மாணவர்களைச் சேர்க்கவும், பாலிடெக்னிக்குகளில் மேற்கொண்டு 1060 மாணவர்களைச் சேர்க்கவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்தியத் திட்டத்தின் பாகமாக பிராந்தியப் பொறியியற் கல்லூரி ஒன்று இம்மாநிலத்தில் நிறுவப்படும். தனியார் துறையில் மேலும் ஒரு பொறியியற் கல்லூரி ஏற்படும். புதிதாக ஆறு பாலி டெக்னிக்குகள் தொடங்கப்படும். அவற்றுள் மூன்று பெண்களுக் கானவை. ரூ. 100 லட்சம் செலவில் 20 ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகள் தொடங்கப்படும்.

ஹரிஜன நலனுக்காக 1955-56-ம் ஆண்டுச் செலவு ரூ. 117 லட்சமாக இருந்தது. 1960-61-ல் இது ரூ. 355 லட்சமாக அதிகரித்தது. மூன்றும் திட்டத்தில் ஹரிஜன நலனுக்காக மேற்கொண்டு ரூ. 5·4 கோடி செலவிடப்படும். அதில் மத்திய அரசாங்க பங்கு ரூ. 2·1 கோடியாகும். இத்தொகை மாநிலத் திட்டத்தில் ஒதுக்கிய தொகைக்கு மேற்பட்டுள்ள தொகையாகும். ஹரிஜன நலம் சம்பந்தப்பட்ட எல்லாத் திட்டங்களுக்காகவும் மூன்றுவது திட்டத்தில் ரூ. 20 கோடி செலவிடப்படும்.

வீட்டு வசதிகள்

வீட்டு வசதி, நகர அபிவிருத்தி திட்டங்களுக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 4 கோடி மத்தியத் திட்டத்தின் பங்காக இருக்கும்.

சுகாதார அபிவிருத்திக்காக மூன்றும் திட்டத்தில் ரூ. 21·5 கோடி செலவிடப்படும். நகர தண்ணீர் வசதித் திட்டங்களுக்காக ரூ. $7\frac{1}{2}$ கோடியும், கிராமங்களில் தண்ணீர் வசதித் திட்டங்களுக்காக ரூ. $1\frac{1}{2}$ கோடியும் இதில் அடங்கும்.

மூன்ருவது திட்டக் காலத்தில் புதிய மருத்துவக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்படும். ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரிகள் அபிவிருத்திக்காகவும், மருத்துவப் பயிற்சி வசதிகள் அதிகரிக்கவும் ரூ. 456 லட்சம் செலவிடப்படும். குடும்பக் கட்டுப்பாடுத் திட்டங்களுக்காக ரூ. 161 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டத்தில் அந்த வகையில் ரூ. 64 லட்சம் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. பாக்கியுள்ள ரூ. 97 லட்சத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

இவ்விதமாக, வளமான எதிர்காலத்தை நோக்கி மேலும் ஒருபடி முன்னேறும் முயற்சியாக மூன்ருவது திட்டம் விளங்குகிறது.